தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்
வருடாந்த அறிக்கை 2016

# செயல்விளைவு

அனைவருக்கும் பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்துதல்

# செயல்விளைவு

**அனைவருக்கும் பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்துதல்**

பொதுக் காப்புறுதித் துறையில் அனைவருக்கும் தனிப்பட்ட அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF), அதன் ஆரம்ப காலம் தொட்டே அயராது ஈடுபாட்டுடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மீள் காப்புறுதி பெற்றுக் கொடுக்கும் இலங்கையின் ஒரேயொரு நிறுவனம் என்ற வகையில், எமது பணி பாரிய அளவிலான விஸ்தரிப்பைக் கொண்டது. ஏனைய காப்புறுதி நிறுவனங்களுக்கு வழங்கி வரும் எமது அதிகரித்த கொள்ளளவு, எம்மை உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தையின் முதுகெலும்பாகத் திகழச் செய்துள்ளது. நோய், திடீர் விபத்துக்கள், பாதுகாவலரின் இறப்பு, சொத்துக்களுக்கு ஏற்படும் எதிர்பாரா இடர்கள், ஊர்வலங்கள், கலவரங்கள், சிவில் நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதம் என்பனவற்றினால் ஏற்படும் பொருள் ரீதியான அல்லது மூலப்பொருள் சேதங்கள் எம்மால் காப்புறுதி செய்யப்படுகின்றன. கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் இலங்கையின் சமூகக் குழுக்களுக்கென நாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், கடினமான நேரங்களிலும் மன அமைதியுடன், நிம்மதி பெறும் வாய்ப்பு என்பன இதன் விளைவாகும். அனைவருக்கும் நன்மை கிடைப்பது எமது பிரதான நோக்கமாகும். சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நாட்டை மேம்படச் செய்து, எமது உற்பத்திக் கோவைகளின் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய செலவு குறைந்த மற்றும் செயற்திறன்மிக்க சேவைகளை தனித்தனியாக அமைத்து அனைவருக்கும் சக்திமிக்க எதிர்காலத்தை உருவாக்குவதை நாம் பெரும் கௌரவமாகக் கருதுகின்றோம்.

# இந்த அறிக்கையின் உள்ளே

## 03 - 45

எமது நோக்கு, எமது செயற்பணி, கூட்டிணைவுப் பெறுமதிகள் 03
நிதித்துறை முக்கிய விடயங்கள் 04
சுருக்கமான வரலாறு 06
கூட்டிணைப்பு இலக்குகள் 07
தலைவரின் செய்தி 09
பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு 13
சபையின் பணிப்பாளர்கள் 17
சபை பணிப்பாளர்கள் பற்றிய தகவல் 18
கூட்டிணைந்த, சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 19
முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும் 22
குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் 32
நிலையான தன்மை பற்றிய அறிக்கை 35
கூட்டிணைப்பு ஆளுகை 36
நிறுவன இடர் முகாமைத்துவம் 40
பணிப்பாளர்களின் அறிக்கை 43
கணக்காய்வுக் குழு அறிக்கை 45

## 47 - 101

### நிதி அறிக்கைகள்

IBNR மற்றும் LAT தெளிவுரை 47
சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 48
நிதி நிலைமை பற்றிய அறிக்கை 73
விரிவான வருமான அறிக்கை 74
உரிமைப் பங்கு மாற்றக் கூற்று 75
காசுப் பாய்ச்சல் அறிக்கை 76
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் 77
பதினொரு வருடகால தொகுப்பு 100
கூட்டு நிறுவனத் தகவல்கள் பின் அட்டையின் உள் பக்கம்

# எமது நோக்கு

## தேவையுடைய சகல துறைகளுக்கும் பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குதல்

# எமது இலக்கு

பின்வரும் நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்குதல்.

- சமூகத்திலுள்ள அனைத்துத் தேவையுடைய துறைகளுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய, வினைத்திறன் வாய்ந்த மற்றும் முன்னேற்றகரமான காப்புறுதிச் செயற்றிட்டங்களை வழங்குதல்.
- ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் ஏனைய ஏற்பாடுகளினூடாக மாறிவரும் தேவைகளிலிருந்து எழுகின்ற உயர்ந்தளவிலான இடர்களை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டு சந்தைகளுக்கான தீர்வுகளை வழங்குதல்.
- உள்நாட்டு காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக சக்தியினை வழங்கும் நோக்குடன் இலங்கையில் மீள் காப்புறுதி சந்தையினை உருவாக்குதல்.

# கூட்டிணைப்புப் பெறுமானம்



# நிதித்துறை முக்கிய விடயங்கள்

| சுட்டி | 2016 | 2015 | வளர்ச்சி |
|---|---|---|---|
| எழுதப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் (ரூபா மில்.) | 6,814 | 5,063 | 35% |
| அக்ரஹார கட்டுப்பண பங்களிப்பு (ரூபா மில்.) | 2,004 | 1,637 | 22% |
| பயிர் மூல வரி (ரூபா மில்.) | 1,511 | 1,259 | 20% |
| சம்பாதித்த நிகர கட்டுப்பணம் (ரூபா மில்.) | 8,851 | 7,931 | 12% |
| முதலீட்டு வருமானம் (ரூபா மில்.) | 967 | 802 | 21% |
| நிகர நன்மைகள் மற்றும் கோரிக்கைகள் (ரூபா மில்.) | 5,543 | 3,226 | 72% |
| வரிக்கு முந்திய இலாபம் (ரூபா மில்.) | 2,840 | 4,391 | -35% |
| முதலீட்டு நிதியம் (ரூபா மில்.) | 11,188 | 10,389 | 8% |
| ஒருங்கிணைந்த நிதிக்கான பங்களிப்பு (ரூபா மில்.) | 3,200 | 3,000 | 7% |

மொத்த வருமானம் (ரூபா மில்.)




மொத்த சொத்துக்கள் (ரூபா மில்.)




மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (ரூபா மில்.)




நிகர சம்பாதித்த கட்டுப்பணம் (ரூபா மில்.)




வரிக்கு முந்திய இலாபம் (ரூபா மில்.)




வரிக்குப் பிந்திய இலாபம் (ரூபா மில்.)



மொத்த சொத்துக்கள்

ரூபா **20** பில்.

மூலதன தளம்பல் வீதம்

**586** %

திரும்பிய சொத்துக்கள்

**14** %

வரிக்கு முந்திய இலாபம்

ரூபா **2.8** பில்.

பிற்ச் மதிப்பீடு

**AA-** (ரூபா)

ஒருங்கிணைந்த நிதிக்கு பங்களிப்பு

ரூபா **3.2** பில்.

# சுருக்கமான வரலாறு

## 2006

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF) 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. எதிர்பார்த்திராத சுகாதார இடர்கள், தனிநபர் விபத்துக்கள், சொத்துக்களுக்கான சேதங்கள் என்பனவற்றிற்கான நன்மைகள் மற்றும் பாதுகாப்புக்கள் என்பனவற்றை NITF இன் நிர்வாகத்தின் கீழ் செயற்படும் பங்களிப்பு காப்புறுதித் திட்டங்களின் ஊடாக வழங்கப்படுவதே இதன் நோக்கமாகும்.

## 2007

வேலை நிறுத்தம், கலகம், பொது மக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத நடவடிக்கைகள் (SRCC & T) நிதியமும் NITF இல் இணைத்துக் கொள்ளப்பட்டது.

## 2007

20% கட்டாய மீள் காப்புறுதித் திட்டத்துடன் NITF மீள் காப்புறுதி நடவடிக்கையை ஆரம்பித்தது.

## 2009

வெளிநாட்டு வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டம் என்ற “விதேச ரக்கியா” NITF னால் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

## 2009

பொதுக் காப்புறுதியினுள் NITF விஸ்தரிக்கப்பட்டது.

## 2013

2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பிரேரணைக்கு அமைய பயிர்க் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## 2016

தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டத்தை (NNDIS) ஸ்தாபிப்பதன் மூலம் NITF அதன் நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டது.

## 2016

தங்க மற்றும் வெள்ளி அங்கத்தவர் விருப்ப அங்கத்துவத்தை அறிமுகம் செய்ததன் மூலம் அக்ரஹார திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

# கூட்டிணைப்பு இலக்குகள்

- நிறுவனத்தின் சட்ட ரீதியான அமைப்புக்களைப் பலப்படுத்துவதன் மூலம், ஐந்து வருட காலத்தினுள் சர்வதேச மீள் காப்புறுதி வழங்கல் நிறுவனமாக வருவதன் அடிப்படையில். சர்வதேச மீள் காப்புறுதி சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக வருதல்.

- 2017 ஆம் ஆண்டளவில், இலங்கையில் மிகவும் விரும்பப்படும் மீள் காப்புறுதி நிறுவனமாகவும், 2020 ஆம் ஆண்டளவில் ஆசிய பிராந்தியத்தில் தலைமை மீள் காப்புறுதி ஸ்தாபனமாகவும் வருதல்.

- சமூகத்தில் பலவீனமான குழுவினர் / காப்புறுதித் தேவை கொண்டுள்ளவர்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும், மக்களின் காப்புறுதித் தீர்வுகளை வர்த்தகத்துறை சார்ந்த பொதுக் காப்புறுதியாளர் வழங்காத தருணங்களில், காப்புறுதியை வழங்குவதற்கு முக்கியத்துவம் அளித்தலும்.

- அரச துறையிலும், காப்புறுதி தேவைப்படும் எனைய குழுவினர் மத்தியிலும், மிகத் திறமையான, ஆக்கபூர்வமான சுகாதாரக் காப்புறுதி வழங்கல் நிறுவனமாகவும், காப்புறுதிக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கும் அமைப்பாகவும் வருதல்.

- இலங்கையில் காப்புறுதி தகவல் கேந்திர நிலையமாகவும், ஸ்தாபக காப்புறுதி தகவல் மத்திய நிலையமாகவும் NITF ஐ அமைத்துக் கொள்ளல்.

- 2020 ஆம் ஆண்டளவில் ரூபா 50 பில்லியன் பெறுமதி வாய்ந்த சர்வதேச மட்டத்திலான காப்புறுதியாளராகவும், நேரடி காப்புறுதிப் பதிவாளராகவும் வருதல்.

- சகல அரச நிறுவனங்களினாலும், மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படும் காப்புறுதி நிறுவனமாக வருதல்.

- இலங்கையில் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டுள்ள உயர் தொழில் நிபுணர்கள் கடமையாற்றுவதற்கு பெரிதும் விரும்பும் நிறுவனமாக வருதல்.

- காலக்கிரமத்தில் சொந்த மூலதனத்துடன் நிலைபேறான தன்மையைக் கொண்டுள்ள உண்மையான கூட்டிணைப்பு அமைப்பாக நம்பிக்கை நிதிய சபை அமைப்பை மாற்றுதல்.

- சுற்றாடல் பாதுகாப்புக்கு அர்ப்பணித்துப் பணிபுரியும் பசுமை நிறுவனமாக வருவதற்குரிய சமூகப் பொறுப்புணர்வைக் கொண்டிருத்தல்.

# எதிர்செயலாற்று

**நட்டஈடு வழங்குதல், நட்டஈடுகளை உருவாக்குதல் மற்றும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல் ஆகிய துறைகளில் எமது செயற்பாடுகள் தொடர்பில் நாம் மிகவும் பெருமையடைகின்றோம். மிகக் கடினமான மற்றும் எதிர்பாராத கஷ்டமான நேரங்களில் நாம் அவர்களுக்கு மன அமைதியையும், நிம்மதியையும் பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்பட்டமை அவர்களின் வாழ்க்கையை சாதகமாக அமைத்துக் கொள்ள பெரும் துணையாக அமைந்திருந்தது.**

# தலைவரின் செய்தி



**"ஒரு தசாப்தகால நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF), இக்காலப் பகுதியில், சிறந்த பாதுகாப்பை எதிர்பார்க்கும் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பு வலையாக இருந்து, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்"**

# தலைவரின் செய்தி

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் (NITF) 2016 டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் என்பனவற்றை எமது பெறுமானம் மற்றும் ஆர்வம் காட்டுவோரிடம் சமர்ப்பிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது நிறுவனம், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் தனது செயற்பாடுகளில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. அது, மீள் காப்புறுதி மற்றும் சமூகத்தின் ஊடான காப்புறுதி என்பனவற்றில் நடவடிக்கை மேற்கொண்டது. NITF பல்வேறு சவால்களுக்கு மத்தியில், அவற்றை எதிர்நோக்கி, தொடர்ந்தும் சக்தியுடனும், விரிவாற்றலுடனும், கடின செயற்பாடுகளுடனும், புதிய அறிமுகங்களுடனும், வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தினதும், சமூகத்தின் அதிகரித்து வரும் கேள்விகளுக்கும் ஏற்ற வகையில் செயற்பட்டு வந்துள்ளது.

### சவால்கள் நிறைந்த செயற்படு சூழல்

ஆய்வுக்குட்பட்ட வருடமானது, உள்நாட்டுப் பொருளாதாரத்தில், இலங்கை பிரசைகளுக்குக் கடுமையான சவால்களை ஏற்படுத்திய ஒரு ஆண்டாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருந்தன. இதன் காரணமாக, பலர் வீடுகளையும், சொத்துக்களையும் இழந்துள்ளதோடு, உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இடம்பெயர்ந்து வாழும் நிலையும் ஏற்பட்டது. இவற்றின் காரணமாக, நாடும், பொருளாதாரமும் குறைந்த வளர்ச்சி கொண்ட மொத்த பொருளாதார நிலைக்குத் தள்ளப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் 4.8% ஆகக் காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி (GDP), 4.4% வரை குறைவடைந்தது. முக்கிய பொருளாதார சுட்டிகளின் குறைந்த வளர்ச்சியும், கடுமையான நிதி நடவடிக்கைகளும், நிதிக் கொள்கைகளும் பணவீக்கக் கட்டுப்பாட்டு முயற்சிகளும், கடன் வழங்குதலைக் குறைக்கும் நடவடிக்கைகளும் இதற்கு பிரதான காரணமாகும். இவற்றுடன் இணைந்து, காலநிலை மாற்றங்களினாலும், வரிகளில் ஏற்பட்ட தாக்கங்களினாலும், சர்வதேச மட்டத்திலான பொருட்களின் விலை உயர்வுகள் காரணமாகவும் பிரதான பணவீக்கச் சுட்டி மெதுவாக அதிகரித்து வருடாந்த சராசரி 4% ஆகக் காணப்பட்டது.

உண்மையான பொருளாதாரத்தை நோக்குகையில், நாட்டின் கடுமையான கால நிலை காரணமாக, விவசாயத்துறை நேரடியாகப் பாதிக்கப்பட்டது. இது, 2016 ஆம் ஆண்டில் 4.2% பின்னடைவை எதிர்நோக்கியிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது, 4.8% பின்னடைவுக்கு எதிராக அமைந்திருந்தது. இலங்கையின் தென் மேற்குப் பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப் பெருக்கு, மத்திய மற்றும் வட பகுதியில் ஏற்பட்ட கடுமையான வறட்சி என்பன இந்தப் பாதகமான பெறுபேறுகளுக்கு முக்கிய காரணமாகும்.

மொத்த பொருளாதாரம் மற்றும் காலநிலை மாற்றங்களினால் சேவைத்துறையும் இதேபோன்றதொரு பாதகமான நிலையை அடைந்தன. கடந்த வருடத்தின் 5.7% வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டில் 4.2% குறைந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியது. சேவைத் துறையின் வளர்ச்சியை நோக்குகையில், நிதித்துறை நடவடிக்கைகளின் வளர்ச்சி, போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி என்பனவற்றோடு சில்லறை வர்த்தகம், தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் தொழில் வல்லுநர் சேவைகள் ஆகியன குறித்த காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க பின்னடைவை எதிர்நோக்கின.

எனினும், நாட்டின் கைத்தொழிற்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது, 2.1% ஆகும். 2016 ஆம் ஆண்டின் ஒப்பீடுகளின் போது 6.7% ஆகக் காணப்பட்டது. பல்வேறு முன்னணி உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டமையும், மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டமையும் இதற்கு பிரதானமான காரணமாகும்.

### தொழிற்துறையின் செயல்திறன் பெறுபேறுகள்

பல்வேறு சவால்கள் காணப்படினும், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் இருந்துவந்த குறைவான செலவிடும் தன்மையையும் கருத்திற் கொள்ளாது பல்வேறு வர்த்தக மற்றும் தனிப்பட்ட சொத்துக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதனால் காப்புறுதி நட்டஈடுகள் எதிர்பாராத வகையில் அதிகரித்தன. எவ்வாறாயினும், உள்நாட்டு காப்புறுதித்துறை ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தன. மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (GWP) ரூபா 143 பில்லியனாக அதிகரித்துள்ளதோடு, வருடாந்த ஒப்பீட்டின் போது அது 16.3% வளர்ச்சியை வெளிப்படுத்தியது.

அதேபோல், தொழிற்துறை சொத்துக்களின் பெறுமதியிலும் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வருடாந்த ஒப்பீட்டில் அது 13% வளர்ச்சியை வெளிப்படுத்தி, மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 527 பில்லியனாகக் காணப்பட்டது. தொழிற்துறை கடுமையான மீளமைவை எதிர்நோக்கியதோடு, இடரை மையமாகக்கொண்ட மூலதனம் (RBC) செயல்முறை நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர்களை கட்டுப்படுத்தியதோடு, தொழிற்துறையில் சிறந்த முகாமைத்தவத்தை ஏற்படுத்தி உயர் தரத்திற்கு அதனை இட்டுச் சென்றுள்ளது. இவற்றின் மூலம் எதிர்காலத்தில் தொழிற்துறையில் சிறந்த நிலையான தன்மை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுன்றது.

### நிலையான தன்மை மற்றும் சமூகப் பெறுமதிகள் சமநிலைப்படுத்தப்பட்ட இலாபம்

NITF தனது முதலாவது தசாப்தத்தைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில், நாட்டின் சகல துறைகளுக்கும் சிறந்த பாதுகாப்பை பெற்றுக்கொடுத்து, ஒரு பாதுகாப்பு வலையாகச் செயற்பட்டு, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த முறையில் பங்காற்றியுள்ளது என்பதை பெருமையுடன் அறியத் தருகிறது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் NITF சிறந்த வளர்ச்சியை அடைந்துள்ளது. முழுமையான மீள் காப்புறுதி சேவைகளுக்கு மேலதிகமாக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், சிவில் நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாத நிதியம் (SRCC & T) ஆகியவற்றை எமது நிறுவனம் முகாமைத்துவப்படுத்தி வருகிறது. அரச

## “தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF) உருவாக்கப்பட்டு 10 வருடங்கள் கழிந்துள்ள இந்த வேளையில், தமது நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து வருகிறது. இது, இலங்கையின் சகல மட்டங்களுக்கும் தேவையான பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் பணியாற்றுகிறது. விஸ்தரிப்புக்களை மேலும் துரிதப்படுத்தி, உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தி, புதிய பங்காளித்துவங்களை தொடர்ந்தும் உருவாக்கி, நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவமளித்து, பயனாளிகளின் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது”

துறை சேவையாளர்களின் குடும்பத்தினர், பிள்ளைகள், பெற்றோர் போன்றவர்களுக்கு அக்ரஹார மருத்துவ மற்றும் சுகாதாரக் காப்புறுதிகள் மூலம் சிறந்த, தரமான காப்புறுதிகளை மேலும் விஸ்தரித்துக் கொடுத்துள்ளது. இந்தக் காப்புறுதித் திட்டமானது, நன்மை பெறுவோரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை 825,000 அரச பணியாளர்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றோர்களையும் இதில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் NITF, அதன் இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொண்டுள்ளது. சிறந்த இலாபகரமான தன்மையைப் பேணியுள்ள அதேவேளை, பெறுமதிமிக்க சேவைகளான செலவு குறைந்த செயற்திறன்மிக்க முன்னேற்றகரமான சேவைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்து இலங்கையின் அரச மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகத்திற்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளது. நாட்டின் மீள் காப்புறுதிச் சந்தையில் எல்லைகளை விஸ்தரித்து, உள்நாட்டு மேலதிக காப்புறுதித் தேவைப்பாட்டிற்கு உதவியுள்ளது.
இந்த வகையில், NITF 2016 ஆம் ஆண்டின் GWT யினை ரூபா 5.1 பில்லியனில் இருந்து ரூபா 6.8 பில்லியன் வரை அதிகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும், அக்ரஹார திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற பங்களிப்பு ரூபா 1.6 பில்லியனில் இருந்து ரூபா 2 பில்லியன் வரையும் அறுவடை காப்புறுதிகளிலிருந்து பெற்ற தொகை ரூபா 1.3 பில்லியனில் இருந்து ரூபா 1.5 பில்லியன் வரையும் அதிரித்துள்ளது. மீள் காப்புறுதிக் கொடுப்பனவு வருமானம் வருடாந்த ஒப்பீட்டின் போது 35.6% அதிகரிப்பைக் காண்பித்துள்ளது. பல்வேறு வித்தியாசமான உப பொது மீள் காப்புறுதி வர்த்தகத் துறைகளை இணைத்துக் கொண்டமையினால் பொதுக் காப்புறுதிச் சந்தையில் இந்த வளர்ச்சி ரூபா 3.3 பில்லியனாகக் காணப்பட்டது.

குறிப்பாக, NITF, குறைந்தளவு, ஆனால் மிகவும் துல்லியமான தூய பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை தனதாக்கிக் கொண்டுள்ளது. எனவே, அதன் பங்களிப்பு, நிறுவனத்தின் வருமானத்தில் இரு மடங்காகும். குறித்த ஆண்டில் ரூபா 279 மில்லியனில் இருந்து ரூபா 565 மில்லியன் வரை அதிகரித்தது. அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொதுக் காப்புறுதி வர்த்தகத்தின் பங்களிப்பு இதற்குப் பிரதான காரணமாகும்.

NITF, நாட்டின் மிக முக்கியமான, காலத்திற்கு ஏற்ற தேவைப்பாடான தேசிய இயற்கை இடர்கள் காப்புறுதித் திட்டத்தை (NNDIS) ஆரம்பித்தது. 2016 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு முன் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகள் திறைசேரியின் ஒன்று திரட்டிய நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. ஆனால், இந்தக் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஒவ்வொரு வீட்டிற்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் சிறிய மற்றும் நுண் வர்த்தக நிறுவனங்களுக்கும் சுமார் 10 பில்லியன் ரூபா வரை காப்பீடு வழங்கப்படுகிறது. இந்தக் காப்புறுதித் திட்டமானது, அரசினால் கொள்வனவு செய்யப்பட்டதோடு, NITF இதனால் தேசத்திற்கே ஒரு காப்புறுதியாளராக செயற்படுகிறது. இதன் மீள் காப்புறுதி, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட குழு ஒன்றினால் முன்னெடுக்கப்படும் அலியான்ஸ் SE, மியூனிச் Re மற்றும் லொயிட்ஸ் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், NITF 20% இணை மீள் காப்புறுதி ஒன்றை ரூபா 500 மில்லியன் என்ற குறைந்த விலையில் பெற்றுக்கொண்டது.

காலத்திற்கேற்ற சிறந்த நடைமுறையாக திட்டத்தின் அமுலாக்கம் அமைந்திருந்தது. அதன் நன்மைகள் உடனடியாகத் தெரிய வர ஆரம்பித்தன. 2016 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது இழப்பீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். எனவே, காப்புறுதி இழப்பீட்டுக் கோரல்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தாலும், குறித்த ஆண்டில் இந்தத் திட்டத்தின் செயற்பாடுகள் மூலம் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் குறிப்பிடத்தக்க நன்மை கிடைத்துள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகள் NNDIS மூலம் துரிதமாகவும், சரியான முறையிலும் வழங்கப்பட்டன. இதன் மூலம், காப்புறுதி பெற்றிராத மக்களுக்கு ரூபா 3.5 பில்லியன் செலுத்தப்பட்டது. காப்புறுதி நட்டஈடுகளை செலுத்துவதற்கு மேலதிகமாக, மேலும் ரூபா

# தலைவரின் செய்தி

3.3 பில்லியன் மீள் காப்புறுதிச் செலவினமாக செலுத்த NITF க்கு நேரிட்டது. 2016 ஆம் ஆண்டிலிருந்தே மீள் காப்புறுதிக்கான 30% கட்டாய வழங்கல் (மீள் காப்புறுதிக்கான செலவினம்) அமுலுக்கு கொண்டுவரப்பட்டது முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

உள்நாட்டுச் சந்தைகளின் கடுமையான சவால்களுக்கு மத்தியில், NNDIS இன் அறிமுகம், இதற்கு முன்னர் காணப்பட்ட நட்டஈட்டுக் கோரல்களைவிட கணிசமான அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதற்கிடையில், வரிக்குப் பிந்திய இலாபத்தை (PAT) ரூபா 2.8 பில்லியனாக அதாவது, கடந்த ஆண்டின் வரிக்குப் பிந்திய இலாபமான ரூபா 4.4 பில்லியனுக்கு எதிராக இவ்வருடம் அடைந்து கொண்டமை முக்கிய நடவடிக்கையாகும்.

### எமது நாட்டிற்கு ஒளிமயமான பாதுகாப்பான எதிர்காலம்

NITF ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்கள் பூர்த்தியாகிய இந்த நிலையில், அதன் செயற்பாடுகளை மேலும் அதிகரித்து, தற்போது நாட்டின் மொத்த காப்புறுதித் துறையினதும் முக்கிய இடத்தில் தன்னை பதிவு செய்துள்ளது. எமது உற்பத்திகளின் தரத்தையும், உள்ளடக்கத்தையும் தொடர்ந்தும் விஸ்தரிப்பதில் நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். நிறுவனத்தின் நிலையான தன்மையை உறுதிப்படுத்த புதிய பங்காளித்துவங்களை உருவாக்கி எமது நன்மை பெறுவோரின் பாதுகாப்பை மேலும் அதிகரித்து வருகின்றோம்.

கட்டுப்பாட்டாளர்களுடன் மிகவும் நெருக்கமான முறையில் செயற்பட்டு வரும் நாம், எமது ஆளுமையை மேலும் வலுப்படுத்தி, இடர் முகாமைத்துவக் கட்டமைப்புக்களை தீவிரப்படுத்தி, தொடர்ச்சியாக ஊழியர்களில் முதலீடுகளை மேற்கொண்டு, மிகச் சிறந்த சேவைத் தரங்களை அடைந்து கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை முன்னேற்றி பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். உள்நாட்டுச் சந்தைகளில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவது தனது முக்கிய பங்கு என்பதை NITF நன்கு விளங்கிக்கொண்டுள்ளது. பாதுகாப்பற்ற பிரிவினருக்கு சமூகத்தில் சிறந்த காப்புறுதியைப் பெற்றுக்கொடுப்பதில் வர்த்தக காப்புறுதி நிறுவனங்கள் சற்று பின்வாங்கும் என்பதை அறிந்து எமது வர்த்தக இலாபகரமான, நீடித்த தன்மையையும் பேணி இந்தத் தேவைப்பாடுகளையும் நாம் அடைந்து கொள்வது என்பது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

இந்த அடிப்படையில் கௌரவ பிரதமர், தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2016 ஆம ஆண்டில் நிறுவனம் அவர்களின் கட்டுப்பாட்டில் செயற்பட்டது. மேலும், எமது ராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களுக்கும், செயலாளர், உதவிச் செயலாளர்கள் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

திறைசேரியின் செயலாளரினாலும், திறைசேரி அதிகாரிகள் மற்றும் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கையின் காப்புறுதிக் கட்டுப்பாட்டு ஆணைக்குழு ஆகியோரினாலும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு நான் நன்றி தெரிவிப்பதோடு, இவற்றின் காரணமாகவே NITF நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் நன்மையான முறையில் செயற்பட முடிந்துள்ளது. இறுதியாக, சபை உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் NITF யின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் உட்பட சகல ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களின் அயராத உழைப்பு மற்றும் ஈடுபாட்டின் மூலம் எதிர்வரும் தசாப்தங்களில் எமது நிறுவனம் மேலும் பல உச்சங்களை அடைந்துகொள்ளும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.



**மஞ்சுள டி சில்வா**
**தலைவர்**

25.01.2019

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



**“ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரகாரம், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி NITF க்கு குறிப்பிட்டதொரு அடையாளமாக அமைந்திருந்தது. தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு - தேசிய முக்கியத்துவம் சம்பந்தப்பட்ட மட்டில், பிரதான அடையாளம் - ஓரளவு அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்குமான அக்ரஹார சுகாதாரக் காப்புறுதித் திட்டம் போன்ற உற்பத்திப் பொருட்களின் விஸ்தரிப்புக்களின் ஊடாக தற்போதுள்ள உற்பத்திப் பொருள் மற்றும் சேவைகளை விஸ்தரிப்பதாகும்”.**

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

## அறிமுகம்

உயர்மட்டப் போட்டிகள் இருந்த போதிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் காப்புறுதித் தொழில் என்பன 2016 ஆம் ஆண்டில் மற்றுமொரு வெற்றிகரமான வளர்ச்சியைக் காண்பித்தன. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் உள்நாட்டுக் காப்புறுதித் தொழில், 12 கலப்புக் காப்புறுதியாளர்களுடன் 29 காப்புறுதி நிறுவனங்களை உள்ளடக்கும் காப்புறுதித் தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் மேலே தெரிவிக்கப்பட்ட 12 கலப்புக் காப்புறுதி அமைப்புக்களின் 9 நிறுவனங்கள் குறிப்பிட்ட ஆண்டில் வெற்றிகரமாகத் தனிமைப்படுத்தப்பட்டதை அடுத்து, எஞ்சிய மூன்று நிறுவனங்கள் தொடர்ந்தும் கலப்புக் காப்புறுதி நிறுவனங்களாக செயற்பட்டன.

நிலைபேறான நடுத்தர வருமானம் கொண்ட நிலைப்பாட்டை நோக்கி அதன் தொடர்ச்சியான முன்னேற்றத்தை இலங்கை கொண்டிருக்கையில், அனர்த்தங்கள் ஏற்படும் போது பெரும்பாலான மக்கள் நம்பகத் தன்மை கொண்டுள்ள தேசிய சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கு முக்கிய பங்களிப்பை எமது கைத்தொழில் துறை நிச்சயமாக வழங்கும். முந்திய காலத்தில் சராசரி மனிதன் நாளாந்த செலவினத்திற்கே முக்கியத்துவம் அளிக்கும் அதேசமயத்தில், தனி நபர் வருமானம் அதிகரிக்கப்படுவதற்கு சமமான வகையில் மிகவும் பிரதானமான அத்தியாவசியப் பொருட்களின் செலவினத்தில் தீவிர யோசனை மேற்கொண்டே ஈடுபடுவது வழமையாக இருந்து வந்துள்ளது. இதன்பலனாக, இலங்கை மக்கள் தத்தமது தேகநலன் மற்றும் சொத்துக்கள் தொடர்பான செலவினங்களை நீண்டகால ஆய்வின் பின்னரே மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

நடவடிக்கைகளில் மாற்றங்கள் - காப்புறுதித் தொழில் சம்பந்தமாக, பலதரப்பட்ட சந்தர்ப்பங்களை வழங்குவதோடல்லாமல், தற்சமயம் இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் அரச மற்றும் தனியார்துறை பங்களிப்பிற்கு ஊக்கமளிக்கும் சட்டரீதியான ஒழுங்கு முறைகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியின் அவசியத்தையும் இவை வலியுறுத்துகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக, நாட்டின் தற்போதைய சனத்தொகை முதிர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. இதன் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டளவில் சனத்தொகையின் 16.7% ஆனோர் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களாக இருப்பார்கள். முதிர்ச்சியடைந்த மக்களின் அடிப்படையில் சுபீட்சம், வாழ்க்கைத்தரம் அபிவிருத்தி மற்றும் சராசரி வயதின் அதிகரிப்பு என்பன ஏற்படுவதோடல்லாமல், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அமைப்பின் மாற்றங்களுக்கும் முக்கிய காரணிகளாக அமைகின்றன.

## தொழில் நிலைமைகள்

சேகரித்த மொத்த கட்டுப்பணத் தொகை (GWP) முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் (YOY) 16.3% ஆல் அதிகரித்துள்ளதை அடுத்து, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வர்த்தகத்தில் ஆக்கபூர்வமான வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. இதன் மொத்தத் தொகை ரூபா 143 பில்லியனாகும். (2015 உடன் ஒப்பிடுகையில் 16.2%.

காப்புறுதிக் கைத்தொழிலின் நீண்டகால அடிப்படையிலான வளர்ச்சி 20.4% லிருந்து 2016 ஆம் ஆண்டில் 18.3% மாகக் குறைவடைந்தது. இதற்கு எதிர்மாறாக, பொதுக் காப்புறுதித் துறையின் நடவடிக்கைகள் 13.2% லிருந்து 2016 இல் 14.7% மாக அதிகரித்தன. 2012 ஆம் ஆண்டின் பின் காப்புறுதித் தொழிலில் ஏற்பட்ட உச்சக்கட்ட வளர்ச்சி இதுவாகும்.

காப்புறுதித் தொழிலில் ஆக்கபூர்வமான வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், மக்கள் மத்தியில் காப்புறுதியின் செல்வாக்கு மட்டம் 2016 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் 1,21% என்ற குறைவடைந்த நிலையிலேயே இருந்தது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், நீண்டகால அடிப்படையிலான காப்புறுதி நடவடிக்கைகளின் செல்வாக்கு 0.54% மாக இருந்த அதேசமயத்தில், பொதுக் காப்புறுதி நடவடிக்கைகள், 0.67% மாக இருந்தன. நாட்டு மக்கள் மத்தியில் காப்புறுதி நடவடிக்கைகளின் விஸ்தரிப்பின் அவசியத்தை இந்த குறைந்த மட்ட புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. சகல மக்களும் நிதி அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் சக்தி வாய்ந்தவர்களாக வர உதவுவதோடு, மொத்தத்தில் தேசிய பொருளாதாரத்திற்கு ஆக்கபூர்வமான நன்மைகளை வழங்குவதில் இது பேருதவியாக இருக்கும்.

காப்புறுதித் தொழிலில், பெரும்பான்மைப் பெறுமதியை ரூபா 345.8 பில்லியன் வரையிலான நீண்டகால தவணை காப்புறுதியாளர்களே கொண்டிருந்த அதேசமயத்தில், நீண்டகால தவணை காப்புறுதி சொத்துக்களின் மதிப்பு 2015 இல் 26.6% லிருந்து, 2016 இல் 10.5% மாக வீழ்ச்சி கண்டது. இதற்கு எதிர்மாறான வகையில் பொதுக் காப்புறுதித் துறையின் சொத்து பெறுமதி 2015 இல் 13% லிருந்து 2016 இல் 16% மாக அதிகரித்தது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நீண்ட தவணை காப்புறுதித் தொழில் ரூபா 63,495 மில்லியனைப் பெற்று திருப்திகரமாகச் செயற்பட்டது. 2016 இல் நீண்ட தவணை காப்புறுதியாளர்களின் பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி 2016 ஆம் ஆண்டில் ரூபா 22,622 மில்லியன் ஆக இருந்தது. 2015 இன் ரூபா 20,934 மில்லியனுடன் ஒப்பிடுகையில், இது 8% ஆல் அதிகரித்து, ரூபா 22,622 ஆக இருந்தது. மொத்த நீண்ட தவணை காப்புறுதிக் கோரிக்கைக் கொடுப்பனவுகளில் முதிர்வு நன்மைகள் ஆகக் கூடுதலான வகையில் ரூபா 12.7 பில்லியனான இருந்தன. வலது குறைந்தவர்கள் நன்மைக்கான கொடுப்பனவுகள் முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 37% னால் அதிகரித்து மொத்தம் ரூபா 591 மில்லியன் ஆக இருந்தது.

இதற்கிடையில், மோட்டார் வாகன காப்புறுதி தொழிலுக்கு முதலிடம் அளித்ததனால் ஏற்பட்ட ஊக்கமளிக்கும் சந்தை நிலைமை மூலம் நன்மை பெற்ற பொதுக் காப்புறுதித் துறை GWP யில் 62% ஐப் பெற்றது. ஆனால், முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 இல் இது 19.1% லிருந்து 15.6% ஆக குறைவடைந்தது.

## எமது செயற்பாடுகள்

ஏற்கனவே குறிப்பிட்டபடி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதப்படும் தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, ஓரளவு அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம் போன்றனவற்றின் விஸ்தரிப்பு மூலம் இந்த சேவைத்துறை போன்றனவற்றின் ஆழ்ந்த விஸ்தரிப்புக்கு மேலதிகமான NITF க்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக இவை கருதப்பட்டன.

எமது தலைவர் விதந்தரைத்த பிரகாரம், இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக சக்தி வளங்கள் தேவைக்குட்பட்ட துறைகளில் நம்பிக்கையான பாதுகாப்பை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் எமது நாட்டின்

**"தற்சயம் ஓய்வூதியம் பெறுவோரையும் உள்ளடக்கும் தங்க மற்றும் அக்ரஹார வெள்ளி அங்கத்துவம் என்பனவற்றிற்கு உட்பட்ட புதிய நன்மை பெறுவோரும் இணைக்கப்பட்டதோடு, இத்தகைய விஸ்தரிப்பின் நடைமுறை, நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள பிரபல சுகாதாரத் திட்டங்களை வழங்குவோருடனான புதிய இணைப்புக்களுடன் வைத்தியசாலைக் கட்டணங்கள், அறுவைச் சிகிச்சைகள் மற்றும் முக்கிய நோய்களுக்கான காப்புறுதி என்பன உட்பட வாடிக்கையாளர்களுக்கு பலதரப்பட்ட நன்மைகளையும் வழங்கவென மீளாய்வுக்கு உட்பட்ட இந்த வருடத்தில் அக்ரஹார திட்டத்தின் நோக்கங்கள் விஸ்தரிக்கப்பட்டன".**

சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பை வழங்கும் அதன் பணிகளை NITF விஸ்தரிப்பதற்கு இடமளித்தன. NITF இன் செயற்பாடுகள் மற்றும் எல்லைகள் என்பதற்கு உட்பட்ட வகையில் இலாபமீட்டும் தன்மை என்பதனையும் மறுபுறத்தில் முன்கூறப்பட்டனவிற்கும், சக்தி வளத்திற்கும் இடையிலானவற்றை சமப்படுத்துவதற்கும் தொடர்ந்தும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

2015 இன் GWP தொகையான ரூபா 5.1 பில்லியனுக்கு பதிலாக அபிவிருத்தியடைந்த GWP யான ரூபா 6.8 பில்லியனை வழங்கிய போதிலும், வரிக்குப் பிந்திய இலாபமாக (PAT) ரூபா 2.8 பில்லியனை நிறுவனம் பதிவு செய்தது. (2015 இல் ரூபா 4.3 பில்லியன்) ஆய்வுக்கட்பட்ட வருடத்திற்கான மொத்த இலாபம் பாரிய வீழ்ச்சியடைவதற்கான முக்கிய காரணிகள் - பெருவெள்ளம், மண் சரிவு, கடுங்காற்று உட்பட பல்வேறு இயற்கை அனர்த்தங்களாகும் என தலைவரும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டம் (NNDIS), உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கையாகும். 10 மில்லியன் ரூபா வருடாந்த மொத்த வருமானத்தைக் கொண்ட வர்த்தக நிலையங்கள், வீடுகள், சிறு கைத்தொழில்களுக்கு இது காப்புறுதியை வழங்கியது. சகல பிரசைகளுக்கும் 100,000 இலட்சம் ரூபாவும், துரதிஷ்டவசமாக உயிரிழக்கும் மீனவர்களுக்கு 10 இலட்சம் ரூபாவும் காப்புறுதியாக வழங்கப்பட்டன.

சொத்துக்கள் சேதமடைந்தமைக்காக ஒரு ஆதனத்திற்கு 2.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இயற்கை அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு அவசர நல்லிணக்க செலவுகளும் வழங்கப்பட்டன. இந்த வகையில் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்கம் காப்புறுதி செய்த மொத்தத் தொகை ரூபா 10 பில்லியன் ஆகும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் தலைமையிலான குழுமத்தின் மேற்பார்வையில் மீள் காப்புறுதித் திட்டம் இடம்பெற்றது, அலியான்ஸ் SE, மியூனிச் Re, லொயிட்ஸ் என்பன குழுமத்தில் இடம்பெற்றன. 20% இனை மீள் மதிப்பீட்டுப் பங்களிப்புடன் NITF உம் இதில் இணைந்து கொண்டது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலத்தில் ஏற்பட்ட கடும் மழையை அடுத்து, உருவெடுத்த பெரு வெள்ளத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். இத்தகைய துக்ககரமான நிகழ்வுகளை அடுத்து, பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 15 பில்லியனுக்கும் அதிகமாகும். மீள் காப்புறுதி வசூலிப்பாக இதில் 30% ஐ NITF ஏற்றுக்கொண்டது. அவசர நிவாரண பூர்வாங்கக் கோரிக்கைகளாக NNDIS இடம் 131 மில்லியன் ரூபா வரை சமர்ப்பிக்கப்பட்டது. சேதமடைந்த வீடுகளை திருத்தவென 64,552 வீடுகளுக்கு, ஒவ்வொன்றும் ரூபா 10,000 வழங்கப்பட்டது. இந்த வகையில் 2016 ஆம் ஆண்டின் முடிவில் விநியோகிக்கப்பட்ட பணம் ரூபா 3.5 பில்லியன் ஆகும்.

இத்தகைய எதிர்பாராத சம்பவங்களின் காரணமாக, NITF க்கு ஏற்பட்ட செலவினம் மிகக் கூடுதலாக இருந்த போதிலும், NITF இனால் NNDIS ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் துரிதமாக மேற்கொள்ள முடிந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் பலமான பாதுகாப்பை, துரிதமாகப் பெற்றுக் கொண்டார்கள். வரவு செலவுத் திட்டத்திலும் இதன் தாக்கம் குறைவாகவே இருந்தது. நிவாரண நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி, துரிதமாக மேற்கொள்ளவென மேலதிக நடவடிக்கைகள் அவசியமாக இருந்தன. இருந்த போதிலும், ஆரம்பத்தில் இருந்தே NNDIS இன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், எமக்கு ஊக்கமளித்தன. இலங்கை மக்களுக்கான சகல நடவடிக்கைளையும் முன்னெடுத்துச் செல்வதில் இந்தத் திட்டம் மீள வடிவமைக்கப்பட்டு, நடைமுறைக்கிடப்பட வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும்.

அதேவேளை, அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் அதன் 20வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. ஆரம்பத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இதனை நடைமுறைப்படுத்திய போதிலும், 2006 ஆம் ஆண்டிலிருந்து NITF இன் நிர்வாகத்தின் கீழ் இது வந்தது. அடுத்த தசாப்த காலத்தில் அடிப்படை அம்சங்களை மாத்திரம் இது பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக பலதரப்பட்ட காப்புறுதித் தேவைகளையும் இது நிறைவேற்றியுள்ளது. இதன்பலனாக, அரச ஊழியர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நம்பகமான தோழனாக

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

இது கருதப்படுவதை மறுக்க முடியாது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் எதிர்பார்ப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டன. தற்சமயம் ஓய்வூதியம் பெறுவோரையும் உள்ளடக்கிய அக்ரஹார வெள்ளி மற்றும் தங்க அங்கத்துவத்துடனான அங்கத்தவர்களையும் உள்ளடக்கும் வகையில் புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. விஸ்தரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த மருத்துவ சுகாதார வசதிகளை வழங்குவோரையும் இணைத்துக் கொள்வதன் மூலம் அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்க முடிந்தது. வைத்தியசாலைக் கட்டணங்கள், சத்திர சிகிச்சை, தீவிர சிகிச்சை செலவினங்கள் என்பனவற்றுக்கு மேலதிகமாக, கண் வைத்தியருக்கான கட்டணங்கள், அதனோடு இணைந்த செலவினங்கள் என்பனவும் பூர்த்தி செய்யப்பட்டன.

### எமது மக்கள்

பல்வேறு வழிகளிலும் NITF சமீப காலத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கை நாட்டின் கல பகுதிகளிலும் கடமையாற்றும் எமது விசுவாசம் மிக்க ஊழியர்களின் அர்ப்பணிப்புடனான சேவையின் பலனாகும். இதன் காரணமாக, அவர்கள் சகல வேளைகளிலும் உச்சக்கட்ட சேவையை வழங்கவென தேவையான ஊக்குவிப்புக்களை நிறுவனம் வழங்கியுள்ளது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் குக்குலேகங்க, லாயா ஹொட்டேலில் வழங்கப்பட்ட வெளிக்கள பயிற்சிக்கு மேலதிகமாக சேவையாளர்களுக்கு பன்முகப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

பன்முக தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களையும் நிறுவனம் மேற்கொண்டிருந்தது. ஸ்தாபனத்திற்குள்ளே உருவாகும் உயர் பதவிகளுக்கு, அதன் சேவையாளர்கள் மத்தியில் இருந்தே தகைமை பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்க உதவும் வகையில் அவர்களை உயர் பதவிகளுக்கு வழிநடத்திச் செல்லும் வகையில் சகலவித பயிற்சிகளும் வழங்கப்பட்டன. உயர் பதவிகளுக்கு, வெளியிலிருந்து ஆட்கள் தெரிவு செய்யப்படுவதை இதன்மூலம் நிறுத்தி நிறுவனத்தின் பொருத்தமான சேவையாளரை உயர் பதவிக்கு நியமிப்பதன் மூலம் அவர்கள் மனதில் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. NITF இல் எதிர்காலத்தில் தங்களுக்கும் ஒரு இடம் உண்டு என்ற நம்பிக்கை அவர்களது மனதில் ஏற்பட்டமை ஒரு வரப்பிரசாதமாகும்.

### நிறைவாக

NITF சம்பந்தப்பட்ட மட்டில், ஆய்வுக்குட்பட்ட இந்த ஆண்டு, முக்கியமானதொரு வருடமாகும். நிறுவனத்தின் எதிர்காலம் தொடர்பான நடவடிக்கைகளில் ஆக்கபூர்வமான, திட்டவட்டமான, அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறுமென எதிர்பார்க்கின்றோம். நீண்டகாலமாக இருந்து வரும் மோசமான காலநிலை மாற்றத்திற்கு மேலதிகமாக, நாட்டில் நிலவும் சமூக, கலாசார போக்குகள் இருந்த போதிலும், நிறுவனம் முற்போக்கு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவது சிறப்பம்சமாகும். இவை அனைத்தின் காரணமாகவும், நாட்டின் தேவையான சகல பிரிவினருக்கும், காப்புறுதியையும், நிதி வசதிகளையும் வழங்குவதில், NITF உம் அதன் அர்ப்பணித்த சேவையாளர்களும் உறுதியான, தன்னலமற்ற கடமைகளைப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பதாக மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். சமூக பாதுகாப்பு வலையமைப்பைப் பாதுகாத்து மேம்படுத்துவதன் மூலம், எமது சமூகத்தினதும் நாட்டின் பொருளாதாரத்தினதும் நிலைமையை மேம்படுத்த முடியும்.

நாட்டு மக்கள் மத்தியில் காப்புறுதி செய்து கொள்ளும் வழக்கம் ஓரளவு குறைவடைந்து காணப்பட்ட போதிலும், விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது காலத்தின் தேவையாகும். காப்புறுதி பற்றி விளங்கிக் கொள்வதையும், அதன் சேவை மூலம் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றி அறிந்துகொள்வதை மேம்படச் செய்வதன் மூலம், நாடு முழுவதிலும் மக்கள் மேலதிகமாக காப்புறுதி செய்து கொள்வார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.
நிறைவாக, NITF இல் தொடர்ந்தும் முழு நம்பிக்கையை வைத்துள்ளமைக்கு எமது வாடிக்கையாளர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த நிறுவனத்தை வர்த்தக அடிப்படையில் வெற்றிகரமாக நடத்திக் கொண்டு, தேசிய சமூக வலையமைப்பை மேம்படுத்தவென, தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வரும் அர்ப்பண சிந்தையுள்ள எமது சேவையாளர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.
நிறைவாக, NITF ஐ சகல துறைகளிலும் சக்திவாய்ந்த நிறுவனமாக முன்னெடுத்துச் செல்வதில் வழிகாட்டல்களையும், ஆலோசனை யுக்திகளையும் தொடர்ந்து வழங்கி ஊக்கமளித்த சிரேஷ்ட முகாமைத்துவத்தினர், எமது தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் ஆகியோருக்கு விசுவாசத்துடன் கூடிய எனது மன நிறைவான நன்றிகள் உரித்தாகுக.



**சனத் சி டி சில்வா**
பிரதம நிறைவேற்று அதிகாரி

25.01.2019

# சபையின் பணிப்பாளர்கள்



01

திரு. மஞ்சுள டி சில்வா
(தலைவர்)



02

திரு. நிவைன் பெர்னான்டோபுள்ளே
(சபை உறுப்பினர்)



03

திரு. அசெந்திர சிறிவர்தன
(சபை உறுப்பினர்)



04

திரு. ரோஹண டி சில்வா
(சபை உறுப்பினர்)



05

திரு. சந்தன குமாரசிங்க
(சபை உறுப்பினர்)



06

திரு. டி.பி.விமலசேன
(சபை உறுப்பினர்)

# சபை பணிப்பாளர்கள் பற்றிய தகவல்

**திரு. மஞ்சுள டி சில்வா**

(தலைவர்)

மஞ்சுள டி சில்வா 06.04.2015ம் திகதி தலைவராக நியமிக்கப்பட்டார். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு தலைவராக நியமிக்கப்பட முன்னர், அவர் HNB அஷூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார். திரு. மஞ்சுள டி சில்வா பொருளியலில் கௌரவ கலைமானி (விசேட) பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றிருப்பதுடன், ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள லண்டன் வியாபாரப் பாடசாலையில் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன், அவர் FCMA (UK) மற்றும் CGMA ஆகிய தகைமைகளையும் கொண்டுள்ளார்.

அவர் அண்மையில் அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 2015ம் ஆண்டுக்கு முன்னர் 9 ஆண்டுகளாக HNB அஷூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும், 2 வருடங்களுக்கு மேலாக பிரதம நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றினார். அத்துடன் இவர் ஈகள் என்டிபி பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடட் நிறுவனத்தில் (தற்போது என்டிபி வெல்த் மனேஜ்மன்ட்) பொது முகாமையாளராகவும், ஈகள் இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிடட் (தற்போது ஏஐஏ இன்ஷூவரன்ஸ்) நிறுவனத்தின் கூட்டிணைந்த வரிசைகள் மற்றும் மனித வளங்களுக்கான பொது முகாமையாளராகவும், அரச தொழில்முயற்சிகள் மீளமைப்பு ஆணைக்குழுவின் (PERC) பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றினார்.

அத்துடன் 2016ம் ஆண்டு இவர் முகாமைத்துவ கணக்காளர்களுக்கான பட்டய நிறுவனத்தின் (CIMA) இலங்கைச் சபையின் தலைவராகவும், அதைத் தொடர்ந்து அதன் MESANA பிரந்தியத்திற்கான பிராந்திய சபையிலும் பணியாற்றினார். அவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் குழு அங்கத்தவராக இருப்பதுடன், காப்புறுதிகள் தொடர்பான முன்னோடி குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

**திரு. ஏ.ஆர்.தேஷப்பிரிய**

(சபை அங்கத்தவர்)

திரு. ஏ.ஆர் தேசப்பிரிய அவர்கள் 08.04.2015ம் ஆண்டு சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணிபுரிகின்றார். அவர் தற்போது செயலாளரின் துணைச் செயலாளராகப் பணியாற்றி வருகின்றார்.

**திரு. கே.டி.எஸ்.ருவன்சந்திர**

(சபை அங்கத்தவர்)

சபை அங்கத்தவர் பதவியிலிருந்து விலகியவரும், 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து சபைக் கூட்டங்களில் சமூகமளித்திருந்தவருமான திரு. ஏ.ஆர்.தேஷப்பிரியவுக்குப் பதிலாக திரு. கே.டி.எஸ்.ருவன்சந்திர நியமிக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டில் தேசிய பாதீட்டு திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக அவர் சேவையாற்றியுள்ளார். தற்சமயம், விவசாய, கிராமியப் பொருளாதார விவகார, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

**திரு. ரோஹன டி சில்வா**

(சபை அங்கத்தவர்)

திரு. ரோஹண டி சில்வா, சபை அங்கத்தவராக 2016.05.05 ஆம் திகதி நியமிக்கப்பட்டதோடு, 2016 மே மாதத்தில் இருந்து சபைக் கூட்டங்களில் சமூகமளித்து வருகின்றார். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக சேவைாற்றியுள்ளார்.

**திரு. டி.பி.விமலசேன**

(சபை அங்கத்தவர்)

திரு. டி.பீ.விமலசேன (தரம் 1, SLAC அதிகாரி) சபை அங்கத்தவராக 2015.12.14 ஆம் திகதி நியமிக்கப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டில் சபைக் கூட்டங்களில் சமூகமளித்துள்ளார். 2016 ஆம் ஆண்டில் நிதியமைச்சின் பிரதம கணக்காளராக சேவையாற்றியுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் B.COM. (விசேடம்) பட்டத்தைக் கொண்டுள்ள திரு. விமலசேன, களனி பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். கணக்கியல் மற்றும் கணக்காய்வியல் என்பனவற்றில் 25 வருடத்திற்கும் அதிகமான அனுபவத்தை இவர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திரு. அசேந்திர சிறிவர்தன**

(சபை அங்கத்தவர்)

திரு. அசேந்திர சிறிவர்தன 02.04.2015ம் திகதி சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது ஒரு சட்டத்தரணியாகப் பணியாற்றி வருகின்றார்.

**திரு. சந்தன குமாரசிங்க**

(சபை அங்கத்தவர்)

திரு சந்தன குமாரசிங்க சபை அங்கத்தவராக 14.12.2015ம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் 2016 முதல் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளராக பணியாற்றி வருகின்றார்.

**திரு. ட்ரவின் பிரானாந்துபுள்ளே**

(சபை அங்கத்தவர்)

திரு. ட்ரவின் பிரானாந்துபுள்ளே, 08.04.2015ம் திகதி சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் HSBC யில் இருந்து ஒய்வு பெறும் போது பிரதி பிரதம நிறைவேற்று அலுவலராகக் கடமையாற்றி வந்தார். அத்துடன் இவர் தற்போது AMW கப்பிடல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுனத்தின் (டுபாயைத் தளமாகக் கொண்டமைந்த அல் புட்டியம் குழுமத்தின் அங்கத்துவக் கம்பனி) தலைவராகவும், யூனியன் பாங் பிஎல்சி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும், டட்ச் லங்கா ட்ரெயிலர் மனியுபக்சரிங் லிமிடட் (இந்தியாவின் டாடா குழுமத்தின் அங்கத்துவக் கம்பனி) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

# கூட்டிணைந்த, சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



01

**திரு. சனத் சி. டி சில்வா**
பிரதம நிறைவேற்று அதிகாரி



02

**திரு. ஜே.ஏ.டி.சிறிவர்தன**
உதவிப் பொது முகாமையாளர் - நிதி



03

**திருமதி நிமாலி பத்திரண**
உதவிப் பொது முகாமையாளர் - காப்புறுதி



04

**திரு. பி.ஆர்.ஏ.லசந்த யூ குமார**
தலைவர் - மனித வளம் மற்றும் நிருவாகத் திணைக்களம்



05

**திருமதி நிமாலி பெரேரா**
தலைவர் - கிளைகள் மேற்பார்வைத் திணைக்களம்



06

**திருமதி தம்மிக்கா வீரக்கோன்**
நிதிப் பிரிவுத் தலைவர்



07

**திரு. ஆர்.எஸ்.குணசேகர**
தலைவர் - ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் திணைக்களம்



08

**திரு. காவிந்திர ஜயசிங்க**
தலைவர் - தகவல் தொழில்நுட்ப திணைக்களம்



09

**திருமதி உபேக்ஷா ஏக்கநாயக்க**
தலைவர் - மோட்டார் எழுத்தாக்கத் திணைக்களம்



10

**திரு. அனுர சமரக்கோன்**
தலைவர் - அக்ரஹார திணைக்களம்



11

**திருமதி தேஷானி நாணயக்கார**
தலைவர் - மீள் காப்புறுதி மற்றும் SRCC திணைக்களம்



12

**திருமதி ரந்திமா டி.எம்.மானகே**
தலைவர் - பொதுக் கோரிக்கைகள் திணைக்களம்

# கூட்டிணைந்த, சிரேஷ்ட முகாமைத்துவக் குழு


13

**திருமதி நிமேஷா சஹபந்து**
தலைவர் - மைக்ரோ இன்ஷுவரன்ஸ் திணைக்களம்


14

**திரு. ரீ.ஜீ.லக்ஷ்மன்**
தலைவர் - மோட்டார் கோரிக்கைகள் திணைக்களம்


15

**திரு. சித்தார அசங்க ஜயலத்**
தலைவர் - நிருவாகப் பிரிவு


16

**திருமதி காயத்ரி சொய்சா**
தலைவர் - உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்


17

**திரு. நாமல் காஞ்சன**
தலைவர் - முதலீட்டுப் பிரிவு


18

**திருமதி எஸ்.ஆர்.ஜீ.உதாரி பியபாஷினி**
தலைவர் - சட்டப் பிரிவு


19

**திருமதி கயானி சியம்பலாகொட**
நிறைவேற்றுச் செயலாளர்


20

**திரு. ஷாமல் சுமுது சேனாரத்ன**
தலைவர் - அநுராதபுரம் கிளை


21

**திரு. எம்.என்.கே.பன்டிகமகே**
தலைவர் - ஹம்பாந்தோட்டை கிளை

# மாற்றீடு

**எமது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை மிக மோசமான வகையில் மாற்றியமைக்கும் ஆதனங்களுக்கு ஏற்பட்ட சேதம் அல்லது வைத்திய ரீதியிலான பிரச்சினைகள் என்பனவே எமது முக்கிய விடயங்களாகும். இதன்பலனாக, சமீபத்திய தொழில்நுட்பகளின் திறமையை உச்சக்கட்ட நிலைக்குக் கொண்டு வருவதும், நாட்டின் பாதுகாப்பு வலையமைப்பில் எமது இடத்தைக் கொண்டிருப்பதற்குமென அதிநவீன தொழில்நுட்பத்தில் நாம் முதலீடு செய்துள்ளோம்.**

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

### சர்வதேச பொருளாதார சூழல்

சர்வதேச சந்தையில் பொருளாதாரம் மிகவும் பின்வாங்கிய மற்றுமொரு வருடமாக ஆய்வுக்குட்பட்ட ஆண்டைக் குறிப்பிட முடியும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதிக வளர்ச்சியையும், சமூக அரசியல் சிக்கல்களையும் விஞ்சி முன்னணி வகித்த பொருளாதார நாடுகள் பதிவு செய்துள்ளன. இது 2016 ஆம் ஆண்டின் மொத்த பெறுபேறுகளுக்கு உதவியாக அமைந்திருந்தது.

மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி 2016 ஆம் ஆண்டில் சர்வதேச ரீதியில் 2.5% ஆகக் காணப்பட்டது. அது, சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) எதிர்வு கூறப்பட்ட 3.1% ஐ விட மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அபிவிருத்தியடைந்த பொருளாதார நாடுகளில் வருட ஆரம்பத்தில் விசேடமாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் கடுமையான அரசியல் ஸ்திரமற்ற தன்மை, மத்திய கிழக்கில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் என்பன பொருளாதாரத்தைப் பின்னடையச் செய்துள்ளன. சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் தொடர்ந்தும் பொருளாதாரத்தை சமநிலையில் இட்டுச் சென்றன. ஐக்கிய அமெரிக்காவும் நாணயக் கொள்கையை சாதாரணமாகவே பேணி வந்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்பட்ட பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கைகளில் ஏற்பட்ட சர்ச்சைகள் வருடத்தின் முக்கிய அம்சங்களாகக் காணப்பட்டன. இவற்றினால், குறிப்பிடத்தக்க ஸ்திரமற்ற நிலை, வளர்ந்து வரும் சந்தைகளில் ஏற்பட்டது. கடந்த ஆண்டுகளில் பொருட்களின் விலை விசேடமாக மசகு எண்ணெய் விலை வரலாறு காணாத விலை குறைவுக்கு தள்ளப்பட்டது. அது பொருள்கள் விலை குறைவுக்குக் காரணமாக அமைந்திருந்தது. இந்த வருடத்தில் அந்த நிலை மாறி மீண்டும் பொருட்கள் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 26 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இது ஆகக் குறைந்த தொகையாக இருந்துள்ளது. ஆனால், வருட இறுதியளவில் 50 - 55 அமெரிக்க டொலர் வரை இது வளர்ச்சியடைந்தது. இதனால், அதிகரிக்கப்பட்ட விலையேற்றங்கள் சர்வதேச ரீதியில் ஏற்பட்டதோடு, விசேடமாக இறக்குமதியை நம்பியிருந்த நாடுகளுக்கு இது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

### இலங்கையின் பொருளாதார சூழல்

இலங்கையின் பொருளாதாரத்தில் குறைந்த அளவு மாற்றங்களுடனான ஒரு வருடமாக 2016 ஆம் ஆண்டு அமைந்திருந்தது. சர்வதேச சந்தைகளில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலை, சர்வதேச சந்தைகளில் ஏற்பட்ட பொருட்கள் விலையேற்றம் மற்றும் அமெரிக்க டொலரின் விலையேற்றம் என்பன பாதகமான அம்சங்களாகும்.

பாதகமான காலநிலை நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அது, பிரதானமாக, நாட்டின் விவசாயத் துறையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டில் 4.6% ஆகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி 2016 ஆம் ஆண்டில் 4.4**%** ஆக அமைந்திருந்தது.

காலாண்டு வளர்ச்சிகளில் தொடர் அதிகரிப்பு ஏற்பட்டது. இரண்டாவது காலாண்டில் கடுமையான நிதிக் கொள்கைகள் காணப்பட்டாலும் வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. அதிகரித்த முதலீட்டுச் செலவினம், விசேடமாக கட்டட நிர்மாணத்துறை, பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருந்தன. பாவனைக்கான செலவினங்கள் குறைவடைந்தமை பொருளாதார சூழலுக்கு சாதகமாக இருந்தது. பொருட்கள் விலையேற்றம் வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் குறைவாக இருந்தது. அதன் பின் 2016 ஆம் ஆண்டில் வருடாந்த சராசரியான 4% வரை அதிகரித்தது.

தொழிற்துறை வளர்ச்சி முன்நோக்கிச் சென்றுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது, 6.7% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கட்டட நிர்மாணம், அகழ்வு ஆராய்ச்சி மற்றும் சுரங்கத் தொழிற்துறைப் பணிகள் என்பன இதற்குப் பிரதான காரணமாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், முறையே 14.9% மற்றும் 14.4% ஆல் இத்துறைகள் வளர்ச்சி கண்டிருந்தன. இவ்விரு துறைகளும் மொத்த தேசிய உற்பத்தியில் 10% பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளன.

மொத்த தேசிய உற்பத்தியில் 56.5% வளர்ச்சி சேவைத் துறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது, 4.2% வளர்ச்சியாகும். இதில் பிரதானமாக, வங்கி மற்றும் நிதிச் சேவைகள் துறை முக்கிய பங்காற்றியுள்ளன. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 12.4% வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டின் பாதகமான காலநிலைகளினால் விவசாயத்துறை 4.2% பின்னடைவு கண்டுள்ளது. இதனால், இறப்பர் மற்றும் தேயிலைத் தோட்டங்களின் வருமானமும் சரிவடைந்து, மொத்தமாக இலங்கையின் ஏற்றுமதித்துறை பின்னடைவை எதிர்நோக்கியுள்ளன.

சர்வதேச சந்தையில் தேயிலையின் சராசரி விலை ஒரே நிலையில் இருந்தது. கேள்களை பெற்றுத் தரும் பிரதான நாடுகளில் இருந்து குறைந்த அளவிலான கேள்வியே காணப்பட்டன. மேலும், இறப்பர் உற்பத்தி கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட ஆகக் குறைந்த விளைச்சலை குறித்த ஆண்டில் பதிவு செய்துள்ளது. சர்வதேச சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி மற்றும் இயற்கை இறப்பருக்கு காணப்பட்ட கேள்வி குறைவு என்பனவும் எரிபொருள் விலை குறைவும் இதற்கு காரணமாக அமைந்திருந்தது.

மத்திய வங்கியின் உள்வாங்கல் காரணமாக, இலங்கை ரூபாவின் மீது ஏற்பட்ட பெறுமதி வீழ்ச்சி கட்டுப்படுத்தப்பட்டாலும், ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் அது, 3.8% வீழ்ச்சியை பதிவு செய்திருந்தது. நாட்டின் வர்த்தக நிலுவை 2016 ஆம் ஆண்டில் 500 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அந்நியச் செலாவணி 6 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக அமைந்திருந்தது. இது, கடந்த ஆண்டில் 7.3 பில்லியன் டொலராக காணப்பட்டது.

### தொழிற்துறை மீளாய்வு

இலங்கையின் காப்புறுதித்துறை, 2016 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியான வளர்ச்சிப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தன. எழுதப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் (GWP), ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதித் துறையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.3% வளர்ச்சியைக் காண்பித்தது. அதாவது, ரூபா 143 பில்லியன் வளர்ச்சியை வெளிப்படுத்தியது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் (YOY) அது, 16.2% அதிகரிப்பை வெளிப்படுத்தியது. இந்த அதிகரித்த பெறுபேறுகளுக்கு பிரதான காரணம், தொழிற்துறை நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்ட

தரமுயர்வுகள், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குதல், ஏற்கனவே உள்ள உற்பத்திகளை மீள் நிர்மாணம் செய்தல் மற்றும் விசேடமாக புதிய தொழில்நுட்பப் பயன்பாடு என்பனவாகும்.

நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தில் 20.4% இல் இருந்து 2016 ஆம் ஆண்டில் 18.3% வரையிலான குறைவு ஏற்பட்டது. இதற்கு மாறாக, பொதுக் காப்புறுதித் துறையில் 13.2% இல் இருந்து 14.7% வரை 2016 ஆம் ஆண்டில் வளர்ச்சி அதிகரித்தது. 2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய வளர்ச்சி வீதம் இதுவாகும்.

தொழிற்துறையில் இவ்வாறு சாதகமான வளர்ச்சி காண்பிக்கப்பட்டாலும், 2016 ஆம் ஆண்டிலும் காப்புறுதி பெற்றுக்கொண்ட மக்களின் அளவு குறைவாகவே இருந்தன. இது, 1.21% ஆக, அதாவது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1.12% இல் இருந்து சிறியதொரு வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. குறித்த காலப்பகுதியில் நீண்டகால காப்புறுதி உள்வாங்கல் 0.54% ஆகவும், பொதுக் காப்புறுதி உள்வாங்கல் 0.67% ஆகவும் காணப்பட்டது. இந்த குறைந்த விகிதாசாரங்களை நோக்கும் போது, நாடு தழுவிய ரீதியில் காப்புறுதியை மேலும் மக்களிடம் கொண்டு சேர்க்கவும், அதன் மூலம், இலங்கை மக்களுக்கு அதிகரித்த சமூகப் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்கவும், இலங்கை பிரசைகளை நிதிசார் மற்றும் சமூக அடிப்படையில் பலமானவர்களாக மாற்றுவதற்கும், முழு நாட்டிற்கும் சிறந்த பொருளாதார அனுகூலங்களை பெற்றுக்கொடுக்கவும் வாய்ப்புகள் இருப்பது தெரிய வந்துள்ளன.

இதில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக காப்புறுதித்துறை சொத்துக்களின் வளர்ச்சி சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 13% வளர்ச்சியை பதிவு செய்து, 2016 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் 527.2 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இது, 2015 ஆம் ஆண்டில் 466.7 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இதில் அதிக அளவான பெறுமதி நீண்டகால காப்புறுதிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்டன. அது, 345.8 பில்லியன் ரூபாவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீண்டகால காப்புறுத்துறை வளர்ச்சி, கடந்த ஆண்டின் 26.6% இல் இருந்து 2016 ஆம் ஆண்டில் 10.5% வரை குறைந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட வேண்டிய ஒரு பகுதியாகும். இதற்கு மாறாக, பொதுக் காப்புறுதித் துறையில் 13% ஆகக் காணப்பட்ட வளர்ச்சி 2016 ஆம் ஆண்டில் 16% வரை அதிகரித்தது.

ஆய்வுக்குட்பட்ட ஆண்டில், நீண்டகால காப்புறுதி வர்த்தகம் திருப்திகரமான முறையில் அமைந்திருந்தது. GWP மொத்தமாக 63.5 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட நீண்டகால காப்புறுதிகளுக்கான இழப்பீட்டுத் தொகை 22.6 பில்லியன் ரூபாவாகும். கடந்த ஆண்டின் 20.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது, 8% அதிகரிப்பை காண்பித்துள்ளது. இந்த நீண்டகால காப்புறுதி கொடுப்பனவுகளில் முதிர்ச்சிப் பெறுமதிகள் அதிக பங்கை வகித்துள்ளன. மொத்த 12.7 பில்லியன் ரூபாவாக அது அமைந்திருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நிரந்தர அங்கவீனத்திற்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் 37% அதிகரிப்பை வெளிப்படுத்தின. வருட இறுதியில் மொத்தப் பெறுமதி 591 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

மோட்டார் காப்புறுதித்துறை பொதுக் காப்புறுதித் துறையில் அதிகளவு GWP யை ஏற்படுத்தியிருந்தது. அது, 62% பங்களிப்பாகும். நடவடிக்கைகளில் எப்போதும் சாதகமான பெறுபேறுகளை வெளிப்படுத்திய இத்துறை வளர்ச்சி வீதத்தில் 2015 ஆம் ஆண்டில் வெளிப்படுத்திய 19.1% வளர்ச்சியில் இருந்து இவ்வருடத்தில் 15.6% வளர்ச்சியையே காண்பித்திருந்தன.

இலங்கை காப்புறுதி சபையினால் (IBSL) வெளியிடப்பட்ட பெறுபேறுகளுக்கு அமைய, ஆயுள் காப்புறுதித்துறை ஒன்றுதிரட்டிய வருடாந்த வளர்ச்சி வீதத்தை (CAGR) கடந்த ஐந்து ஆண்டுகளில் அதாவது 2015 ஆம் ஆண்டு வரை 11% வரை கொண்டு சென்றுள்ளது. இந்த வளர்ச்சி வீதம், ஆயுள் காப்புறுதித்துறையில் தொடர்ந்தும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், இலங்கையில் காப்புறுதி உள்வாங்கல் மிகவும் குறைவாகக் காணப்படுவது ஏனைய சந்தைகளுடன் ஒப்பிடுகையில் நன்கு தெளிவாகிறது. உதாரணமாக, IBSL நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அமைய, தொழில் புரியும் மக்களிடையே 2014 ஆம் ஆண்டில் 30% ஆக காணப்பட்ட காப்புறுதி தற்போது 33% ஆக அதிகரித்துள்ளது.

## நிதித்துறை முக்கிய அம்சங்கள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF), நிலையான தன்மை, அபிவிருத்தி மற்றும் இலங்கையின் சமூக பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் சமநிலையில் கொண்டு, இலாபகரமான ஒரு நிறுவனமாக, நிதிப் பெறுபேறுகளை வெளிப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகிறது. NITF நிறுவனத்தை சமூக மற்றும் பொருளாதார கோணத்தில் பார்க்கையில், இரண்டு துறைகளுக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிப்புச் செய்வது அவதானிக்கப்படுகிறது.

இதனடிப்படையில், குறித்த ஆண்டில் காணப்பட்ட சவால்மிக்க செயற்பாட்டுச் சூழலில் NITF புதிய பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு சிறந்த நிதிப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளமையை முகாமைத்துவம் மேற்கோள் காட்ட விரும்புகிறது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், பிரதானமாக, தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி திட்டம் (NNDIS) போன்ற செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் NITF எழுதப்பட்ட மொத்த கொடுப்பனவுகளில் (GWP) குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 5.06 பில்லியனாக இருந்த இத்தொகையை 6.81 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இதே சந்தர்ப்பத்தில் அக்ரஹார சுகாதார காப்புறுதிக் கொடுப்பனவுகளை 1.64 பில்லியன் ரூபாவில் இருந்து வருட இறுதியளவில் ரூபா 2 பில்லியன் வரை அதிகரித்தது. இதேபோன்ற வளர்ச்சிகளை அறுவடை காப்புறுதித் திட்டம் போன்றவற்றின் ஊடாகவும் அதாவது, கடந்த வருடத்தில் காணப்பட்ட 1.26 பில்லியன் ரூபாவில் இருந்து இவ்வருடம் 1.5 பில்லியன் ரூபா வரை வளர்ச்சி கண்டுள்ளது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், நிகர எழுதப்பட்ட கொடுப்பனவுகள் 7.97 பில்லியன் ரூபாவில் இருந்து 9.57 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. நிகர சம்பாதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் இவ்வாறானதொரு சிறந்த வளர்ச்சியை வெளிப்படுத்தி 7.93 பில்லியன் ரூபாவில் இருந்து 8.85 பில்லியன் ரூபா வரையிலான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு மேலதிகமாக, சேவைக் கட்டணங்கள் மற்றும் தரகு வருமானங்கள் 6.6 மில்லியன் ரூபாவில் இருந்து 2016 ஆம் ஆண்டில் 4.7 மில்லியன் ரூபா வரை குறைவடைந்தது.

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் சிறந்த வளர்ச்சிகளை பதிவு செய்து 2015 ஆம் ஆண்டின் 850 மில்லியன் ரூபாவில் இருந்து குறித்த ஆண்டு நிறைவின் போது 984 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இதற்கமைய, ஆய்வுக்குட்பட்ட வருடம் கடுமையான காலநிலை சீர்கேட்டினை எதிர்நோக்கியிருந்தாலும்கூட, NITF நிதிப் பெறுபேறுகளில் நேரடியான மற்றும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தது. NNDIS திட்டத்தின் அறிமுகம் ஊடாக நிறுவனம் செலுத்தும் நட்டஈட்டுத் தொகையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டு, கடந்த வருடத்தின் 3.23 பில்லியன் ரூபாவில் இருந்து 5.76 பில்லியன் ரூபா வரையிலான அதிகரிப்பை காண்பித்துள்ளது. இந்தக் கொடுப்பனவுகள், நிறுவனத்திற்கு மேலதிக செலவினத்தை ஏற்படுத்தும் என்பதை முகாமைத்துவம் அறிந்திருந்தாலும்கூட, இதன் மூலம் இலங்கை மக்களுக்கு கிடைக்கும் சிறந்த பலன்களை தனி நபர்களும், வர்த்தக நிறுவனங்களும் பெற்றுக்கொள்வதனால் NITF இன் உடனடி செலவினம் அதிகரித்தாலும்கூட நிறுவனத்தின் குறிக்கோள்களில் ஒன்றான முழுமையான சமூகப் பாதுகாப்பு என்ற தேவைப்பாட்டை உருவாக்கும் அதேவேளை, இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவோருக்கு நட்டஈடு செலுத்தும் திறைசேரியின் சுமையை அகற்றியமையையும் ஒரு சிறந்த செயற்பாடாக கருத முடியும்.

இதன் அடிப்படையில், NITF இன் நிதிப் பெறுபேறுகளில் கடந்த ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட மிக முக்கியமான பெறுபேறாக 19.52 பில்லியன் ரூபாவாக நிறுவனத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி அதிகரிப்பட்டமையும், கடந்த ஆண்டில் இது 12.2 பில்லியன் ரூபாவாக இருந்தமையும் மிகப் பெரிய சாதனையாகும்.

மேலே கூறப்பட்ட விடயங்கள் காரணமாக, NITF குறித்த ஆண்டில் வரிக்கு முந்திய (PBT) இலாபமாக ரூபா 2.84 பில்லியனைப் பதிவு செய்துள்ளது. கடந்த வருடத்தின் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 4.39 பில்லியனாகக் காணப்பட்டது. அதேபோன்று, வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) ரூபா 2.84 பில்லியனாகக் காணப்பட்டதோடு, கடந்த வருடத்தில் அது ரூபா 4.3 பில்லியனாக இருந்துள்ளது.

2016.12.31 ஆம் திகதியன்று மூலதன போதுமை வீதம் (CAR) 586% ஆக அமைந்திருந்தது. இதன் குறைந்த பட்ச தேவைப்பாடாக கட்டுப்பாட்டு நிறுவனங்களினால் வங்குரோத்து நிலையின் போது 120% ஆகவும், செயற்பாட்டு மட்டத்தில் 160% ஆகவுமே தேவைப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, NITF போதுமான அளவில் மூலதனத்தை தம்வசம் கொண்டிருந்து நிறுவனத்தை முழுமையாக பாதுகாப்பான மட்டத்தில் பேணி வந்துள்ளது.

### பிரிவு அடிப்படையில் மீளாய்வு

#### அக்ரஹார

NITF இன் மிக முக்கியமான காப்புறுதி அம்சமாக அக்ரஹார சுகாதாரக் காப்புறுதித் திட்டம் அமைகிறது. 1997 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இது, அரச அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் மாகாண மட்டத்திலான அரச பணியாளர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரை உள்ளடக்கிய வகையில் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இது, ஒவ்வொரு அங்கத்தவரிடம் இருந்தும் சிறியதொரு தொகையை கட்டுப்பணமாக பெற்று வந்துள்ளது. இது, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளுக்கு அமைய உருவாக்கப்பட்டு, பிற்காலத்தில் இது, அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும் ஒரு மாதாந்தக் கொடுப்பனவாக மாற்றப்பட்டு செயற்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் பொறுப்பு பிற்காலத்தில் இலங்கை அரசாங்கத்திடம் தள்ளப்பட்டு அதன் பின் பொது நிர்வாக அமைச்சின் ஏற்பாட்டுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தத் திட்டமானது, 825,000 உறுப்பினர்களைக் கொண்டு 2.2 மில்லியன் இலங்கையர்களை உள்ளடக்கிய வகையில் செயற்பட்டு வருகின்றது. இதில் உறுப்பினர்களின் குடும்ப அங்கத்தவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டில் அக்ரஹார உறுப்பினர்களின் அனுகூலங்களை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் மிக முக்கியமாக, புதிய அனுகூலம் பெறுவோர் பிரிவுகளை உள்வாங்குதல், சில்வர் மற்றும் கோல்ட் திட்டங்களை உருவாக்குதல், அக்ரஹார ரெக்கவரண திட்டத்தை அறிமுகப்படுத்துதல் என்பன மூலம் 2016.01.01 முதல் ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரிகளை உள்ளடக்கியமையும் விசேட அம்சங்களாகும்.

இந்தப் புதிய திட்டத்திற்கு அமைய, அனுகூலம் பெறுவோர் விரும்பும் பட்சத்தில் அவர்களின் கொடுப்பனவுகளை ரூபா 300 அல்லது ரூபா 600 ஆல் அதிகரித்து, முறையே சில்வர் அல்லது கோல்ட் திட்டங்களை பெற்றுக்கொள்ள முடியும். இந்த அக்ரஹார சில்வர் மற்றும் கோல்ட் உறுப்பினர்கள் சாதாரண அக்ரஹார அனுகூலங்களுக்கு மேலதிகமாக பின்வரும் மேலதிக அனுகூலங்களையும் பெற்றுக்கொள்கின்றனர்.

| அங்கத்தவர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்குமான நன்மைகள் (குடும்ப அலகு) | அக்ரஹார திட்டம் - இயல்பு அதிகபட்ச கோரிக்கை | அக்ரஹார திட்டம் - சில்வர் அதிகபட்ச கோரிக்கை | அக்ரஹார திட்டம் - கோல்ட் அதிகபட்ச கோரிக்கை |
|---|---|---|---|
| வருடாந்த எல்லை | ரூபா 150,000.00 | ரூபா 250,000.00 | ரூபா 350,000.00 |
| **(01)** தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை | (ஒருவருக்கான உச்சக்கட்ட தொகை ரூபா 120,000.00) | (ஒருவருக்கான உச்சக்கட்ட தொகை ரூபா 160,000.00) | (ஒருவருக்கான உச்சக்கட்ட தொகை ரூபா 200,000.00) |
| அறை வாடகை | ரூபா 3,000.00 (ஒரு நாளைக்கு) | ரூபா 5,000.00 (ஒரு நாளைக்கு) | ரூபா 8,000.00 (ஒரு நாளைக்கு) |
| மருந்து, சத்திர சிகிச்சைக் கட்டணம், வைத்தியருக்கான கட்டணம் | ரூபா 50,000.00 | ரூபா 60,000.00 | ரூபா 80,000.00 |
| வைத்தியர் கட்டணம் | ரூபா 20,000.00 | ரூபா 35,000.00 | ரூபா 50,000.00 |
| மருத்துவப் பரிசோதனைகள் | ரூபா 20,000.00 | ரூபா 30,000.00 | ரூபா 40,000.00 |
| | ரூபா 150,000.00 (ஓராண்டிற்கு) | ரூபா 250,000.00 (ஓராண்டிற்கு) | ரூபா 350,000.00 (ஓராண்டிற்கு) |
| (02) தனியார் ஆயுர்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் (சம்பந்தப்பட்ட அமைச்சில் பதிவு பெற்றிருக்க வேண்டும்) | | ரூபா 160,000.00 (ஓராண்டிற்கு) | ரூபா 200,000.00 (ஓராண்டிற்கு) |
| **(03)** அரச வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் | | | |
| தங்கியிருப்பதற்கான அலவன்ஸ் | ரூபா 500.00 (ஒரு நாளைக்கு) | ரூபா 1,000.00 (ஒரு நாளைக்கு) | ரூபா 3,000.00 (ஒரு நாளைக்கு) |
| மருந்து வகைகள் | ரூபா 50,000.00 (விசேட நிபுணத்துவரின் பரிந்துரைக்கான காலம் மாத்திரம்) | ரூபா 60,000.00 (விசேட நிபுணத்துவரின் பரிந்துரைக்கான காலம் மாத்திரம்) | ரூபா 80,000.00 (விசேட நிபுணத்துவரின் பரிந்துரைக்கான காலம் மாத்திரம்) |
| மருத்துவப் பரிசோதனைகள் | ரூபா 20,000.00 (விசேட நிபுணத்துவரின் பரிந்துரைக்கான காலம் மாத்திரம்) | ரூபா 30,000.00 (விசேட நிபுணத்துவரின் பரிந்துரைக்கான காலம் மாத்திரம்) | ரூபா 40,000.00 (விசேட நிபுணத்துவரின் பரிந்துரைக்கான காலம் மாத்திரம்) |
| | ரூபா 5,000.00 (அதிகபட்சம் 10 நாட்கள்) | ரூபா 10,000.00 (அதிகபட்சம் 10 நாட்கள்) | ரூபா 30,000.00 (அதிகபட்சம் 10 நாட்கள்) |
| **(04)** அரச ஆயுர்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் | | | |
| தங்கியிருப்பதற்கான அலவன்ஸ் | ரூபா 500.00 (ஒரு நாளைக்கு) | ரூபா 1,000.00 (ஒரு நாளைக்கு) | ரூபா 3,000.00 (ஒரு நாளைக்கு) |
| | ரூபா 5,000.00 (அதிகபட்சம் 10 நாட்கள்) | ரூபா 10,000.00 (அதிகபட்சம் 10 நாட்கள்) | ரூபா 30,000.00 ( அதிகபட்சம் 10 நாட்கள்) |

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

| அங்கத்தவர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்குமான நன்மைகள் (குடும்ப அலகு) | அக்ரஹார திட்டம் - இயல்பு அதிகபட்ச கோரிக்கை | அக்ரஹார திட்டம் - சில்வர் அதிகபட்ச கோரிக்கை | அக்ரஹார திட்டம் - கோல்ட் அதிகபட்ச கோரிக்கை |
|---|---|---|---|
| **05)** தனியார் மருத்துவமனையில் மகப்பேற்றுச் சிகிச்சைகள்<br>சத்திர சிகிச்சை மூல குழந்தை பிறப்பு<br>இயற்கையான குழந்தை பிறப்பு<br><br>அரச வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல்<br>சத்திர சிகிச்சை மூல குழந்தை பிறப்பு<br>இயற்கையான குழந்தை பிறப்பு<br>இறந்து பிறத்தல்<br>கருச்சிதைவு | ரூபா 40,000.00<br>ரூபா 10,000.00<br><br>ரூபா 500.00 (ஒரு நாளைக்கு) (அதிகபட்சம் 5 நாட்கள் ) | ரூபா 60,000.00<br>ரூபா 25,000.00<br><br>ரூபா 1,500.00 (ஒரு நாளைக்கு) (தனியொரு வைத்தியசாலை சிகிச்சைக்கு அதிகபட்சம் 5 நாட்கள்) | ரூபா 100,000.00<br>ரூபா 50,000.00<br><br>ரூபா 3,000.00 (ஒரு நாளைக்கு) (தனியொரு வைத்தியசாலை சிகிச்சைக்கு அதிகபட்சம் 5 நாட்கள்) |
| **(06)** குடும்ப அங்கத்தவர்களுக்கான இருதய சத்திர சிகிச்சை | ரூபா 100,00.00 | ரூபா 150,00.00 | ரூபா 200,00.00 |

| அங்கத்தவர்களுக்கான நன்மைகள் | அக்ரஹார திட்டம் - இயல்பு அதிகபட்ச கோரிக்கைப் பெறுமதி | அக்ரஹார திட்டம் - சில்வர் அதிகபட்ச கோரிக்கைப் பெறுமதி | அக்ரஹார திட்டம் - கோல்ட் அதிகபட்ச கோரிக்கைப் பெறுமதி |
|---|---|---|---|
| 01. இருதய சத்திர சிகிச்சை<br>RF Ablation க்கு | ரூபா 500,000.00<br>ரூபா 225,000.00 | ரூபா 800,000.00<br>ரூபா 350,000.00 | ரூபா 1,000,000.00<br>ரூபா 500,000.00 |
| 02 .சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை | | ரூபா 800,000.00 | ரூபா 1,200,000.00 |
| 03. மூளை சம்பந்தமான சத்திர சிகிச்சை | | ரூபா 800,000.00 | ரூபா 1,200,000.00 |
| 04. புற்றுநோய்களுக்கு | ரூபா 200,000.00 | ரூபா 400,000.00 | ரூபா 600,000.00 |
| 05. முழங்கால் மூட்டு மாற்று சிகிச்சை | | ரூபா150,000.00 | ரூபா 250,000.00 |
| 06. இடுப்பு எலும்புகள் மாற்று சிகிச்சை | | ரூபா150,000.00 | ரூபா 250,000.00 |
| 07. செவிப்புல உபகரணங்கள் | ரூபா 50,000.00 | ரூபா 75,000.00 | ரூபா 100,000.00 |
| 08. கட்புல உபகரணங்கள் | ரூபா 3,500.00 | ரூபா 3,500.00 | ரூபா 5,000.00 |
| 09. தனிநபர் விபத்தும் இயற்கை மரணமும் செலவினக் கோரிக்கை<br>விபத்து மரணங்கள்<br>இயற்கை மரணங்கள் | ரூபா 600,000.00<br>ரூபா 150,000.00 | ரூபா 1,000,000.00<br>ரூபா 400,000.00 | ரூபா 2,000,000.00<br>ரூபா 700,000.00 |
| 10. தனிநபர் விபத்துச் செலவினம் | ரூபா 600,000.00 | ரூபா 1,000,000.00 | ரூபா 1,500,000.00 |

இவற்றுக்கு மேலதிகமாக, அங்கத்தவர்களுக்கு அதிகரித்த நன்மைகளை வழங்கவென
இலங்கையில் பிரபல 11 தனியார் சுகாதார நிறுவனங்களுக்கும் NITF க்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தங்களை (MoU) NITF செய்து கொண்டுள்ளது. NITF சேர்த்துக்கொண்ட புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்த வருடத்தில் செய்து கொண்டுள்ள சுகாதார நிறுவனங்களின் விபரங்கள் வருமாறு:

1. ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
2. லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேஷன் பிஎல்சி
3. நவலோக்க ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி
4. நொதென் சென்றல் ஹொஸ்பிட்டல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
5. சிங்க ஹொஸ்பிட்டல்ஸ் லிமிட்டெட்
6. நியூ பிலிப்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
7. ஒஸ்ரோ ஹொஸ்பிட்டல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
8. கோல் கோப்பரேட்டிவ் ஹொஸ்பிட்டல்ஸ் சொசைட்டி லிமிட்டெட்
9. நாவின்ன மெடிகெயர் ஹொஸ்பிட்டல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
10. பிரவ்ன் ஹெல்த்கெயர் (பிரைவேட்) லிமிட்டெட்
11. ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி

### அக்ரஹார தகவல்கள்

| ரூபா | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| உறுப்பினர்களின் பங்களிப்பு | 1,454,436,602 | 1,236,567,419 |
| திறைசேரியின் பங்களிப்பு | 550,000,000 | 400,000,000 |
| மொத்தப் பங்களிப்பு | 2,004,436,602 | 1,636,567,419 |
| உரிமை கோரல் செலவினம் | (2,047,583,576) | (1,580,712,410) |
| அதிகம் (பற்றுக்குறை) | (43,146,974) | 55,855,009 |

| கோரிக்கைகள் | மொத்தக் கோரிக்கைகள் | | செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | | நிலுவையில் உள்ள கோரிக்கைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** |
| இறப்பு | 1,954 | 1,649 | 1,834 | 1,413 | 77 | 213 |
| ஊனமுறல் | 209 | 198 | 182 | 152 | 20 | 42 |
| மகப்பேறு | 10,668 | 10,851 | 9,934 | 9,829 | 492 | 662 |
| புற்று நோய் | 670 | 529 | 617 | 449 | 38 | 55 |
| மாரடைப்பு | 932 | 783 | 920 | 757 | 6 | 16 |
| மூக்குக் கண்ணாடி | 68,512 | 72,672 | 62,303 | 65,434 | 1,409 | 2,341 |
| ஏனைய நோய்களுக்கான அரசாங்க வைத்தியசாலைக் கட்டணங்கள் | 32,525 | 31,777 | 30,269 | 28,745 | 1,331 | 2,044 |
| ஏனைய நோய்களுக்கான தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் | 21,688 | 19,497 | 18,361 | 15,779 | 1,305 | 1,823 |
| சிறுநீரகம் | 10 | 5 | 10 | 5 | 0 | - |
| பக்கவாதம் | 2 | 1 | 2 | - | 0 | - |
| மொத்தம் | 137,170 | 137,962 | 124,432 | 122,563 | 4,678 | 7,196 |

### வேலை நிறுத்தம், கலகம், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத நிதியம் **(SRCC & TF)**

அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் 1987 ஆம் ஆண்டில் SRCC & T நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. NITF ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து SRCC & T நிதியத்தின் சகல நிதியும் NITF இல் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இறுதியாக NITF இன் நிருவாகத்திலுள்ள விசேட கணக்கிற்கு இது மாற்றப்பட்டதை அடுத்து, இந்தத் திட்டம் NITF முகாமைத்துவத்தின் மேற்பார்வையின் கீழ் உள்ளது.

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

SRCC & TF என்பது, வேலை நிறுத்தம், கலகம், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத இடர்கள் என்பன காரணமாக, மக்களுக்கு ஏற்படும் மரணங்கள், காயங்களினால் உருவாகும் நட்டங்களின் காப்புறுதி என்ற வகையில் SRCC & TF ஸ்தாபிக்கப்பட்டது.

வேலை நிறுத்தம், கலகம், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத இடர்கள் என்பன பொதுக் காப்புறுதி நிறுவனங்களினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதோடு, வேலை நிறுத்தம், கலகம், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பன சம்பந்தமான கட்டுப்பணங்கள் NITF க்கு செலுத்தப்பட்டன. வேலை நிறுத்தம், கலகம், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பன சம்பந்தமாக பொதுக் காப்புறுதி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் மாதாந்த செயற்பாட்டுக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு, கோரிக்கைகளின் கொடுப்பனவு சம்பந்தமாக தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

வேலை நிறுத்தம், கலகம், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், பயங்கரவாத இடர்கள் சம்பந்தமான மீள் காப்புறுதி ஏற்பாட்டை NITF பெற்றுக் கொண்டது.

| | 2016 ரூபா | 2016 (ரூபா) |
|---|---|---|
| சேகரித்த மொத்த கட்டுப்பணம் (GWP) | 3,533,324,423 | 3,018,417,937 |
| வட்டி வருமானம் | 599,542,870 | 550,349,604 |
| ஏனைய வருமானம் | - | 3,198,218 |
| மொத்த வருமானம் | 4,132,867,293 | 3,571,965,759 |

### மீள் காப்புறுதி

NITF தேசத்தின் மறுகாப்புறுதி வழங்குநராகும். NITF 2008 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளிடம் இருந்து மறுகாப்பீட்டு இடர்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது. 2000 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம் என்பதன் கீழ் 31.12.2012 எனத் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், இலங்கையின் பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் மறுகாப்புறுதி வியாபாரத்தின் மொத்தத் தொகையில் இருந்து 30% ஐப் பெற்றுக்கொள்வது கட்டாயமான தேவைப்பாடாகும்.

NITF இன் நிர்வாகம் 2016 ஆம் ஆண்டில் மறுகாப்புறுதி வியாபாரத்தில் இருந்து வரும் கோரிக்கைகளின் சாத்தியமான அதிகரிப்பு இடரை எதிர்கொள்வதற்கு மறுகாப்பீட்டுப் பாதுகாப்பை வைத்துக்கொள்வதற்காக மீளத் திரும்புதலை வைத்துள்ளது.

பொதுக் காப்புறுதியில் இருந்து எழுகின்ற 30% கட்டாயப் பொறுப்பைப் பாதுகாப்பதற்காக NITF மீளத் திரும்புதல் காப்பீட்டைக் கொள்வனவு செய்தது.

| | 2016 ரூபா | 2016 (ரூபா) |
|---|---|---|
| சேகரித்த மொத்த கட்டுப்பணம் (GWP) | 2,397,372,589 | 1,737,839,949 |
| முதலீட்டு வருமானம் | 240,949,250 | 186,086,647 |
| ஏனைய வருமானம் | 6,144,709 | 23,719,435 |
| மொத்த வருமானம் | 2,644,466,548 | 1,947,646,031 |

### பொதுக் காப்புறுதி - மோட்டார்

NITF முழுமையாக உரிமை கொள்ளப்பட்ட அரசாங்க நிறுவனம் என்ற வகையில் NITF இன் மோட்டார் பிரிவு அரசாங்கம் மற்றும் அரைவாசி அரசாங்கத்தினால் உரிமை கொள்ளப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு விரிவான மற்றும் மூன்றாம் நபர் காப்புறுதிக் காப்பீடுகளை கட்டுப்பணத்தை செலுத்தக்கூடிய இயலுமான அளவுக்கு வழங்குகிறது. இங்கு விரிவான காப்புறுதிக் கொள்கை மூன்றாம் தரப்பினரால் ஏற்பட்ட தீ, திருட்டு, இறப்பு அல்லது ஊறு அத்துடன் வெள்ளம், வேலை நிறுத்தங்கள், கலவரங்கள், சிவில் கலவரங்கள் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றில் இருந்து ஏற்படுகின்ற இழப்புகளைப் பாதுகாக்கிறது.

போட்டி அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு NITF நாடு பூராகவும் ஏற்படுகின்ற விபத்துக்களின் விரைவான மதிப்பீடு, வாடிக்கையாளரால் குறித்துரைக்கப்பட்ட பழுதுபார்க்கும் இடத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு, ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதில் இருந்து மூன்று நாட்களுக்குள் கோரிக்கைகளைச் செலுத்தித் தீர்த்தல் என்பவற்றை உள்ளடக்கிய பெறுமதி கூடிய சேவைகளை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக, இக்காப்புறுதித் திட்டம், அரசாங்க நாடு பூராகவும் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, NITF மூன்றாம் தரப்பினருடைய ஆதனத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கான வெள்ளப் பாதுகாப்பு, வரி அற்ற ஏற்றுதல் பாதுகாப்பு, வாடகைக் கொள்வனவு பாதுகாப்பு, விமானப் பை பாதுகாப்பு, கட்டியிழுத்தலுக்கான பாதுகாப்புக் கட்டணங்களுக்கான பாதுகாப்பு, வாகன முகப்பு கண்ணாடி பாதுகாப்பு, சாரதி பயிலுநர் பாதுகாப்பு, தொழிலாளர் நட்டஈட்டுப் பாதுகாப்பு, பயணிகள் மற்றும் போக்குவரத்திலுள்ள பொருட்களுக்கான சட்டப் பொறுப்பு பாதுகாப்பு என்பவற்றை வழங்குகிறது.

முக்கியமாக, NITF 24 மணி நேர அழைப்பு மையத்தை செயற்படுத்துகிறது. இதன்மூலம் கோரிக்கைகளை விரைவாக செலுத்தவதை இலகுபடுத்துவதற்கும், செயன்முறைகளைச் சீர்செய்வதற்கான தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு பகுதியாக அமைகின்ற வகையில் மாவட்ட செயலகங்களுக்குள் இருக்கின்ற அதன் கிளைக் காரியாலயங்கள் ஊடாக நாட்டின் எந்தப் பகுதியிலும் இருக்கின்ற வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு பதிலளிக்கக்கூடியதாக இருக்கின்றது. தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று செயன்முறையை மேலும் சீராக்குவதற்கு நாடு பூராகவும் சேவையை வழங்குவதுடன், கோரிக்கைகள் சம்பந்தமாக மேற்பார்வைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது, விரிவான உதவிகளையும் வழங்குகின்றனர்.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, NITF உடைய மோட்டார் காப்புறுதி வியாபாரம் இன்னுமொரு உயர் செயற்திறன் மிக்க செயற்பாடு ஒன்றை வெளியிட்டது. இது, அரசாங்க ஊழியர்களுக்கான அக்ரஹார மோட்டார் காப்புறுதி போன்று புதிய பொருட்களை அறிமுகப்படுத்தியது. இவை, அரசாங்க ஊழியர்களினால் உரிமை கொள்ளப்பட்ட சொந்த மோட்டார் வாகனங்களுக்கு சிறப்புப் பாதுகாப்புகளைக் கொண்டுள்ளது. இந்தத் தயாரிப்புக்கு இவ்வருட காலப்பகுதியின் போது வாடிக்கையாளர்களிடம் இருந்து உற்சாகமளிக்கும் ஆதரவு பெறப்பட்டது. அதேநேரத்தில் இலங்கை முழுவதும் அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கொள்கைகளைப் புதுப்பித்தலுக்கும் இடமளிக்கிறது. இது, கைத்தொழில் துறைக்குள் மேல் மற்றும் கீழ் மட்ட செயற்திறன் மீதான சாதகமான தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

அதேபோன்று, மோட்டார் எழுத்தாக்கத் திணைக்களம், இந்தக் காலப்பகுதியின் போது பாராட்டத்தக்க வகையில் செயற்பட்டது. இந்த திணைக்களம், அரசாங்க மற்றும் தனியார்துறை வாடிக்கையாளர்களிடம் இருந்து வருகின்ற மிகவும் வலுவான மற்றும் துடிப்பான வாடிக்கையாளர் தளத்தின் ஆதரவுடன் செயற்பாட்டை நிறைவேற்றியது. மேலும், இது, குறிப்பாக, அரசாங்க காப்புறுதிக் கொள்கைகளினால் ஈட்டப்பட்ட கட்டுப்பண வருமானத்தில் மேலதிக மேம்படுத்தல்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது.

| வகை | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
| பிரத்தியேகக் கார் | 327 | 40.24 | 258 | 33.02 |
| மோட்டார் சைக்கிள் | 1912 | 29.09 | 966 | 13.89 |
| மோட்டார் கோச் | 170 | 15.46 | 91 | 9.52 |
| லொறி/லேண்ட் வாகனம் | 69 | 3.30 | 51 | 4.34 |
| இருநோக்கு வாகனம் | 391 | 42.06 | 220 | 26.51 |
| மொத்தம் | 2869 | 130.14 | 1,586 | 87.27 |

| | 2016 ரூபா | 2016 (ரூபா) |
|---|---|---|
| சேகரித்த மொத்த கட்டுப்பணம் | 382,196,410 | 242,090,517 |
| முதலீட்டு வருமானம் | 55,729,178 | 34,621,732 |
| ஏனைய வருமானம் | 7,111,199 | 21,181,827 |
| மொத்த வருமானம் | 445,036,786 | 297,894,076 |

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மோட்டார் பிரிவு, 49.4% நிகர வருமானத்தைப் பதிவு செய்தது. இது, GWP யில் 57.9% YOY அதிகரிப்பு மூலம் இயக்கப்பட்டது. இந்த முன்னேற்றகரமான செயற்பாடு NITF இன் மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பெறுபேறாகும். விரிவாக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மூலம் சேவை வழங்குதல்களில் முன்னேற்றகரமான மட்டங்களை உறுதிப்படுத்தியது.

மேலும், மோட்டார் காப்புறுதிக் கொள்கையைப் பாதுகாப்பதற்கான ஆதாரமான காகித சான்றிதழ்களுக்குப் பதிலாக காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டன. இது, மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வருமானத்தையும் சேவை விநியோகத்தையும் மேலும் அதிகரிப்பதற்கு உதவியது.

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

### கட்டுப்பண ஒப்பீடு

| மாதம் | 2016 | 2015 | % மாற்றம் |
|---|---|---|---|
| ஜனவரி | 50,275,170 | 37,902,016 | 32.65% |
| பெப்ரவரி | 23,703,504 | 36,849,114 | -35.67% |
| மார்ச் | 17,389,957 | 18,570,307 | -6.36% |
| ஏப்ரல் | 14,278,860 | 13,945,909 | 2.39% |
| மே | 17,620,992 | 17,603,522 | 0.10% |
| ஜூன் | 35,327,247 | 8,027,946 | 340.05% |
| ஜூலை | 30,236,152 | 9,437,312 | 220.39% |
| ஆகஸ்ட் | 14,351,075 | 5,303,052 | 170.62% |
| செப்டம்பர் | 34,384,107 | 18,532,648 | 85.53% |
| ஒக்டோபர் | 20,799,214 | 21,314,569 | -2.42% |
| நவம்பர் | 31,226,371 | 22,506,409 | 38.74% |
| டிசம்பர் | 58,341,682 | 28,070,106 | 107.84% |

### பொதுக் காப்புறுதி (மோட்டார் அல்லாத)

NITF உடைய பொதுக் காப்புறுதி வியாபாரம் (மோட்டார் அல்லாதது) தீ, கடல், மருத்துவ மற்றும் ஏனைய வகைகளுக்கும் பொருந்தும் வகையில் உப பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இது ஊழியர் இழப்பீடு, தனிப்பட்ட விபத்து, பிரயாணம், கொள்ளை, ஒப்பந்தக்காரருடைய ஆலை மற்றும் இயந்திர காப்புறுதி, கடல் ஹல் காப்புறுதி, போக்குவரத்துக் காப்புறுதியில் உள்ள பணம், இலத்திரனியல் உபகரண காப்புறுதி, போக்குவரத்திலுள்ள பொருட்களுக்கான காப்புறுதி மற்றும் வங்கி பணியாளர்களுக்கான தீதறுப்புக் காப்புறுதி என்பனவற்றையும் உள்ளடக்குகிறது.

நிறுவனத்தின் பொதுக் காப்புறுதிப் பிரிவின் வலிமை, அதன் உயர் திறன் கொண்ட ஊழியர்களின் குழுமத்திலிருந்து பெறப்படுகின்றது. இதில் ஏதேனும் கோரிக்கைகளுக்கான தீர்த்துக்கட்டலுக்கு விரைவான மற்றும் துல்லியமான பதிலை அளிப்பதற்கு நாடு பூராகவும் உள்ள வலையமைப்பில் செயற்படக்கூடிய திறன்வாய்ந்த இழப்பு சரி செய்யக்கூடியவர்கள் உள்ளடங்குகின்றனர். மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது GWP வருமானத்திலும், மொத்த வருமானத்திலும் முக்கிய முன்னேற்றங்கள் சான்றுப்படுத்தப்பட்டதன் மூலம் NITF உடைய மோட்டார் அல்லாத காப்புறுதி வியாபாரம் விரிவடைவதற்கு மேலே குறிப்பிட்ட காரணிகள் துக்கிய ஆதரவு வழங்கியுள்ளதைக் காணலாம்.

| ரூபா | 2016 ரூபா | 2015 (ரூபா) |
|---|---|---|
| சேகரித்த மொத்த கட்டுப்பணம் (GWP) | 182,864,533 | 36,599,503 |
| முதலீட்டு வருமானம் | 8,196,862 | 6,516,870 |
| ஏனைய வருமானம் | - | 38,087 |
| மொத்த வருமானம் | 191,061,395 | 43,154,460 |

### விவசாயக் கடன் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டம் மற்றும் பயிர் காப்பீட்டுத் திட்டம்

பெரும்பாலான விவசாயிகள் விவசாயக் கடன் வழங்குவதில் ஈடுபடுகின்ற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து கடன் பெறுகின்றனர். வறட்சி, வெள்ளம் அல்லது யானைகளின் தாக்குதல்கள் காரணமாக பயிர்கள் சேதமடையும் போது கடன் வழங்கிய நிறுவனங்கள் தமது நிலுவையில் உள்ள கடன்களில் குறிப்பிடத்தக்களவு தவணைக் கட்டணங்களை மீளப் பெற முடியாமல் உள்ளது. எனவே, இந்தக் காப்பீட்டுத் திட்டம் அவர்களுக்கு பாதுகாப்புவழங்குவதற்காக விருத்தி செய்யப்பட்டது.

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் NITF வறட்சி, வெள்ளம் மற்றும் யானைகளின் தாக்குதல்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களுக்கு விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் (AAIB) ஊடாக காப்பீட்டுப் பாதுகாப்புக்களை வழங்குகிறது.

வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் உள்ளடங்கலாக, இலங்கையிலுள்ள நிதி நிறுவனங்களால் பயிர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டத்திற்கு வரிக்கு பின்னரான இலாபத்தின் மூலம் 1% நிதி அளிக்கப்படுகிறது.

### தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி திட்டம்

தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டம் (NNDIS) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபையின் (NITF) ஊடாக 2016 ஆம் ஆண்டுக்கான ஒரு வரவு செலவுத் திட்டமாக உருவாக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட காப்புறுதித் திட்டத்திற்கு உரிய கட்டுப்பண செலுத்துகையாக 2016 ஆம் ஆண்டில் NITF இலங்கை ரூபா 300 மில்லியனை வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடாகப் பெற்றது. இந்தக் காப்புறுதித் திட்டம் சூறாவளி, இடி, புயல், வெள்ளம், மண்சரிவு, நில நடுக்கம், சுனாமி, பலத்த காற்றினால் மரங்கள் விழுதல், சுவர்கள் சரிவடைதல் மற்றும் ஏனைய ஏதேனும் அதையொத்த வறட்சி தவிர்ந்த இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்ற உயிர்கள் மற்றும் காப்புறுதி செய்யப்படாத ஆதனங்கள், விசேடமாக, அனைத்து வீடுகள் மற்றும் சிறிய வியாபார நிறுவகங்கள் (வருடாந்த இலாபமாக ரூபா 10 மில்லியனை விஞ்சாத ஏதேனும் வியாபாரம்) என்பவற்றுக்கு வருடாந்தம் ரூபா 10 பில்லியனுக்கு வரையறை செய்யப்பட்ட மொத்த தொகையை காப்பீடாக வழங்குகிறது. பெரிய வியாபாரங்களுக்கு ஏற்படுகின்ற சொத்து சேதம் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளுடன் காப்புறுதி செய்தவர்களும் இதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

கடற்றொழில் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்ற சமயத்தில் தற்செயலாக நடக்கும் விபத்துக்களுக்காக ஒரு மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள். அனைத்து ஏனைய இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தற்செயலான விபத்துக் காப்பீடு தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி காப்பீட்டின் கீழ் ரூபா 100,000 வழங்கப்படும்.

NITF மைக்ரோ காப்புறுதி திணைக்களத்தினால் கையாளப்படுகின்ற NNDIS க்காக மறுகாப்பீட்டுப் பாதுகாப்பை பெற்றது. இந்த மறு காப்புறுதி ஏற்பாட்டின் கீழ் அலியான்ஸ் SE இன் தலைமையில் உள்ள மறு காப்பீட்டாளர்கள் குழுவால் காப்பீடு அல்லாத சொத்துக்களுக்கான பாதுகாப்பு பெறப்பட்டது.

### மனித வளங்கள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது NITF பல முன்னேற்றமான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக அமுல்படுத்தியது. இந்த நடவடிக்கைகள் நிறுவனத்துடன் தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டுத் தகைமையை மேம்படுத்துவது தொடர்பில் பலமான, சாதகமான பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்புக் கொள்கைகள் ஊடாக நிறுவனத்தின் திறன்வாய்ந்த குழுவை தக்க வைத்துக்கொள்வதும் சீர்படுத்துவதுமாகும். NITF நாடு பூராகவும் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை உயர் மட்டத்தில் வழங்குகின்ற அதன் தகைமையை பேணிப் பாதுகாக்கவும், மேலும் மேம்படுத்துவதிலும் அதிக வெற்றியை பெற்றுள்ளது. மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, அதன் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அதிகரித்து வரும் தேவைகளுக்கு இணையான செயற்பாட்டுத் திறனை மேலும் அதிகரிக்க திறமைமிக்க புதிய ஆட்களை ஆட்சேர்ப்பு செய்யும் முயற்சியில் நிறுவனம் தொடர்ந்தும் ஈடுபட்டது. இந்த செயன்முறை முழுவதும் நிறுவனம் ஒரு கடுமையான பூச்சியம் - பாகுபாட்டுக் கொள்கையைப் பராமரிக்கிறது. இதன் மூலம் பாலினம், இனம், சாதி, அல்லது மதம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் தகுதிவாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய நிபுணர்களை சேவை வழங்குவதற்காக வரவேற்கிறது. இந்த வகையில் NITF நேர்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் பன்முகத் தன்மையை ஈாக்கும் நிறுவன கலாசாரத்திற்குள் வேலை செய்யக்கூடிய சிறந்த தொழில்முறை நிபுணர்களை ஈர்க்கக்கூடியதாக இருக்கிறது. காப்புறுதிப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இந்தக் கலாசாரம் NITF இனுடைய தொடர்ந்து வரும் தகைமையில் முக்கிய இடத்தை பெறுகிறது. மேலும், இது, இலங்கையின் சமூக பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்துவதற்கு சாதகமான பங்களிப்பை மேற்கொள்வதோடு, இறுதியாக வளமான மற்றும் பாதுகாப்பான சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தைத் தோற்றுவிக்க உதவுகிறது.

### ஆட்சேர்ப்பு

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டில் கணிசமான எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ஆட்சேர்ப்பு பற்றிய விபரங்களை கீழே குறிப்பிட்டவாறு தொகுக்கலாம்.

| | 2016 | 2015 |
|---|---|---|
| நிறைவேற்றுநர் அல்லாத | 25 | 12 |
| நிறைவேற்று | 3 | 3 |

உதவிப் பொது முகாமையாளர் - நிதி மற்றும் கூட்டாண்மை விடயங்கள், உதவிப் பொது முகாமையாளர் - காப்புறுதி மற்றும் மனிதவள முகாமையாளர் மற்றும் நிர்வாகம் என்பன 2016 ஆம் ஆண்டுக்குரிய ஆட்சேர்ப்புக்களாகும்.

### பாலின சமநிலை



ஆண் 79
பெண் 126
சராசரி வயது (வருடங்கள்) 31

# குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

2016 பெப்ரவரி 28

சிறந்த வாடிக்கையாளர் சேவை நிகழ்ச்சி

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், அதன் ஊழியர்களுக்கு சிறந்த வாடிக்கையாளர் சேவை நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இது, 2016 பெப்ரவரி 28 ஆம் திகதி தேசிய வர்த்தக மைய வளாகத்தில் இடம்பெற்றது. நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவையை சிறந்த தரத்திற்கு இட்டுச் சென்று, வாடிக்கையாளரின் திருப்தியை அதிகரித்து, செயற்பாட்டு செயற்திறனை மேம்படுமுத்துவதே இதன் நோக்கமாகும்.

வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கு சிறந்த முறையில் பதிலளிப்பது எவ்வாறு என்பது பற்றி அறிவுறுத்துவது இந்த நிகழ்வின் பிரதான அம்சமாகும். முக்கியமாக, கேள்விகள் கேட்கப்படும் போது செயற்திறனுடனும், பூர்த்தியான முறையிலும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் எதிர்பார்ப்புக்கு அதிகமாக சிறந்த சேவையை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது என்பது பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இது, NITF இன் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக உதவும் என்றும், தினமும் வருகைதரும் ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் தேவைகளை சிறந்த சேவை மனப்பாங்குடன் பெற்றுக்கொடுக்க உதவியளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சி சிப்கொம்-1 (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளரும் ஆலோசகருமான திரு. தம்மிக களப்புகே அவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.





2016 ஏப்ரல் 18

NITF தமிழ் - சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம் - 2016

2016 ஏப்ரல் 18 ஆம் திகதி NITF வளாகத்தில் தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு இடம்பெற்றது. NITF இன் தலைவர் திரு. மஞ்சுள டி சில்வா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சனத் சி டி சில்வா ஆகியோர், ஊழியர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்துவத்தினருடன் இணைந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



24.05.2016

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு **NITF** ரூபா 145 மில்லியன்

2016 மே மாதத்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட 4 இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு வழங்கவென, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF) இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு 145 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை உடனடி நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்காக வழங்கியது.

2016 ஏப்ரல் மாதம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய இயற்கை அனர்த்த மற்றும் உடனடி நிவாரணங்கள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம், இலங்கையில் காப்புறுதி செய்து கொள்ளாத மக்களுக்கு இயற்கை அனர்த்தங்களின் போது பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். இதன் மூலம் அவ்வாறான மக்களுக்கு சமூகப் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுப்பதில் சிறந்த பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியும். இதன் மூலம், அரசாங்கம் மற்றும் தேசிய பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டு, இடர் முகாமைத்துவத்திற்கென்றே ஒரு காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், NITF வெள்ளம் மற்றும் மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் சிறிய வர்த்தகங்களை மீளக் கட்டியெழுப்பும் செலவினங்களை ஏற்றுக்கொள்ளவும் தயாராகவுள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம், வருடம் ஒன்றுக்கு ரூபா 10 பில்லியன் வரை காப்பறுதி வழங்கப்படுகின்றன. இது, உலகின் மிகப் பெரிய காப்புறுதி நிறுவனங்களினால் மீள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகளவில் இழப்பீடுகள்

கோரப்படலாம் என்பதை NITF அறிந்திருந்தாலும், மீள் காப்புறுதியை ஏனைய நிறுவனங்களில் சிறப்பாக மேற்கொண்டுள்ளது. நிறுவனத்தின் நிதி சக்தியும், சர்வதேச காப்புறுதி நிறுவனங்களின் மீள் காப்புறுதியும் காரணமாக இவ்வாறான நட்டஈட்டுக் கோரல்களை எந்தவித சவால்களுமின்றி முகம் கொடுக்கத் தயாராக இருக்கும் என்பது சந்தேகமில்லை.

### 2016 ஜுன் 15
### மீள் காப்புறுதி பயிற்சி நிகழ்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் “மீள் காப்புறுதியின் மூலம் நிலையான தன்மையை எவ்வாறு உருவாக்குவது” என்ற தொனிப்பொருளில் பயிற்சித் திட்டம் ஒன்றை நடத்தியுள்ளது. 2016 ஜுன் 15 ஆம் திகதி, கொழும்பு சினமன் லேக்லைட், டியுக்ஸ் கோட் இல் இந்த நிகழ்வு இடம்பெற்றது. NITF இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.சனத் சி டி சில்வா அவர்களால் இது முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், உள்நாட்டு நிறுவனங்களின் சிறந்த பங்கேற்பு அவதானிக்கப்பட்டது. இதில் கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனம், MBSL காப்புறுதி, ஒறியன்ட் காப்புறுதி, செலிங்கோ பொதுக் காப்புறுதி, அமானா தக்காபுல் காப்புறுதி, LOLC காப்புறுதி, சனசக்தி காப்புறுதி, ஏஷியன் அலாயன்ஸ் காப்புறுதி, கென்டினன்டல் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிடெட், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சனச பொதுக் காப்புறுதி, பீப்பள்ஸ் இன்ஷுவரன்ஸ், அலியான்ஸ் இன்ஷுவரன்ஸ் லங்கா நிறுவனம், HNB பொதுக் காப்புறுதி NITF இன் ஊழியர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



### 2016 ஓக்ஸ்ட் 05
### NITF மற்றும் பிறவுன்ஸ் ஹெல்த்கெயர் பிரைவேட் லிமிட்டெட் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

NITF மற்றும் பிறவுன்ஸ் ஹெல்த்கெயர் பிரைவேட் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களுக்கு இடையில் 2016 ஓகஸ்ட் 05 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில் NITF இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சரத் சி டி சில்வா மற்றும் பிறவுன்ஸ் ஹெல்த்கெயார் பிரைவேட் லிமிட்டெட் பிரதம நிறைவேற்று அதிகாரி டொக்டர் கே.ரி.இறைவன் ஆகியோர் NITF இன் தலைவர் திரு. மஞ்சுள டி சில்வா மற்றும் பிறவுன்ஸ் ஹெல்த்கெயார் பிரைவேட் லிமிட்டெட் செயற்பாட்டுப் பிரிவின் தலைவர் திரு. சரித்த ஜயசிங்க ஆகியோர் முன்னிலையில் கைச்சாத்திட்டனர்.



### 2016 ஒக்டோபர் 25
### மீள் காப்புறுதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சி

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2016 ஒக்டோபர் 25 ஆம் திகதி கொழும்பு சினமன் லேக்சைட் ஹொட்டேலில் “ஒப்பந்தங்களை உருவாக்குவது தொடர்பான நிகழ்ச்சி” ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வானது, இந்தியாவின் ஆதித்தியா பிர்ளா காப்புறுதி தரகு நிறுவனத்தின் பங்கேற்புடன் இடம்பெற்றது. ஆதித்யா பிர்ளா இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் நிறுவனத்தின் மீள் காப்புறுதி வர்த்தகத் தலைவர் திரு. நிட்டின் வைத்தியா இந்தப் பயிற்சியை நடத்தி வைத்தார். NITF இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சனத் சி டி சில்வா உட்பட நிறுவனத்தின் ஊழியர்கள் பலரும் அழைக்கப்பட்ட நிறுவனங்களின் ஊழியர்களும் இதில் கலந்துகொண்டனர்.

# குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்




2016 டிசம்பர் 02

NITF மற்றும் ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸ் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிறுவனம் மற்றும் ஆசிரி ஹொஸ்பிட்டஸ் என்பனவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று 2016 டிசம்பர் 02 ஆம் திகதி NITF வளாகத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் NITF நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சனத் சி டி சில்வா மற்றும் ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி டொக்டர் மஞ்சுள கருணாரத்ன ஆகியோர் NITF இன் தலைவர் திரு. மஞ்சுள டி சில்வா மற்றும் ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸின் செயற்பாட்டுப் பணிப்பாளர் டொக்டர் சமந்தி டி சில்வா ஆகியோர் முன்னிலையில் கைச்சாத்திட்டனர்.



# நிலையான தன்மை பற்றிய அறிக்கை

சமூகப் பொறுப்புடைய ஒரு நிறுவனமாக செயற்படுவதன் முக்கியத்துவத்தை NITF நன்கு அறிந்துள்ளதனால், அதன் மூலம் ஆர்வம் காட்டுவோருக்கு நீண்டகால பெறுமதியைப் பெற்றுக்கொடுக்க முடிகிறது. அதற்கென தயாரிக்கப்பட்ட ஆவணங்களை நிறுவனம் கொண்டுள்ளது. இதில் முக்கியமாக, குழுமப் பெறுமதிகளில் சகல வர்த்தகப் பிரிவுகளிலும், அனைத்து மட்டங்களிலும் இது எதிர்பார்க்கப்படுகின்றது. NITF இன் வெற்றிக்கு இது முக்கிய காரண கர்த்தாவாக அமைந்திருக்கிறது. அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பாடு என்பனவற்றை அண்மைக்காலத்தில் மிக நன்றாகப் பிரதிபலித்த NITF, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக சிறந்த பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்து தேவையுடைய பிரிவினருக்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த அடிப்படையில் NITF தொடர்ச்சியாக வளர்நது வரும் சமூகத்தினருக்கு உதவும் வகையில் செயற்பட்டு வருகிறது. அது, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் தொடர்ந்தும் பணியாற்றி வருகிறது. இவற்றைக் கருத்திற் கொண்டு NITF பல்வேறு பங்காளித்துவங்களை ஏற்படுத்தியுள்ளதோடு, அதனுடன் நிறுவனத்தின் உற்பத்திக் கோவையையும் அதிகரித்துள்ளது. மக்களுக்கு சிறந்தனவற்றைப் பெற்றுக்கொடுக்கும் வகையில், மக்கள், நிறுவனத்தின் இலாபம் மற்றும் எமது சூழல் ஆகிய மூன்று வகையான அவதானங்களை மைமாகக் கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

2016 ஆம் ஆண்டில் NITF பல்வேறு குழும சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதன்மூலம், அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பாட்டை அடைந்துகொள்ளும் வகையில் பணியாற்றியுள்ளது. அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன:

### மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் (NITF) நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு “மகிழ்ச்சி என்பது, நாம் பெறுவதில் இல்லை, கொடுப்பதிலேயே உள்ளது என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது. இதன் மூலம் NITF மற்றும் அதன் ஊழியர்கள் மஹகரம புற்றுநோய் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தனர். வைத்தியசாலை வளாகத்தில் செப்டம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் எம்.வை.கே. வில்பிரட் மற்றும் நலன்புரி சங்க அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



### NITF இரத்ததான முகாம்

பொசோன் போயா தினமான 2016 ஜுன் 17 ஆம் திகதி NITF இன் நலன்புரி சங்கம்
இரத்ததான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. NITF வளாகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் NITF இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.சனத் சி டி சில்வா உட்பட மற்றும் பலரும் இதில் கலந்து கொண்டனர். கடுமையான நேய்களினால் பாதிக்கப்பட்டு, இரத்த தேவையினால் கஷ்டப்படும் மக்களுக்கு உதவும் முகமாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



# கூட்டிணைப்பு ஆளுகை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், சிறந்த கூட்டாண்மை ஆளுகை, நீண்டகாலம் நீடித்திருக்கும் பெறுமதியை விளைவிக்கின்றது என்பதை முழுமையாக அங்கீகரிப்பதனால், அதன் கூட்டாண்மை ஆளுகையைத் தொடர்ந்தும் சீரமைக்கத் திட்டமிடுகிறது. இந்த நிறுவனம், கூட்டாண்மை ஆளுகை, சிறந்த நடைமுறைகள், நடத்தைக் கோவை, கூட்டாண்மை ஆளுகைக்கான பொது நிறுவனங்களின் வழிகாட்டிகள் மற்றும் கூட்டாண்மை ஆளுகையுடன் தொடர்புபட்ட இயைபான வழிகாட்டிகள், பரிந்துரைக்கப்பட்ட சிறந்த நடைமுறைகள் உள்ளடங்கலாக, ஆயின், அவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படாத கைத்தொழில் மற்றும் நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து வெளிவாரி ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளையும் பேணி வருகின்ற அதேவேளை, தொடர்ச்சியாக அதன் செயற்பாடுகள், நடைமுறைகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் அதிகூடிய, பிரயோகிக்கக்கூடிய ஆளுகைத் தரங்களை மதிப்பிட்டு வடிவமைத்து வருகின்றது.

மேலும், தொழில்முறை ரீதியான உயரிய தரங்களையும், தனிப்பட்ட ஒழுக்கங்களையும் பேணுவதை வலுவாக முக்கியத்துவப்படுத்தும் நடத்தைக் கோவையை NITF உடைய அனைத்து பணியாட்களும் கடுமையாக பின்பற்றுவதுடன், அதற்குக் கட்டுப்பட்டவர்களாகவும் நடக்கின்றார்கள். இந்த வகையில், NITF அதன் அனைத்துப் பங்குதாரர்களான, வாடிக்கையாளர்கள், பணியாட்கள், அரசாங்கம் மற்றும் இலங்கை பொது மக்கள் ஆகிய அனைவரையும் சகல சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கும் பொருட்டு, அதன் முழுமையான செயற்பாடுகளைப் பேணும் நோக்கில் கவனமாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகின்றது.

சிறந்த ஆளுகை முக்கியமான முன் நிபந்தனை ஒன்றாக அமைகின்ற படியால், அதன் ஒவ்வொரு முயற்சியும் பணிப்பாளர் சபை மற்றும் அதன் அனைத்து சம்பந்தப்பட்ட குழுக்கள் என்பவற்றுக்கு இடையில் வினைத்திறனான, பயன்மிக்க மற்றும் கூடிய ஒத்துழைப்பையும் தொடர்பாடலையும் பேணுவதை உறுதிப்படுத்தும் வகையில் அமைகிறது.

கூட்டிணைப்பு ஆளுகை நடவடிக்கைகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் என்ற வகையில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் NITF இடர் அடிப்படையிலான மூலதன அணுகுமுறை, மூலதன போதியளவு விகித கணக்கீடு மற்றும் கடன் விகிதத்தைப் பெறுதல் என்பவற்றை நடைமுறைப்படுத்தியது.

NITF, 2016 ஆம் ஆண்டிலிருந்து இடர் அடிப்படையிலான மூலதனத் (RBC) தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்க ஆரம்பித்துள்ளது. அது, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு (முன்னர் IBSL) அறிக்கையிடுகிறது.

NITF உடைய ஆற்றல்மிகு நிதி நிலைமையை வெளிப்படுத்தும் வரையறுக்கப்பட்ட பிற்ச் மதிப்பிடல் நிறுவனத்திலிருந்து NITF AA-(lka) கடன் மதிப்பிடலைப் பெற்றுள்ளது. 31.12.2016 இல் உள்ளவாறு மூலதனப் போதியளவு விகிதம் (CAR) 586% ஆக உள்ளது. இது, குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் கடன் தீர் திறன் நிலைமையான 120% ஐ விடக் கூடுதலாகவும், அமுலாக்க வரையறையான 160% ஐ விடவும் அதிகமாக உள்ளது. ஆகவே, NITF போதியளவு நிதி நிலைமையைப் பேணியுள்ளதுடன், NITF இனுடைய ஐந்தொகை மீதி முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளது.

## பணிப்பாளர்கள் சபை

கூட்டாண்மை ஆளுகை தளத்தில் பணிப்பாளர் சபை முக்கிய ஒரு உறுப்பாவதுடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையின் அனைத்து உறுப்பினர்களும் நிறுவனத்தின் இலக்குகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் வகையில், அனைத்து இயைபான அரசாங்கக் கொள்கைகள், அரசியலமைப்பு மற்றும் சட்டத் தேவைப்பாடுகளோடு இணங்கி வினைத்திறனாக NITF முகாமைத்தவம் செய்யப்பட்டுள்ளது என்பதை அதன் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் உறுதிப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பையும் கொண்டுள்ளது.

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு முறையான ஆளுகை முறைமை தொடர்ந்தும் இருந்து வருகின்றது என்பதை உறுதிப்படுத்தலை இது உள்ளடக்குகிறது. 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக சபையின் தலைவர் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார். நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளும், ஏனைய செயற்பாடுகளும் ஒழுக்க முறையாகவும், ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்டக் கட்டமைப்புக்குள் முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, அதன் பங்குதாரர்களுக்கு நீண்டகால நிலையாதார பெறுமதியை உருவாக்கவும், வழங்கவும் வேண்டிய பொறுப்பை இயக்குநரகம் கொண்டுள்ளது. பணிப்பாளாகளின் பொறுப்புகள் குறுகிய, நடுத்தர, நீண்டகால இலக்குகள் உருவாவதையும், முழுமையான வியாபாரத் திட்டத்திற்கான வழிகாட்டி, தெளிவாக வடிவமைக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட மனிதவள முறைமை, நியதிச்சட்ட ரீதியான இணங்கி நடத்தல் தொடர்பான வழிகாட்டிகள், உள்ளகக் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ வழிகாட்டிகள், அத்துடன், வியாபாரத்தில் விசாலமான மூலதனங்களை மீளாய்வு செய்தல் என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில், தொழில் முயற்சியாண்மைத் தலைமைத்துவம் மற்றும் உபாயநுட்ப திசை தொடர்பான ஏற்பாடுகளில் சூழ்ந்திருக்கின்றது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் NITF 11 சபைக் கூட்டங்களை நடத்தியுள்ளது. இந்தக் கூட்டங்கள் அனைத்திலும் சிறந்த வருகையை காணக்கூடியதாக இருந்தது. இந்த விடயம், சபை, அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்பதை அத்தாட்சிப்படுத்துகிறது. நிதி நிலைமை, வியாபார விருத்திகள், இலக்குகளை அடைதல், இடர் வெளிப்பாடுகள் மற்றும் சட்டத்துடன் இணங்கி நடத்தல் ஆகிய விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கி, சகல விடயங்கள் பற்றியும் NITF சபைக்கு விரிவாக அறிக்கையிடுகின்றது.

## சபைக் கூட்டங்களும் சமூகமளித்தலும் - 2016

நிறுவனத்தின் தொடர்ந்து நடைபெறும் வியாபாரம் பற்றிக் கலந்துரையாடுவதற்கு NITF இன் சபை தேவையான சந்தர்ப்பங்களில் கிரமமாக கூட்டங்களை நடத்தி வருகிறது. கூட்டத்திற்காக சமூகமளிக்காத அனைவரும் ஏற்கனவே அதுபற்றி அறிவிப்பதோடு, சமூகமளிக்காதவர்களின் விபரங்கள் கூட்டம் நடைபெறும் போது சுருக்கமாகப் பதிவு செய்யப்படும். சபைக் கூட்டம் தொடர்பான ஆவணங்கள் அங்கத்தவர்களிடையே உரிய காலத்தில் பங்கிடப்படும். இதன் மூலம், வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் ஒன்றை உறுதிப்படுத்தலாம். இந்த வருட காலப்பகுதியின் போது 11 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

வருகை அட்டவணை

| சபைக் கூட்டங்கள் | தலைவர் உட்பட குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை | தலைவர் உட்பட சபை அங்கத்தவர்கள் கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டம் நடத்த தேவையான அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஜனவரி | 07 | 05 | 05 |
| மார்ச் | 07 | 05 | 05 |
| ஏப்ரல் | 07 | 06 | 05 |
| மே | 07 | 07 | 05 |
| ஜூன் | 07 | 05 | 05 |
| ஜூலை | 07 | 06 | 05 |
| ஆகஸ்ட் | 07 | 06 | 05 |
| செப்டம்பர் | 07 | 05 | 05 |
| ஒக்டோபர் | 07 | 07 | 05 |
| நவம்பர் | 07 | 07 | 05 |
| டிசம்பர் | 07 | 07 | 05 |

### சபை செயலாளரின் பங்கு

சபையின் செயலாளர் திருமதி கயானி சியம்பலாகொட சபைத் தீர்மானங்கள் அனைத்தையும் பதிவு செய்வதுடன், சபைக் கூட்டங்களின் சுமுகமான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் பணிப்பாளர்களுக்கு அறிவித்தார்.

### நிதிக் கூற்றுக்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. அத்துடன், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் தேவைப்பாடுகளோடும் இவை இணங்கியிருந்தன.

### கொள்முதல்

நிறுவனத்தின் அனைத்துக் கொள்முதல் பணிகளும், நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டிகள் மற்றும் அரசாங்க விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கு இணங்க செயற்படுத்தப்பட்டன. அனைத்துக் கொள்முதல்களும் கரிசனையில் இருக்கும் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு, அமைச்சரவை சபையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு (CAPC), அமைச்சு கொள்முதல் குழு (MPC) மற்றும் திணைக்கள கொள்முதல் குழு (DPC) ஆகியவற்றின் உதவியோடு நடைபெற்றன.

### கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது, நிறுவனத்தின் அனைத்து சம்பந்தப்பட்ட கணக்காய்வுப் பணிகளின் உண்மைத் தன்மை மற்றும் சரியான தன்மையுடன் தொடர்புபட்ட பல்வேறு வகையான பணிகளை வடிவமைப்பதற்கும், அமுல்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கிறது. இந்தப் பணிகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட “கணக்காய்வுக் குழுக்களுக்கான சிறந்த நடைமுறைகள் கோவை□யில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வுக் குழுவின் வரம்பெல்லை மற்றும் அதனோடு தொடர்புபட்ட பொறுப்புகள் 2016 ஆம் ஆண்டில் பின்வருமாறு ஸ்தாபிக்கப்பட்டது.

- வருடாந்த கணக்காய்வுத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டன.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.
- செலவு குறைப்பு மற்றும் அனாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்தல் ஆகிய இரண்டு நோக்கங்களையும் அடைவதற்காக வெவ்வேறு அலகுகளின் செயற்பாடுகள் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டன.
- கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதங்கள் தொடர்பாக, கணக்காய்வாளர் நாயகத்துடன் சீரான பின்தொடர்தல்கள்.
- நியதிச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கி செயற்பட்டதா என்பதைப் பரீட்சித்தல்.
- நிதிக் கூற்றுக்களையும் நிதிச் செயற்பாடுகளையும் மீளாய்வு செய்தல்.
- காலாவதியான வெளியக மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் முகாமைத்துவக் கடிதங்களும் மீளாய்வு செய்யப்பட்டு, குறைதீர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- குழுவின் பரிந்துரைகள் / வழிகாட்டிகள் என்பவற்றின் அமுல்படுத்துகையை மீளாய்வு செய்தல்.
- விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் செயற்பாடு / இணக்கம்

கணக்காய்வுக் குழு 2016 ஆம் ஆண்டில் நான்கு சந்தர்ப்பங்களில் சந்தித்தன. மீளாய்வுக்கு உட்பட்ட இந்த வருடம் உள்ளகக் கட்டுப்பாடுகளை மேற்கொண்டதில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாதாந்தம் தயாரிக்கப்பட்டதோடு, அனைத்துப் பிரச்சினைகள் மற்றும் கரிசனைகள் என்பவற்றை இனங்காண்பதற்காக பின்தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இனங்காணப்பட்ட பலவீனங்களை முறியடிப்பதற்காகவும், கட்டுப்பாடுகளுடைய திறன்கள் மற்றும் வினைத்திறன்களை மேம்படுத்துவதற்கும் உரிய சாத்தியமான வழிவகைகள் இனங்காணப்பட்ட இடர்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டன. இன்னுமொரு மேலதிக

# கூட்டிணைப்பு ஆளுகை

வழிவகையாக, உள்ளகக் கணக்காய்வுக் குழு பல்வேறு காப்புறுதிக் கம்பனிகளுக்கும் சமூகமளித்து, அந்த நிறுவனங்களுள் NITF உடைய விதிகளும் ஒழுங்கு விதிகளும் எவ்வாறு ஒழுகி நடக்கப்படுகின்றன என்பதைக் கண்காணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது.

| ஆய்வுக் குழுவின் உறுப்பினர்கள் | சமூகம் |
|---|---|
| திரு. ஏ.ஆர்.தேஷப்பிரிய (தலைவர்) (01.01.2016 - 13.07.2016) | 2 |
| திரு. கே.டி.எஸ்.ருவன்சந்திர (தலைவர்) (12.08.2016 - 30.12.2016) | 2 |
| திரு. ரவின் பெர்னாண்டோபுள்ளே | 3 |
| திரு. அசேந்திர சிறிவர்தன | 3 |

### வெளிவாரிக் கணக்காய்வு

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 154(1) க்கு அமைவாக, கணக்காய்வாளர் நாயகம் வெளிவாரி கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொதுக் கூட்டுத்தாபனங்கள், வியாபாரங்கள் அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றும் நிறுவனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்ய கணக்காய்வாளர் நாயகம் தேவைப்படுத்தப்பட்டுள்ளார். 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இந்த நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் வருடாந்தக் கணக்காய்வை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக, இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 154(4) க்கு அமைவாக கணக்காய்வாளர் நாயகம் மேற்கொண்டார்.

### மூலதனக் குழு

மூலதனக் குழுவின் பொறுப்புக்கள் இரண்டு பிரதான குழுவாகப் பிரிக்கப்படும். அவையாவன - ஆற்றல் மிக்க மூலதனக் கொள்கையை விருத்தி செய்தலும், NITF இனுடைய மூலதனக் கொள்கை தகுதிகாண் மற்றும் வழிகாட்டல்களுடன் இணைந்து செல்லக்கூடிய வகையில் அந்த மூலதனக் கொள்கையை வினைத்திறனாக அமுல்படுத்துதலை உறுதிப்படுத்தல் என்பனவாகும். மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடம் NITF உடைய மூலதன இலாகா, ஆதன ஒதுக்கு மற்றும் ஆதன பொறுப்பு, பொருத்து முகாமைத்துவம் என்பன ஆராயப்பட்டதுடன், முதலீட்டுக்கான புதிய வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கான முயற்சியில் ஈடுபட்டமையும் காணக்கூடியதாகவுள்ளது. மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருட காலப்பகுதியில் ஒரு மூலதனக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

| மூலதனக் குழு அங்கத்தவர்கள் | சமூகம் |
|---|---|
| திரு. ரவின் பெர்னாண்டோபுள்ளே (தலைவர்) | 1 |
| திரு. அசேந்திர சிறிவர்தன | 1 |
| திரு. ஏ.ஜே.டி.டயஸ் | 1 |

### பணிக் குழு

SRCCT நிதியத்தின் பணிக்குழு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் யுத்தம் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் என்பவற்றோடு சம்பந்தப்பட்டு, செலுத்த வேண்டிய கோரிக்கைகள் தொடர்பான விடயங்களைத் தீர்மானிப்பதற்காக உருவாக்கப்பட்டது. பணிக்குழு பொது காப்புறுதிக் கம்பனிகளின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. பணிக்குழுக் கூட்டம் மாதாந்தம் நடைபெறும். இந்தக் கூட்டங்களில் கோரிக்கைகள், கொடுப்பனவுகள், தீர்மானங்கள், மேற்கொள்ளப்படுவதுடன், அவை தொடர்ந்து அந்த தீர்மானங்கள் SRCCT நிதியத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 04 பணிக் குழுக்கூட்டங்கள் நடைபெற்றன.

### தொழில்நுட்ப ஆலோசனைக் குழு **(TAC)**

SRCCT நிதியத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் தலைவர்களை உள்ளடக்கிய SRCCT நிதியத்தின் கூட்டு மூலோபாயத் தீர்மானங்களை மேற்கொள்ள உருவாக்கப்பட்டது. TAC யில் கூட்டாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக அங்கீகாரத்திற்காக NITF இன் சபைக்கு அனுப்பி வைக்கப்படும். 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 7 TAC கூட்டங்கள் நடைபெற்றன.

### மனித வள ஆளுகை

இதுபோன்ற ஒரு மாறும் கைத்தொழிலில் எமது பணியாட்களின் திறமை, செயற்பாடு, அர்ப்பணிப்பு என்பன எமது வெற்றிக்கு மைல் கற்களாக அமைந்துள்ளன என்பதை நாம் இனங்கண்டு விளங்கிக் கொண்டுள்ளோம். அவர்களின் தொழில்நுட்பமுறை, நிபுணத்துவம் மற்றும் கண்டுபிடிப்புக்களைத் தழுவிக்கொள்வதற்கான தயார்நிலை என்பன எமது வியாபாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல உதவியதுடன், சிறந்த, உயர் தரங்களை உடைய மூலோபாய மனிதவளத் திட்டமிடல் தேவை என்பதை நாம் உணர்கின்றோம். இந்த வகையில், NITF நிறுவனத்திற்குள் நிபுணத்துவம் மற்றும் திறமைகளைத் தக்க வைத்துக்கொள்ளும் நோக்குடன் தனிப்பட்ட அபிவிருத்தி மற்றும் செயற்திறனை வளர்ப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் கவர்ச்சிகரமான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக மனித வள பிரிவில் ஒரு விரிவான திறன் அபிவிருத்தித் திட்டம் ஒன்று உள்ளதுடன், உள்ளே மற்றும் வெளியே இருந்து கொணரப்பட்ட வளவாளர்களைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட துறைகளில் அதன் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் NITF அதிக கவனம் செலுத்தி வருகிறது. நிறுவனத்திற்குள்ளும் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் தொழில்நுட்ப அறிவு மற்றும் தகைமைகளை வளர்ப்பதற்கு ஒவ்வொரு பணியாட்கள் மட்டத்திலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எமது கனிஷ்ட முகாமையாளர்களுக்கு அவர்களின் தொழில் வாழ்க்கையில் முன்னேறும் வாய்ப்புக்களை வழங்குவதற்காக முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

எமது வியாபார நோக்கு மற்றும் மூலோபாய இலக்குடன் ஒருங்கிணைந்து செல்லக்கூடிய வகையில் NITF அதன் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை உன்னிப்பாக அவதானித்து வருகிறது. சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்க்கும் அதேவேளை, அனைத்து மட்டங்களிலும் உள்ள அதன் பணியாட்களுக்கு இரகசியமான வகையில் இருக்கக்கூடிய ஏதேனும் குறைபாடுகளை கலந்தாலோசிக்க ஊக்குவிக்கின்றது. அத்துடன், அந்த பிரச்சினைகளுக்குரிய நிவாரணங்களைப் பெறுவதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நடபடி முறை ஒன்றையும் கொண்டுள்ளது.

நாம் சமமான வாய்ப்பை வழங்கும் தொழில் தருணராக இருக்கின்றோம். எமது ஆட்சேர்ப்பில் இனம், கலாசாரம், மற்றும் பாலினம் என்பவற்றுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதில்லை. அனைத்து பணியாட்களும் பதவி உயர்வுகள், சலுகைகள், பயிற்சிகள் மற்றும் இழப்பீடு சம்பந்தமாக ஒரே மாதிரியான வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். அனைத்துப் பணியாட்களும் விரிவான காப்புறுதிக் கொள்கை ஒன்றைப் பெற்றுள்ளனர். இவை அவர்களின் குடும்பங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, விதிமுறையற்ற ஒன்றுகூடல்கள் மற்றும் சுற்றுலாக்களை ஒழுங்கமைப்பதற்காக நலன்புரி குழுவொன்றும் உள்ளது.

மனிதவள மூலக்கூறு மீதான எமது கவனம் வியாபாரத்தை நடத்துவதற்கு ஒரு முக்கிய கூட்டாண்மைப் பெறுமதியாக உள்ளது. எனவே, நாம் எமது பணியாட்கள், இணக்கக் கட்டமைப்பு, நிலையாதாரம் என்பவற்றுக்குள் உயரிய பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயல்திறன் முகாமைத்துவ முறைமையை வைத்துள்ளோம். 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் NITF பல்வேறுபட்ட உள்ளக மற்றும் அலுவலகத்திற்கு வெளியே பயிற்சித் திட்டங்களை நடத்தியது. இவை, 39 உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களையும், உலகளாவிய உடல்நல பாதுகாப்புக்கான தேசிய உடல்நலக் காப்புறுதிக் கூட்டம் மற்றும் மூன்றாவது ஏசிஸ் விவசாயக் காப்புறுதி மாநாடு என்பவற்றை உள்ளடக்கி இரண்டு வெளிநாட்டுப் பயிற்சிகளையும் உள்ளடக்குகிறது. 2016 ஆம் ஆண்டு NITF அதன் வெளிப்புறச் சுற்றுப் பயிற்சித் திட்டத்தை லாயா லெஷர் கெக்குலு கங்க ஹொட்டேலில் நடத்தியது.

## தகவல் தொழில்நுட்ப ஆளுகை

ஆளுகையின் இந்த அம்சம் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் தொழில்நுட்பத்தைச் சுற்றியுள்ளது. அத்துடன், இது, வியாபார இலக்குகளை வகுத்துக்கொள்வதோடு, இணைந்து செல்கிறது. NITF காப்புறுதி மறுகாப்புறுதி, நிதி முகாமைத்துவக் கணக்கியல், கொள்முதல்கள், மனித வளங்கள், திறைசேரி மற்றும் மூலதனம் ஆகிய முக்கிய தொகுதிகளைக் கொண்ட விரிவான வலையமைப்பு முறைமை ஒன்றைக் கொண்டுள்ளது. NITF இனுடைய அனைத்து செயற்பாடுகளும், தன்னியக்கப்படுத்தப்பட்டு, நாடு பூராகவும் வலையமைக்கப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டு NITF இன் முகாமைத்துவம் அதன் வாடிக்கையாளர்களுக்கு துரிதம், திறன் மற்றும் செயற்திறன்மிக்க சேவைகளை மேம்படுத்துவதையும் அதன் பயனாளி சந்திக்கும் தளங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் பாதுகாப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறது.

# நிறுவன இடர் முகாமைத்துவம்

இடர்களை வெற்றிகரமாகக் கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அதற்குப் பதிலளித்தல் என்பன தொடர்பான NITF இன் திறன் அந்நிறுவனத்தின் வெற்றிக்கு மையமாக அமைந்துள்ளது. இடர்களைத் தணிப்பதற்கான வினைத்திறனான வழிமுறைகளைக் கண்டறிவதன் மூலம் NITF நிச்சயமற்ற தன்மையினால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பது மாத்திரமன்றி, ஆயின், பல சந்தர்ப்பங்களில் வியாபாரத்திற்கு பெறுமதி சேர்க்கும் புதிய வாய்ப்புக்களையும் உருவாக்குகிறது. ஒரு வினைத்திறனான இடர் பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவ மூலோபாயத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, நிதிச் செயற்பாட்டு இலக்குகளின் விதிமுறைகள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் வியாபாரத்திற்கு சாத்தியமான ஒவ்வொரு எதிர்பார்க்கக்கூடிய வளர்ச்சியையும் கருத்திற் கொள்வதற்கான முன்னோக்கான இடர் முகாமைத்துவ உக்திகளின் தொடர்ச்சியான சீராக்கம் மற்றும் செயற்பாட்டை தொடர்ந்து வலியுறுத்துகிறது. ஒருபுறம் இலாபம் மற்றும் தொழில்முனைவோர் ஆற்றல் என்பவற்றுக்கு NITF தொடர்ச்சியாகப் பாடுபடுவதுடன், மறுபுறம், சமூக உணர்வுள்ள நிறுவனமாக தொடர்ந்து செயற்பட்டு வருவதனால், அதன் தொடர்ச்சியான வெற்றிக்கு செயற்திறன்மிக்க இடர் முகாமைத்துவ உபாய நுட்பம் முக்கியமாக அமைகிறது.

எமது இடர் முகாமைத்துவச் செயற்பாடு அனைத்து தனிப்பட்ட வியாபாரப் பிரிவுகளையும் சென்றடைவதோடு, ஒவ்வொரு துறையினுடைய செயற்பாடுகளோடு இணைந்துள்ள இடர்களை அடையாளம் காணவும், தணிக்கவும் எண்ணுகிறது. எதிர்கால வியாபார வாய்ப்புக்களின் வளர்ச்சிக்காக, விசேடமாக, நிறுவனத்தின் நேரடியான மற்றும் முறைமுகமான வாடிக்கையாளர் தளத்தை மேம்படுத்தல் மற்றும் அனைத்து ஏனைய தொடர்புபட்ட பங்குதாரர் குழுமங்களின் மேம்பாடு என்பவற்றை உயிர்ப்பாகக் கண்டறிகின்ற அதேவேளை, நிறுவனம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக ஒட்டுமொத்த பார்வையில் நோக்கப்படுகிறது.

இடர் முகாமைத்துவச் செயற்பாடு NITF இன் திறனுள்ள பணிப்பாளர் சபையிடம் மதிப்பிடல் மற்றும் செயற்பாட்டின் இறுதிப் பொறுப்பு என்பன வழங்கப்பட்டதோடு, நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திற்கும் சுமத்தப்பட்டுள்ளது. கிரமமான மதிப்பீடுகள் முடிவடைந்த பின்னர், பணிப்பாளர் சபை சம்பந்தப்பட்ட இடருக்கான காரணிகளை உருவாக்கும் வியாபாரத் திட்டங்களை வகுக்க வேண்டும். அதனையடுத்து, NITF இனுடைய கணக்காய்வுக் குழு முக்கிய இடர் கொள்கைகள், அதிகாரங்கள், சகிப்புத்தன்மைகள் என்பனவற்றை இனங்காண்பதன் மூலம், விரிவான வியாபார நுட்பங்களை மேற்பார்வை செய்யப் பொறுப்படையது. அத்துடன். இறுக்கமான இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு கிரமமான மதிப்பீட்டை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

இடர்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களும் பெறப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த கணக்காய்வுக் குழு உட்கட்டமைப்பு, தனிப்பட்ட திறன்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகளை உருவாக்குகின்ற மற்றும் செயற்படுத்துகின்ற வடிவமைப்புக்களை வகுக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது. ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர் கட்டமைப்புக்குள் வினைத்திறனை ஊக்குவிக்கின்ற மற்றும் பாதுகாப்பான செயற்பாடுகள் என்பன இருக்கின்ற வகையில் அனைத்து இடர் நெறிமுறைகளும் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு கிரம அடிப்படையில் சுயாதீனமான கணக்காய்வு நடைபெறுகின்றது.

NITF நிறுவனத்தினால் எதிர்கொள்ளப்படும் அனைத்து இடர்கள் மீதும் முழுமையான கருத்து ஒன்றை எடுப்பதற்காக வியாபார இடர் முகாமைத்துவ மாதிரி ஒன்றைப் பயன்படுத்துகின்றது. இந்த வகையில் NITF சக்திவாய்ந்த இடர் அறிவாற்றலின் அனுகூலங்களை பெறக்கூடிய தகைமையை எடுத்துக்கொள்ள முடியும். இடர் அறிவாற்றலின் தொடர்ச்சியான மேம்படுத்தலை உறுதிப்படுத்துவதன் மூலம் NITF பிரயோசமான தகவல்களையும் தரவுகளையும் வழங்க முடியும். இதிலிருந்து கணக்காய்வுக் குழு மற்றும் சபை என்பன பங்குதாரர்களின் பெறுமதியை உயர்த்துவதற்காகவும், அவர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு இவ்வாறு செயற்பட முடியும் என்பதை பகுப்பாய்வு செய்யக்கூடியதாக இருக்கும்.

மூலோபாய இடர் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் அனைத்து முக்கிய அரசியல், தொழில்நுட்ப, சமூக, கலாசார மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் அத்துடன், காப்புறுதித் துறையைச் சார்ந்த போட்டியாளர் மற்றும் வாடிக்கையாளர் இயக்கவியல் என்பவற்றை கண்காணித்து வருகிறது.

நிறுவனத்தின் இடர் வகைப்படுத்தல் கட்டமைப்பு மூன்று வெவ்வேறுபட்ட பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. தடுக்கக்கூடிய இடர் வகை மிகவும் சமாளிக்கக் கூடியதாகவும், நிறுவனத்தில் இருந்தே உருவாகக் கூடியதாகவும் இருக்கிறது. இதனை இணக்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மூலமாக முகாமைத்துவம் செய்யலாம். அதேவேளை, உபாயம் மற்றும் வெளிவாரி இடர்கள் என்பன மறுபுறம் இடர்களைக் குறைப்பதற்கும், திறம்பட செலவு செய்யக்கூடிய வகையில் மாறுபட்ட அணுகுமுறை ஒன்றைத் தேவைப்படுகின்றது.

### தடுக்கக்கூடிய இடர்கள்

#### R01 - மதிப்பு சம்பந்தமான இடர்

NITF அதன் வர்த்தகப் பெயர், பெறுமதிகள் மற்றும் நேர்மைத்திறன் எல்லா நேரங்களிலும் பாதுகாக்கப்பட்டு மேம்பட்டதாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சந்தை மதிப்பை நிர்வகிக்க வேண்டிய தேவையை அங்கீகரிக்கிறது. இந்தக் கோட்பாட்டுடனான வினைத்திறனான வியாபார நிர்வாகம், வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொது மக்கள் NITF மீது தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்துக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமாகும். வினைத்திறனான கட்டுப்பாடு மற்றும் இணக்கம் என்பவற்றை சிறந்த ஆளுகை மற்றும் நிதிப் பொறுப்புகளுடன் உறுதிப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் மற்றும் அனைத்து வியாபார செயல்முறைகளிலும் அது ஊடுருவியுள்ளது என்பதை உறுதிப்படுத்தலாம். NITF நிறுவனத்தின் மதிப்பை எல்லா நேரங்களிலும் பாதுகாக்கக்கூடிய கூட்டாண்மைக் கலாசாரம் ஒன்றைப் பேணுவதுடன், அதனை பலப்படுத்துகிறது.

#### R02 - மோசடி இடர்

எந்தவொரு வகையான மோசடிக்கும் எதிராக கடுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு NITF வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையையும், கணக்கியல் முறைமையையும் நிறுவியுள்ளது. இது, நிறுவனத்திற்கு உள்ளேயோ அல்லது

வெளியேயோ இருக்கலாம். NITF வினைத்திறனான கணக்காய்வுக் குழு பிரிவு ஒன்றைக் கொண்டுள்ளது. இது, மோசடியான நடவடிக்கை மூலமான இடரைத் தணிப்பதை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்திற்குள் உள்ள அனைத்து உள்ளகக் கட்டுப்பாடுகளையும் மீளாய்வு செய்கிறது. முன்னெச்சரிக்கை சமிக்ஞைகள் தெளிவாக வெளிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக தெளிவான தொடர்பாடல் ஊடகங்களுடன் இணைந்த நன்கு கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டு செயன்முறைகளையும் நடபடி முறைகளையும் கொண்டுள்ளது.

### மூலோபாய மற்றும் செயற்பாட்டு இடர்கள்

#### R03 - முன்வைத்தல் அபாயம்

விவேகமான, செயற்திறன்மிக்க மற்றும் வினைத்திறனான இடர் முகாமைத்துவம் மற்றும் தணிக்கை என்பவற்றுடனான பரவலான கொள்கைகளை வைத்துக்கொண்டு NITF அதன் வெளிப்பாடு அனைத்து சந்தர்ப்பங்களிலும் சமச்சீர் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலான இடரைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த உபாய நுட்பம் இறுக்கமான விண்ணப்ப அங்கீகார செயற்பாட்டு முறைகள் மற்றும் புத்திசாலித்தனமான வெளிப்பாடு பேணுகை மற்றும் பாதுகாப்பு வரையறைகள் என்பவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, நிறுவனம், நட்டம் மற்றும் தக்க வைப்பு அனுபவங்கள் என்பவற்றைப் புரிந்து கொள்வதற்காக அதன் தொடர்ச்சியான மேற்பார்வையையும், மதிப்பீட்டையும் அமுல்படுத்துகிறது. அதன் இடர் முகாமைத்துவத்திற்கு முறையான அணுகுமுறை ஒன்றைக் கையாள்வதன் மூலம் NITF அனைத்து வழிகாட்டுதல்களும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்பதை உறுதிப்படுத்த முடியும். இதேவேளை, உள்ளகக் கணக்காய்வுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. பணியாட்களுக்கு எழுத்துறுதி வழங்கும் போது, துல்லியமான இடர் மட்டங்களை வழங்குவதற்காக போதுமான தகுதிகளுடன் இருக்கின்றார்கள் என்பதை உறுதிபப்படுத்துவதற்காக நிறுவனத்திற்குள்ளே பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

#### R04 - மறுகாப்பீட்டு இடர்

மீளாய்வு செய்யப்பட்ட நிதியாண்டின் போது NITF 2017 ஆம் ஆண்டுக்கான அதன் மறுகாப்புறுதிப் பத்திரத்தை உயர் நிதி மதிப்பீடுகள் மற்றும் உயர் பூகோள தர வரிசை கொண்ட மறுகாப்புறுதியாளர்களிடம் இருந்து நியாயமான விலையில் மறு நிதியளிப்புப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டங்களை ஆரம்பித்தது.

2016 ஆம் ஆண்டில் மறு காப்பீட்டு ஒப்பந்தம், மறுகாப்பீட்டு தரகர் “லொக்டன் உடைய தலையீட்டின் கீழ் முன்னணி மறுகாப்பீட்டாளரான Scor Reinsurance Asia Pacific Pte Ltd. உடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும் NITF மறுகாப்பீட்டு ஒப்பந்தம் ஒன்றை reinsurance broker Crescent Global UK Ltd. இன் தலையீட்டுடன் முன்னணி மறுகாப்பீட்டாளரான அலியான்ஸ் SE உடன் ஏற்படுத்திக் கொண்டது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் NNDIS, SRCC மற்றும் T நிதியம் மற்றும் பயிர் காப்புறுதி என்பவற்றுக்கான மறுகாப்பீட்டு ஒப்பந்தங்களை வகுப்பதற்கான செயற்பாடுகளும் 2017 ஆம் ஆண்டுக்கான மறுகாப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டன.

#### R05 - ஒதுக்கு போதுமான இடர்

NITF அதன் நிதி ஒதுக்கு நிலைமை அதன் பொறுப்புக்களை எப்போது செலுத்த வேண்டுமோ அந்தச் சந்தர்ப்பத்தில் தீர்ப்பதற்கு போதுமானதாக உள்ளதை தொடர்ந்து மீளாய்வு செய்து உறுதிப்படுத்துகிறது.

#### R06 - கடன் இடர்

NITF வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்ற நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் கடன் மதிப்பு நிதி ஸ்திரத்தன்மை என்பவற்றை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. NITF இனுடைய கடன் அங்கீகார செயன்முறை, வியாபாரத்தின் அளவு மற்றும் வகையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அனைத்து பணியாட்களுக்கும் வழிகாட்டுவதற்காக கடன் கொள்கை ஒன்றும் அமுலில் உள்ளது. NITF அனைத்துக் கொள்கைகள் மீதான கட்டுப்பணக் கொடுப்பனவுகள் மீது கடுமையான கொள்கையை கடைப்பிடிப்பதோடு, செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்தப்படாத போது அதற்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

#### R07 - திரவத்தன்மை இடர்

கோரிக்கைக் கொடுப்பனவுகள், மறு காப்புறுதிக் கொடுப்பனவுகள், திறைசேரிக்கு மாற்றப்படும் நிதிகள் போன்ற ஒப்பந்த ரீதியான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாமை அல்லது திரவத்தன்மை இடர், றிப்போ, திறைசேரி உண்டியல்கள் போன்ற பல்வேறுபட்ட முதிர்வுகளுடனான திறைசேரி முறிகள் மற்றும் தொகுதிக் கடன்களுடன் பன்முகப்படுத்தப்பட்ட மூலதனங்கள் மூலம் தணிக்கப்பட்டது. NITF உடைய திரவத்தன்மையின் ஆற்றல்மிக்க நிலைமை குறிப்பிடத்தக்களவு பிற்ச் ரேட்டிங் உடைய AA-(lka) யினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

NITF அதன் அனைத்து நிதிகளையும் அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்வதோடு, அவற்றின் போதுமான அளவு பகுதி குறுகியகால முதிர்வு முதலீடுகளிலும், மறு கொள்வனவு ஒப்பந்தங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. பிணையங்களின் முதிர்வு, பகுப்பாய்வு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் பாதிக்கக்கூடியளவு பொருத்தப்பாடு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதுடன், திரவத்தன்மைக்குப் போதுமான நிதிகள் உள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

#### Ro8 - தகவல் பாதுகாப்பு கணனி முறைமை இடர்

கணனி முறைமை அல்லது ஏதேனும் இணைய தாக்குதல்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாக NITF நட்டங்களை எதிர்கொள்ளாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அது சிறந்த பாதுகாப்புக்காக தொடர்ந்தும் தகவல் தொழில் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளில் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது. சரியான முறைமையுடன் தொடர்புபட்ட செயன்முறைகள் பற்றி உள்ளக ஊழியர்களுக்கு தொடர்ந்தும் முறையான பயிற்சிகள் அளிக்கப்படுவதோடு, தகவல்களின் இரகசியத்தன்மை மற்றும் நேர்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டு வழிமுறைகள் உள்ளன.

#### R09 - வியாபார தொடர்ச்சி இடர்

குறுகியகால மற்றும் நீண்டகால வியாபாரத் தொடர்ச்சியை உறுதி செய்யும் ஒரு வழிவகையாக NITF இடைவிளைவான திட்டங்களை வகுத்துள்ளது. இந்தத் திட்டங்கள் கூட்டாண்மை அனர்த்த மீட்புத் திட்டங்கள் மற்றும் நிறுவனத்தின் பணியாட்கள் மற்றும் வளங்கள் தொடர்பாக வியாபார மீட்புத் திட்டங்களையும் உள்ளடக்குகிறது. நிறுவனத்தின் செயற்பாடுகளில் நீண்டகால

# நிறுவன இடர் முகாமைத்துவம்

தாக்கங்கள் இல்லை என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

### வெளிப்புற இடர்கள்

NITF அதன் வியாபாரத்திற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்கள் மீது அதன் மதிப்புகளை முன்னெச்சரிக்கையாக எடுக்கின்ற போதிலும், அதேவேளை, அத்தகைய இடரைத் தணித்துக் கொள்ளக்கூடிய வழிகள் இருந்த போதிலும், இந்த இடர் பெருமளவில் நிறுவனத்தினுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது.

### R10 - செறிவு இடர்

சொத்துக்களின் பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் போதுமற்றதன்மை அதிகரித்த நட்டங்களை ஏற்படுத்துவது தொடர்பான இடர். NITF ஐ பொறுத்த வரையில் அரசாங்க பிணையங்களில் முதலீடுகளின் செறிவு ஒன்று இல்லை. அரசாங்க பிணையங்கள் மீதான முதலீடுகள் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ள்பபட்டுள்ளது. எவ்வாறாயினும், அவைகள், ஆபத்து அற்ற உயர் பாதுகாப்புடைய முதலீடுகளாகும்.

### R11 - கோரிக்கைகள் செலுத்தித் தீர்த்தல் இடர்

கோரிக்கைகளை அங்கீகரிப்பதில் கடுமையான ஒழுங்கு விதிகளை விதிப்பதற்காகவும் கோரிக்கைகளின் செயலாக்கத்தில் கடமைகளை பிரித்துக் கொடுப்பதன் மூலம் மோசடி, சட்ட மற்றும் தொழில்நுட்பக் காரணிகளினால் ஏற்படக்கூடிய சாத்தியமான பிணக்குகளின் இடர்கள் கட்டப்படுத்தப்பட்டுள்ளன.

### R12 - சந்தை இடர்

NITF தெளிவான முதலீட்டு வழிகாட்டிகளை உருவாக்கியுள்ளதோடு, இது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறைகள் அதன் முதலீடுகள் எவ்வாறு திறம்பட நிருவகிக்கப்பட வேண்டும் என்பதை பற்றிக் குறிப்பிடுகின்றன. சந்தை இடரை கணிசமான அளவு தணிப்பதை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவ அறிக்கைகள் மூலதனக்குழுவுக்கு வழங்கப்படுகின்றன.

### R13 - ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் இணக்க இடர்

NITF அதன் வியாபரம் செயற்பாட்டு ரீதியாக இணக்க நடைமுறைகளோடு ஒத்:துச் செல்வதை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான கைத்தொழில் மன்றங்களில் பங்குபெறுவதற்கு மேலதிகமாக அனைத்து ஒழுங்குபடுத்தல்கள் மாற்றங்களையும் மேம்பாடுகளையும் தொடர்ச்சியான அடிப்படையில் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. கொள்கைகளும் நடபடி முறைகளும் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதோடு, அதன் உள்ளக பங்குதாராகளுக்கு அவை பற்றி தெரியப்படுத்தப்படுகிறது.

### R14 - வியாபார இடர்

வேலை நிறுத்தம், கலவரம், சிவில் யுத்தம், மற்றும் பயங்கரவாத காப்பீடு, மோட்டார் காப்புறுதி, அக்ரஹார காப்புறுதி, இயற்கை அனர்த்த காப்புறுதி மற்றும் மறுகாப்புறுதி போன்ற பன்முகப்படுத்தப்பட்ட மூலோபாய வியாபார பிரிவுகளாக பிரிக்கப்படுவதன் மூலம் வியாபார இடர் தணிக்கப்பட்டுள்ளது.

### R15 - அந்நியச் செலாவனி இடர்

அந்நியச் செலாவனி பரிவர்த்தனை இடரை அகற்றுவதற்காக மறு காப்புறதி கட்டுப்பணத்தை செலுத்துவதற்காக உள்நாட்டு நாணய மதிப்பில் மறுகாப்புறுதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### R17 - முதலீட்டுக் கடன் இடர்

முதலீட்டுக் கடன் இடரை குறைந்தபட்ச மட்டத்திற்கு தணிப்பதற்காக திறைசேரி உண்டியல்கள், றிப்போக்கள், மற்றும் திறைசேரி முறைகள் என்பவற்றின் இடரற்ற முதலிடுகள் அரசாங்க வங்கிகளின் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன.

### R19 - செயற்பாட்ட இடர்

செயற்பாடுகளை கணனி மயப்படுத்தல் மூலம் செயற்பாட்டு இடர் தணிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பண சேகரிப்பு மற்றும் கட்டுப்பண கொடுப்பனவுகளில் தவறுகளையும் முரண்பாடுகளையும் குறைப்பதற்காக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்னதினால் NITF இனுடைய வேலை நிறுத்தம், கலவரம், சிவில் யுத்தம் மற்றும் பயங்கரவாத நிதிப் பிரிவுகள் கணக்காய்வு செய்யப்படுகின்றன. மேலும், அனைத்து அலுவலக நடவடிக்கைகளின் பரிமாற்றங்கள் தவறுகள் இல்லாத வகையில் செயற்படுத்துவதற்காக அனைத்து நடவடிக்கைகளும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் 7 உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது.

(a) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சிலுள்ள அலுவலர் ஒருவர்,
(b) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் பிரதம கணக்காளர்,
(c) சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்
(d) அரச பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்
(e) நிதி வங்கியியல், காப்புறுதி முகாமைத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தகைமையுடைய அல்லது நிபுணத்துவமுடையவர்களிலிருந்து அமைச்சரால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் மூவர்.

அமைச்சர் இவர்களில் ஒருவரை தலைவராக நியமிக்கும் தகைமையுடையவராவார். இச்சட்ட நியதிகளின் கீழ், சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும். 2016 காலப்பகுதியில் 11 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் கூட்டத்திற்கு சிறந்த வரவுப் பதிவுகள் பேணப்பட்டிருந்தன. சபைக் கூட்டங்களில் சபை உறுப்பினர்களின் வரவு விபரம் வருமாறு:

| சபை உறுப்பினர்கள் | 2016 இல் சபை அங்கத்தவர்களின் சமூகம் தொடர்பான விபரங்கள் | | | | | | | | | | | நியமனம் பெற்ற திகதி | பதவி விலகிய திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜன | மார் | ஏப் | மே | ஜுன் | ஜுலை | ஆக | செப் | அக் | நவ | டிச | | |
| திரு. மஞ்சுள டி சில்வா | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 06/04/2015 | - |
| திரு. ஏ.ஆர்.தேசப்பிரிய | ✓ | ✓ | ✓ | ✓ | ச/இ | - | - | - | - | - | - | 08/04/2015 | 13/07/2016 |
| திரு. ரவின் பெர்னாண்டோபுள்ளே | ✓ | ✓ | ✓ | ✓ | ச/இ | ✓ | ✓ | ச/இ | ✓ | ✓ | ✓ | 08/04/2015 | - |
| திரு. அசேந்திர சிறிவர்தன | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 02/04/2015 | - |
| திரு. டி.பி.விமலசேன | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ச/இ | ✓ | ✓ | ✓ | 14/12/2015 | |
| திரு. எச்.ஏ.சி.குமாரசிங்க | ச/இ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ச/இ | ✓ | ✓ | ✓ | ✓ | 14/12/2015 | - |
| திரு. ரோஹண டி சில்வா | - | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 05/05/2016 | - |
| திரு. கே.டி.எஸ்.ருவன்சந்திர | - | - | - | - | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 12/08/2016 | 30/12/2016 |

அங்கீரிக்கப்பட்ட வியாபாரத் திட்டத்தின் அடிப்படையிலும் நிறுவனம் பெற்றுக்கொண்ட நிதி, பௌதீக இலக்குகளின் அடிப்படையிலும் சரியான முறையில் வியாபாரம் நடத்தப்படுகிறது என்பதை உறுதி செய்யும் பொருட்டு நிறுவனத்தின் பங்குதாரர்களிற்கு சபை பொறுப்புக் கூறத்தக்கதாக உள்ளது.

### முதன்மை நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வுகளும்

2016 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முதன்மைச் செயற்பாடுகளாவன, அரச அலுவலர்களிற்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹார), கட்டாய மீன் காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம் (அரசுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு), பொதுக் காப்புறுதித் திட்டங்கள், விவசாயக் கடன் காப்புறுதித் திட்டம், பகிஷ்கரிப்பு, சிவில் கலகம், வன்முறை மற்றும் பயங்கரவாத நிதிய முகாமை (SRCC & TF)என்பவற்றை அமுல்படுத்துதலாகும்.

### நிதிப் பெறுபேறுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான மொத்த எழுதப்பட்ட தவணைப் பணமாக ரூபா 6,814 மில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 5,062 மில்லியன் மறுசீரமைப்பு மற்றும் SRCC மற்றும் T நிதியத்தின் கணிசமான அதிகரிப்பு காரணமாக GWP ஆனது 2015 GWP உடன் மிதமான அதிகரிப்பை பதிவு செய்தது. 2016 ஆம் ஆண்டில் இல் இலங்கை ரூபாவுக்கு எதிராக ரூபா 2,840 மில்லியனை வரிக்குப் பிந்திய இலாபமாக தே.கா.ந.நி. பெற்றது. 2015 இல் இது, ரூபா 4,303 மில்லியன்.

# பணிப்பாளர்களின் அறிக்கை

### பணியாளர்கள்

2016 ஆம் ஆண்டின் இறுதியில் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 206 ஆகும். 2015 ஆம் ஆண்டில் 186 ஆக இருந்தது.

### கணக்காய்வாளர்கள்

சபையின் 2016 இற்கான நிதிக் கூற்றானது, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்ட நியதிகளில் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

### கணக்காய்வுக் குழு

ஆய்வுக்குட்பட்ட வருடமான 2016 இல் கணக்காய்வுக் குழுவானது, திரு. கே.டி.எஸ். ருவன்சந்திர (தலைவர்) (தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்), திரு. ரவின் பெர்னாண்டோபுள்ளே மற்றும் திரு. அசேந்திர சிறிவர்தன ஆகிய மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்திலிருந்து தே.கா.ந.நி. இற்கு நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவரும் குழுவின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராகக் கூட்டத்திற் கலந்து கொண்டார். 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் குழுவின் நான்கு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகள் போதுமான விபரங்களைப் பதிவு செய்து பணிப்பாளர்கள் சபைக்கு வழமை போல் அறிக்கை சமாப்பிக்கப்பட்டது.

### கூட்டு நிறுவன ஆளுகை

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சிறந்த நடைமுறைகளின் கூட்டு நிறுவன ஆளுகை விதிகள் மற்றும் நல்லாட்சி மற்றும் கூட்டு நிறுவன ஆளுகை நடைமுறைகளுக்கான பொது நிறுவன வழிகாட்டுதல்கள் என்பனவற்றுக்கான கூட்டு நிறுவன ஆளுகை நடைமுறைகள் என்பன பின்பற்றப்பட்டுள்ளன.

மஞ்சுள டி சில்வா
தலைவர்

கயானி சியம்பலாகொட
சபையின் செயலாளர்

கொழும்பு

# கணக்காய்வுக் குழு அறிக்கை

ஆய்வுக்குட்பட்ட வருடமான 2016 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவானது, திரு. கே.டி.எஸ். ருவன்சந்திர (தலைவர்) (தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்), திரு. ரவின் பெர்னாண்டோபுள்ளே மற்றும் திரு. அசேந்திர சிறிவர்தன ஆகிய மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்திலிருந்து தே.கா.ந.நி. இற்கு நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவரும் குழுவின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராகக் கூட்டத்திற் கலந்து கொண்டார். உள்ளகக் கணக்காய்வுக்கு உதவியதுடன். அவ்வப்போது NITF இன் உயர்மட்ட அதிகாரிகளுக்கு விளக்கங்களும் வழங்கப்பட்டன.

## கணக்காய்வின் நோக்கெல்லை

கணக்காய்வுக் குழுவானது, 2016 ஆம் ஆண்டில் பின்வரும் கணக்காய்வு நோக்கெல்லைகளின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டது:

1. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுப் பொறுப்புகளைத் தீர்மானித்தலும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்தலும்
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மீளாய்தலும் மதிப்பாய்வு செய்தலும்
3. செலவு வினைத்திறன் பொருட்டும் வீண் செலவை நீக்கும் பொருட்டும் கிரமமான இடைவேளையில் நிறைவேற்றுகையை மீளாய்தல்
4. கணக்காய்வாளர் அதிபதியினதும்/ வெளியக கணக்காய்வாளரினதும் முகாமைக் கடிதங்களைத் தொடர்ந்துறுதலும் வெளியகக் கணக்காய்வாளருடன் தொடர்பைப் பேணுதலும்
5. நிலையியற் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகள் என்பவற்றுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துதல்
6. கணக்கீட்டுத் தரங்களுடன் இணக்கமாவதை உறுதிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்தல்
7. தீர்வு நடவடிக்கை பொருட்டு உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைக் கடிதங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல்
8. அரச தொழில் முயற்சி சம்பந்தமான குழுவின் பணிப்புரைகள்/பரிந்துரைகளை அமுல்படுத்தலினை மீளாய்வு செய்தல்

## கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

குழுக் கூட்ட விபரங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அவை பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிக்கையிடப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. நான்காவது காலாண்டிற்கான இறுதிக் கூட்டம் 2017 ஜனவரி மாதம் நடைபெற்றது.

## உள்ளகக் கணக்காய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், தனது சொந்த உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தைக் கொண்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் குழு, உள்ளகக் கணக்காய்வினையும் பரிசீலனைப் பணிகளையும் கிரமமாகக் கண்காணித்து மீளாய்வு செய்து வருகிறது.

## வெளியகக் கணக்காய்வு

வெளியகக் கணக்காய்வு முகாமைக் கடிதங்களையும், கணக்காய்வினையும் மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு பணிப்புரை வழங்குகிறது. அவற்றின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுக்கான கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.



கே.டி.எஸ்.ருவன்சந்திர
தலைவர்
கணக்காய்வுக் குழு

# நிதி அறிக்கைகள்


| | |
|---|---|
| IBNR மற்றும் LAT தெளிவுரை | 47 |
| சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை | 48 |
| நிதி நிலைமை பற்றிய அறிக்கை | 73 |
| விரிவான வருமான அறிக்கை | 74 |
| உரிமைப்பங்கு மாற்றக் கூற்று | 75 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 76 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 77 |
| பதினொரு வருடகால தொகுப்பு | 100 |

# IBNR மற்றும் LAT தெளிவுரை

2 June 2017

To the shareholders of National Insurance Trust Fund

## National Insurance Trust Fund 31 December 2016 Net IBNR and LAT Certification

I hereby certify that the undiscounted Central Estimate IBNR Provision of LKR 294,347,415 including CHE is adequate in relation to the Net Claim Liability reserves of National Insurance Trust Fund as at the 31 December 2016, net of reinsurance. This IBNR provision, together with the Case Reserves held by the Company, is expected to be adequate to meet the future liabilities, including the claims handling expenses, in respect of the Company's incurred claims obligations as at 31 December 2016, in many but not all scenarios of future experience.

At the end of each reporting period, companies are required to carry out a Liability Adequacy Test (LAT) as laid out in SLFRS 4. The LAT is performed to assess the adequacy of the carrying amount of the Unearned Premium Reserve (UPR). I hereby certify that the UPR provision of LKR 2,158,114,195 set by the Company, net of reinsurance, is adequate in relation to the unexpired risks of National Insurance Trust Fund as at 31 December 2016, in many but not all scenarios of future experience. As such, there is no premium deficiency to be recognised by the Company.

The results have been determined in accordance with internationally accepted actuarial principles.

I have relied upon information and data provided by the management of the Company and I have not independently verified the data supplied, beyond applying checks to satisfy myself as to the reasonability of the data.

Matthew Maguire
Fellow of the Institute of Actuaries of Australia (FIAA)
For and on behalf of NMG Financial Services Consulting
Dated 2 June 2017

T: +65 6325 9855 F: +65 6325 4700 E: contact@NMG-Group.com
www.NMG-Group.com
30 Hill Street, #03-02A, Singapore 179360

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } TRE/C/NITF/FS/2016    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 11 May 2018

**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 17 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிதியத்தின் தலைவருக்கு 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   ag@auditorgeneral.gov.lk   www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

நியமத்தின் 77 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றின் வழமையான செயற்பாடுகளின் மூலம் உருவாகும் இலாபத்தின் பேரில் இனங்காணப்பட்ட வரிச் செலவினம் இலாப நட்டக் கணக்கில் வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் மீளாய்வாண்டிற்குரிய இனங்காணப்பட்டிருந்த ரூபா 195,609,935 ஆன வரிச் செலவினம் விரிவான வருமானக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 21**

வெளிநாட்டு பிரயோக பணத்திலான நிதி உருப்படி ஒவ்வொரு அறிக்கை காலப்பகுதி இறுதியின் போதும் இறுதி விகிதமொன்றை பயன்படுத்தி மாற்றப்பட வேண்டிய போதிலும் 02 கணக்குகளுக்குரிய மீதி அவ்வாறு

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

மாற்றப்படாததன் காரணமாக கணக்கில் மீதி மற்றும் மாற்றப்பட்ட திகதிக்கு இடையே ரூபா 22,663,676 ஆன வேறுபாடு காணப்பட்டது. அதன் பிரகாரம், இந்த உருப்படிக்கிடையே ரூபா 22,663,676 ஆன அன்னியச் செலவானி இலாபம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதற்குச் சமனான அளவில் அச்சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் குறைத்து நிருபணமாகியிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிப் பொறுப்பு கணக்கிடும்போது மதிப்பிட்டு ஆண்டின் பணிக்கொடை படிச் செலவினம் குறைவடைவதற்கு வருமான வரிச் சட்டத்தில் இடமளிக்கப்படாமையால் நிதியம் பணிக்கொடை செலவினமாக பதவியணியினர் செலவினத்தில் உள்ளடங்கியுள்ள ரூபா 3,603,644 ஆன வரிக்கு உட்பட்ட வருமானத்திற்கு சேர்த்து கொள்வதற்குப் பதிலாக பணிக்கொடை செலவினம் மற்றும் ஆயுட் கணிப்பீடு (Actual gain) இடையே வேறுபாடான ரூபா 1,137,249 வரியின் கீழான வருமானத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வரிக்கு உட்பட்ட வருமானம் ரூபா 2,466,395 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தமையால் அதனோடொத்த வரிப்பொறுப்பு ரூபா 690,591 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மறு காப்புறுதி பிரிவிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணை வருமானம் கட்டுப்பாட்டுக் கணக்கிலான ரூபா 29,579,065 மற்றும் 8,756 அமெரிக்க டொலர் அளவிலான வரவுத் தாள்களும் ரூபா 10,000,953 ஆன செலவுத் தாள்களும் 2015 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருக்கையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதிகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மறு காப்புறுதி பிரிவில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 424,430,802 தொகையான கிடைக்க வேண்டிய மீதிகளில் ரூபா 39,502,102 ஆன செலவு மீதிகள் உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் அதற்கு சமமான அளவில் நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய தவணை வருமானம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஏனைய நிதிப்பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் காப்புறுதி தவணை, பெற்ற முற்பணக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு காப்புறுதி உடன்படிக்கைக்காக

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை



எஞ்சிய தவணைப் பணம் கிடைத்ததன் பின்னர் அவை உட்பட மொத்த தவணை தொகை வருமானமாக கணக்கீடு செய்தல் நிறவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையொன்றாகும். 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு கிடைத்த முற்பணக் கணக்கின் மீதி ரூபா 21,750,002 ஆக இருந்ததுடன், அம்மீதிக்குரிய எஞ்சிய தொகை கிடைக்காததன் பேரில் அது ஆண்டின் வருமானமொன்றாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதியத்தின் செயல்விதிக் கோவையின் பிரகாரம், இன்வொய்ஸ் செய்யப்பட்டு 60 நாட்களுக்குள் கடன்பட்டோர் மீதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், இரண்டு வியாபார வகுப்பு காப்புறுதிகளில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதியினுள் 90 நாட்கள் கடந்த ரூபா 1,049,204,598 ஆன மீதிகள் காணப்பட்ட போதிலும், முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின் பிரகாரம் நிதியத்தினால் ஐய மற்றும் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மோட்டார் வாகன காப்புறுதி உரிமை கொடுப்பனவு ரூபா 5,634,178 தொகை மோட்டார் வாகன உரிமை கொடுப்பனவு கணக்கிற்கு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மோட்டார் வாகன காப்புறுதி ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் அவ்விரண்டு கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 5,634,178 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 விளக்களமளிக்கப்படாத வித்தியாசங்கள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீள் காப்புறுதி பிரிவிடமிருந்து கொடுப்பனவு கிடைக்க வேண்டிய மீதிகளுக்குரிய சமர்ப்பிக்கப்பட்ட உப அட்டவணை மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய மீதிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையில் தனியார் நிறுவனமொன்றுக்குரிய வரவுத்தாள் மற்றும் செலவுத்தாள்களின் பெறுமதி முறையே ரூபா 36,836,958 ஆன செலவு மற்றும் ரூபா 30,702,859 ஆன வரவு மீதிகளுக்கிடையே வேறுபாடாக இருந்ததுடன் அம்மீதிகள் தீர்வு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

### 2.2.4 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(அ) பகுதியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டு வரும் பணி பகிஷ்கரிப்பு, கிளர்ச்சி குழப்பங்கள், சிவில் போராட்டங்கள் ஆகிய பிரிவுகளின் (SRCC & TR) தரகுக் கொடுப்பனவு 2008 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு முதல் மீண்டும் கணிப்பிடப்பட்டு இலாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 89,809,561 தொகையான இக்கொடுப்பனவுக்குரிய சட்ட அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஒக்தோபர் 31 ஆந் திகதிய 88/01 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் அங்கீகாரத்தின் பேரில் நிதியத்தின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3 மில்லியன் வரை ஊழியரிடமிருந்து 3.5 சதவீதமும் தொழில் கொள்வோரிடமிருந்து 7.5, 5 மற்றும் 2.5 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் 03 வகையாக ஆதனக் கடன் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரமொன்று அல்லது வேறு எதேனும் சுற்றறிக்கை அறிவுறுத்தலொன்று அல்லது அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் 17 உத்தியோகத்தர்களுக்காக இதன் கீழ் ஆதனக் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக நிதியத்தினால் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த வட்டிச் செலவினம் ரூபா 3,854,638 ஆக இருந்தது.

(இ) மேற்படி (ஆ) ஆதனக் கடனுக்கு மேலதிகமாக மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் நிதியத்தினால் அரச வங்கியொன்று ஊடாக உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் நிறைவேற்று தரங்களுக்காக ரூபா 1.5 மில்லியனும் நிறைவேற்றுத் தரமல்லாதவர்களுக்காக ரூபா 500,000 ஆகக் கூடிய வரையறை விதித்து கொடுப்பனவு செய்யும் இயலுமையின் பேரில் நிறைவேற்றுனர் அல்லாத தரப்பினரின் கடன் எல்லை ரூபா 500,000, ரூபா 750,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இக்கடன் வழங்கும் போதும் செலுத்த வேண்டிய வட்டி ஊழியர் மற்றும் நிதியத்திற்கு இடையே பகிரப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதியத்தால் 128 நிறைவேற்றுனர் அல்லாத ஊழியர்களாலும் 13 நிறைவேற்று ஊழியர்களாலும் அரச வங்கியொன்றிடமிருந்து தனிப்பட்ட கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி நிதியத்தினால் அதற்காக செலுத்த வேண்டிய வட்டியின் அளவு ரூபா 18,711,687 ஆக இருந்தது.

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 123,534,491 பெறுமதியான மோட்டார் வாகன காப்புறுதிக்குரிய கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தலுக்குரிய கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இயற்கை அனர்த்த காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மறு காப்புறுதி நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,528,802,851 தொகை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2018 ஏப்ரல் 26 ஆந் திகதிய என்ஐடீஎம்/எப்ஐஎன்/02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ பிரதிநிதித்துவ கடிதத்தின் பிரகாரம் அதில் ரூபா 3,468,019,881 தொகை மேலும் கிடைக்க வேண்டிய நிலைமை காணப்படுவதாக முகாமைத்துவத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்படி கடிதத்தின் பிரகாரம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய நிதிகூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மறு காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 535,040,194 முகாமைத்துவ பிரதிநித்துவ கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மறுகாப்புறுதி பிரிவில் கிடைக்க வேண்டிய தவணை வருமானம் மீதியில் ரூபா 9,053,364 ஆன மீதியொன்று இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் பல்வேறு அனர்த்த நிலைமைகளுக்காக மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ளாமல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனர்த்த நிதியம் விடுவித்தமை காரணமாக சேமிக்கப்பட்ட ரூபா 14,928,705 ஆன மீதிகள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பணி பகிஷ்கரிப்பு, கிளர்ச்சி குழப்பங்கள், சிவில் போராட்டங்கள் மற்றும் பயங்கரவாத நிதியம் ஆகிய பிரிவுகளின் (SRCC & TR) 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் 10.1 ஆம் இலக்க குறிப்பிற்குரிய தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய தவணை வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,462,112 ஆன மீதி 2014 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருவதுடன் அம்மீதி கணக்காய்வு திகதியான 2017 யூலை 14 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி பயிர்க் காப்புறுதிக்குரிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 42.5 மில்லியனுக்குரிய விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை (AAIB) அறிவூட்டப்பட்டு உரிய பதிவேடுகளை கொண்டு வரச் செய்யப்பட்டு துரிதமாக கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அம்மீதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மறு காப்புறுதி பிரிவிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணை வருமானத்தில் கிடைத்திருந்த ஒரு காப்புறுதி கம்பனியிடமிருந்து அதற்குரிய பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகளின் (NBT) கூட்டுத்தொகை ரூபா 5,005,761 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.4 ஐந்தொகை திகதிக்கு பின்னர் இடம்பெற்ற சம்பவங்களின் தாக்கம்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 2.3.8 ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக முகாமைத்துவத்தினால் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 15 மில்லியனான இயற்கை அனர்த்தங்களுக்காக தேசிய காப்புறுதி மேவுகைக்கு 2017 ஆம் ஆண்டிற்குரிய மீள் காப்புறுதியை பெறுவதில் தாமதம், அதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களுக்காக காப்புறுதி இழப்பீட்டு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதிகளிலிருந்து கொடுப்பனவு செய்ய நேர்ந்தமை மற்றும் 2016 யூன் 09 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் காப்புறுதி வகுப்பு இடையே நிதியினை மாற்றுவதற்கு நேர்ந்த காரணத்தினால் கடந்த ஆண்டுகளுக்கு ஒப்பாக நிதியம் நிதிசார் வீழ்ச்சிக்கு உட்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக நிதியத்திற்கு நட்டமொன்று

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

இடம்பெறவில்லையெனினும் 2017 மே 31 ஆந் திகதி வரையில் நிதியத்தின் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 552,501,540 ஆக இருந்தமை மற்றும் நிறுத்திவைத்தல் உழைப்பு ஒதுக்கீடும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திகதிக்கு ஒப்பாக 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2,53,773,950 பெறுமதியால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதியத்தின் நடைமுறையல்லாத சொத்துக்களான ஆதனங்களின் கிரயம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 37,802,741 மற்றும் அத்திகதியில் முதலீட்டு சொத்துக்களின் பெறுமதி ரூபா 11,195,999,167 ஆக இருந்தது. அத்திகதியில் உள்ளவாறு முதலீட்டுச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 11,195,999,167 ஆக இருந்தன. அம்முதலீட்டின் பெறுமதி 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ரூா 8,300,859,568 வரை குறைவடைந்திருந்ததுடன் அது மேலும் குறைவடைந்து காணப்பட்ட காரணத்தினால் நிதியம் ஆபத்தான நிலைமைக்கு உட்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிலை முறைப் படுத்தும் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | காப்புறுதி வர்த்தகத்தின் ஒவ்வொரு உப வகுப்பு தொடர்பாக புறம்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நிதியத்தினால் வேலை நிறுத்தங்கள், குழப்பங்கள், கிளர்ச்சிகள், சிவில் போராட்டங்கள், பயங்கரவாத நிதியத்துடன் செய்வோரினாலும் (SRCC & TR) தவிர ஏனைய துறைகளுக்காக துறைசார் நிதிக்கூற்றுக்கள் அல்லது அதற்குரிய கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படாதிருக்கையில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளக திணைக்களத்திற்குரியே ரூபா 2,308,114 தொகையான செலுத்த வேண்டிய மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(ஆ) **2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

**114 ஆம் பிரிவு**

**2015 ஆம் ஆண்டிற்குரிய 2016 சனவரி மாதத்தின் போது உழைக்கும் போது வரி செலுத்துவதற்காக பொறுப்பொன்று காணப்படும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 871,427 ஆன விடுமுறை தினப் படிகளுக்காக உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்படாமல் இருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் பெப்ரவரி முதல் யூலை மாதம் வரை பதவிநிலையல்லாத உத்தியோகத்தர்களுக்கு இடையே உழைக்கும் போது செலுத்தும் வரிப்பொறுப்பொன்று காணப்படும் உத்தியோகத்தர்கள் இனங்காணப் பட்டிருக்கவில்லை.**

(ஆ) **2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை**

**(i) 8.3.8 ஆம் பிரிவு**

**அமைச்சரவை அங்கீகாரமொன்று இல்லாமல் நன்கொடைகள் மற்றும் வெகுமதிகள் (Donations and Gifts) வழங்க முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதியத்தினால் ரூபா 1,159,220 தொகை நன்கொடையாக வெவ்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.**

**(ii) 9.14.1 ஆம் அத்தியாயம்**

**நிதியத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவத்திற்குரிய நிர்வாக கைநூலொன்று இல்லாமல் இருந்ததுடன், 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட என்ஐடீஎப்/ஓசீ/03/2014 ஆம் இலக்க கடிதத்தில் நிதிய தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு நாளதுவரையாக்கப்பட்டு முழுமையாக தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததன் பின்னர் அக்கைநூல் அங்கீகாரத்தற்காக சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எவ்வித தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 396 | நிதியத்தின் 03 நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 976,585 கூட்டுத்தொகையான வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட 33 காசோலைகளுக்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.6 நிதிய முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன் மதிப்பீடு ஒன்றில்லாமல் நிதியத்தினால் விவசாய மற்றும் காப்புறுதி சபைக்கு 2016 ஒக்தோபர் மாதத்தின் போது ரூபா 100 மில்லியன் "கெத்தட்ட அருண பொஹர திரிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்திற்காக" வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 59,401,901 மாத்திரம் நடாப்பாண்டில் செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 40,598,098 தொகை 2017 மார்ச் 31 ஆந் திகதி நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 யூலை 29 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அக்ரஹார அங்கதத்துவ பணத்தை சேகரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட அக்ரஹார சேகரிப்பு கணக்கின் மீதி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,750 ஆக இருந்ததுடன் கோவைகளின் பிரகாரம் 2015 நவம்பர் முதல் எவ்வித செலவு வைத்தலொன்று இக்கணக்கிற்கு இடம்பெறாமையால் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.7 வரி பிரமாணங்களுக்கு இணங்காமை**

(அ) நிதியம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையில் (SVAT) பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றாக இருப்பதால் பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளருக்காக சேவை வழங்கி ஒரு மாதத்திற்கு பின்னர் 15 நாட்களுக்குள் செலவு உறுதிச்சீட்டுக்கள் (Credit Voucher) குறித்த பதிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளரான இலங்கை மினரல் சேன்ட்ஸ்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

கம்பனியிடமிருந்து SVAT இன்வொய்ஸ் பத்திரத்திற்காக செலவு உறுதிச்சீட்டுக்கள் நிதியத்திற்கு கிடைக்காமை காரணமாக அந்த இன்வொய்ஸ்களுக்குரிய VAT இல்லாத கிடைக்க வேண்டிய பெறுமதிகள் நிதியத்திற்கு கிடைத்திருந்த போதிலும் அந்த SVAT பெறுமதி சரியானதாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக சாதாரண காப்புறுதி (மோட்டார் அல்லாத) பிரிவில் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு 90 நாட்களுக்குள் கிடைக்க வேண்டிய மீதிகளில் ரூபா 35,806 தொகையான தீர்வையாகாத பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 25 ஆம் பிரிவின் பிரகாரம் வரி விதிக்கக்கூடிய வருமானத்தை நிச்சயிக்கும் போது இடமளிக்ககூடிய கழிப்பனவுகளை பெறுமானத்தேய்வு படிகள் (Capital Allowance) வருமானத்திலிருந்து கழிப்பதற்குப் பதிலாக கணக்கிடப்பட்ட பெறுமானத்தேய்வு மொத்தப் பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலின் பிரகாரம் பெறுமானத்தேய்விற்கான படிகள் ரூபா 7,730,203 ஆக இருந்த போதிலும் கணக்கிடப்பட்ட பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 7,056,814 வருமானத்தில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2016/2017 மதிப்பீட்டாண்டிற்குரிய கூட்டிணைக்கப்பட்ட வருமான வரிக்காக ஆலோசணை கோவையின் 30 ஆம் பெட்டியின் (Cage30) இன் 2.2 ஆம் இலக்க உப பிரிவின் பிரகாரம் பெயரளவு வரி செலவு வைத்தல் (Notional Tax Credit) வரிக்கு உட்படக்கூடிய வருமானத்தில் கழிப்பதற்காக வெளியக கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தப்பட்ட வருமான வரி அறிக்கையுடன் சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டு உட்பட அதற்கு முன்னைய ஆண்டிலும் இச்சான்றிதழ் வெளியக கணக்காய்வாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,839,751,855 தொகை மிகையொன்றாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,303,897,565 காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,464,145,710

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

தொகைக்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மொத்தத் தவணைப் பண வருமானம் ரூபா 919,020,772 ஆல் அதிகரித்த போதிலும், தேறிய நலன்கள் மற்றும் கோரிக்கைகள் செலுத்துதல் மற்றும் பதிவழித்தல் ரூபா 2,534,277,747 தொகையினால் அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டின் போது ரூபா 2,083,023,166 தொகையான மிகை 2014 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் தளம்பலடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா அது ரூபா 4,562,029,897 ஆக இருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,839,751,855 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் எடுக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,165,850,389 தொகையான நிதியத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டு வரை படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிலிருந்து அது மீண்டும் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 3,011,061,987 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் குறிக்கோளின் படி சபையினால் செயற்படுத்தப்படும் பங்களிப்புக் காப்புறுதி திட்டத்தின் மூலம், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, எதிர்பாராத சுகாதார ஆபத்துகள், தனிப்பட்ட அவசர விபத்துக்கள் மற்றும் ஆதன சேதங்கள் தொடர்பாக-

- அரசாங்க உத்தியோகத்தர்கள், மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சேவையில் இருந்து, மாகாண அரசாங்க சேவையில் இருந்து மற்றும் உள்ளூராட்சி சேவையில் இருந்து ஓய்வுபெற்று, சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரசாங்கத்தில் இருந்து மாகாண சபையிலிருந்து அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து தற்போது ஓய்வூதியம் பெறும் நபர்களுக்காக.

- 1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை சட்டத்திற்கு இணங்க சமுர்த்தி நலன்பெறுவோர் மற்றும் அவர்களின் குடும்பங்கத்தவர்களுக்காக.

- விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடும் நபர்களுக்காக.

- சபையின் விதப்புரையின் பிரகாரம் அமைச்சரினால் காலத்திற்கு காலம் இணங்காணக் கூடிய தேவையுடைய நபர்கள் அல்லது நபர்களின் குழுக்களுக்காக, நலன்கள் மற்றும் பாதுகாப்பு வழங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தன.

மேற்கூறிய குறிக்கோள்களுக்காக நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 12/2015(vi) பொது நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் பங்களிப்பு சுய விருப்பின் பேரில் வரும் இரண்டு காப்புறுதி முறைமைகளின் கீழ் மேலும், அரச ஊழியர்களுக்கான காப்புறுதி மேவுகையை விரிவபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதுவரை 1750 நிறுவனங்களின் உறுப்பினர்கள் இரண்டு இலட்சத்திற்கு அண்மித்த எண்ணிக்கையொன்று இந்த புதிய முறையின் கீழ் இணக்கப்பாட்டை தெரிவித்து பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் தற்போது 650 நிறுவனங்களின் தரவுகள் மாத்திரமே தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே அம்முறைமையின் கீழ் செயற்படுத்தப்படும் தங்கம், வெள்ளி, மற்றும் சாதாரண காப்புறுதி முறைமைக்குரிய தவணைப்பணம் பெறுவனவு வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் இலாபத்தில் 1 வீதமான பயிரிச்செய்கை வரி மூலம் கிடைக்கும் நிதியம், தேவைப்பாட்டின் பிரகாரம், பயிர்ச்செய்கை சேதங்களுக்காக கொடுப்பனவு செய்வதற்காக தேவையான சந்தர்ப்பங்களின் போது விவசாயம் மற்றும் கமநல காப்புறுதி சபைக்கு கொடுப்பனவு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. மற்றும் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதிய 16/0525/706/017 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் பயிர்ச்செய்கை குத்தகை பணத்தையும் பயன்படுத்தி "கெத்தட்ட அருண பொஹொர திரியா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உர மானியம் பெறும் விவசாயிகளுக்காக விவசாயம் சார் கடன் பாதுகாப்பு கடன் முன்மொழிவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இக்கடன் பாதுகாப்பு

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

முன்மொழிவு முறைமையின் கீழ் ஆண்டில் எவ்வித செயற்பாடுகளும் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீள் காப்புறுதி மேவுகை வழங்கும் பொருட்டு 2016 ஆம் ஆண்டின் போது நிதியத்தால் தனியார் கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்குரிய மீள் காப்புறுதி உடன்படிக்கை 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2017 ஏப்ரல் 01 காலப்பகுதி வரை செல்லுபடியாக இருந்தது. அவ்வாண்டிற்காக ரூபா 84 மில்லியன் வீதம் 04 காலாண்டு தவணைகளில் ரூபா 336 மீள் காப்புறுதியாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 மே 20 ஆந் திகதிய எம்என்பீஈ/2016/33 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இந்த மறு காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ்வாறான இயற்கை அனர்த்தங்களின் மூலம் ஏற்படக்கூடிய அசாதாரண சேதங்கள் காரணமாக நிறுவனத்தின் நிலைமைக்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கமொன்றை எதிர்பார்த்தது ஆகும். எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அனர்த்த உதவியாக ரூபா 3,750,798,782 கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கையில் இந்த மறு காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அதற்காக ரூபா 153,326,181 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மறு காப்புறுதியிலிருந்து மொத்த அனர்த்தங்களுக்காக கொடுப்பனவுகளில் 4 சதவீதமே மேவுகை செய்யப்பட்டிருந்தமையால் அந்நோக்கம் நிறைவேற்றப்படுமென்பது சிக்கலான ஒன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) 2017/2018 ஆம் ஆண்டிற்குரிய மறு காப்புறுதியாகவும் மேற்கூறப்பட்ட நிறுவனமே தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் நிதியம் அதற்குரிய உடன்படிக்கை 2017 மே 26 ஆந் திகதி அதாவது 2017 மே 25 ஆந் திகதி அவசர அனர்த்த நிலைமை உருவாகிய திகதிக்கு பின்னராக திகதியாக இருந்ததால் அதுவரை பழைய உடன்படிக்கை இரத்தாகி 2 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. அதன் காரணமாக நிறுவனத்தின் நிதியத்தை பயன்பாட்டிற்கு எடுத்து இந்த அனர்த்த சேதங்களை மேவுகை செய்வதற்கு நிதியத்திற்கு நேர்ந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி வரையில் அந்த அனர்த்தங்களுக்குரிய

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

ரூபா 1,482,908,152 அனர்த்த சேதங்களாக நிறுவனத்தினால் அதன் நிதியத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.2 பெறுகை செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மே 30 ஆந் திகதிய 4/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் அமைச்சினதும் அங்கீகாரத்துடன் நிதியத்தினால் 2016 யூலை 12 ஆந் திகதி வரையிலும் 05 ஆண்டுகளுக்காக இரண்டு வாகனங்கள் செயற்பாட்டு குத்தகையின் கீழ் பெறப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் மேலதிக வழிகாட்டல் 28 இன் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை தொடர்பான பெறுகைகளின் போது மொத்த கிரயமாக முழு குத்தகைப் பெறுமதி அல்லது மொத்த காலப்பகுதி கருத்திற் கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் மேற்குறித்த இரண்டு வாகனங்களுக்காக 5 ஆண்டுகளில் ரூபா 16,650,000 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை வழிகாட்டி கோவையின் மேலதிகத்தின் 28 இன் 2.14.1 இன் பிரகாரம் இப்பெறுகை திணைக்கள பெறுகை குழுவின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் பெறுகைகளுக்குரிய 2016 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் திணைக்கள பெறுகைக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதியத்தின் தலைவர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் முகாமையாளர் (நிதி) ஆகிய மூன்று உறுப்பினர்களுடன் கூடிய குழுவொன்றின் இரண்டு உறுப்பினர்களால் மாத்திரம் இந்த பெறுகைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு உறுப்பினரால் இது தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல 01/2016 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகை செயற்பாடுகளிலிருந்து விலகியிருப்பதாக குறிப்பிட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) மேற்படி 4/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் இணைந்த 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு முன்னர்

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன் வாகனத்தை கையேற்பதற்கு முன்னர் பொதுத்திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 யூலை 08 ஆந் திகதி பெற்றுக்கொண்ட இவ்வாகனத்திற்காக மேலே குறிப்பிட்ட பரிந்துரை உட்பட திறைசேரியின் அங்கீகாரமும் வாகனங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதாவது 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதியின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகாரம் 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதியே கோரப்பட்டிருந்தது.

(iv) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனத்தை பெற்றுக்கொள்ளும் போது போட்டி கூறுவிலைகள் கோரல் மூலம் வாகனம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சந்தையில் அதற்காக 03 நிறுவனங்கள் மத்திரம் இருப்பதாக குறிப்பிடப்பட்டு போட்டி கூறுவிலை கோருவதிலிருந்து விலகியிருந்தது. எவ்வாறாயினும் மேற்படி சுற்றிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம் தகைமை பெறும் வழங்குனர்கள் 03 ஆம் வகுதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது மாத்தறை பிரதேசத்தில் கிளை அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்நிர்மாணம் மற்றும் அதற்குரிய செயற்பாடுகளில் மதிப்பிடப்பட்ட செலவினத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,688,882 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது

(i) 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம் கொள்வனவு நிறுவனத்திற்கு நிதியத்தினால் முதலாவது சகல தொடர்புடைய செலவினங்களையும் உள்ளடக்கி மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அனைத்து தொடர்புடைய செலவினம் மொத்த கிரய மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாமல் நிதியத்தினால் 3 பெறுகைகளாக கூறுவிலை கோரி வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ii) இச் செயற்பாடு திட்டமிப்பட்டது முதல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ளும் வரை பாரியளவு காலம் எடுக்கப்பட்டிருந்தமை அதாவது ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2006 யூன் 01 ஆந் திகதிய டீஎஸ்எம்/ஏடீஎம்/ஜீஓவீபீயூ/08/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மாவட்ட செயலாளரின் அலுவலகத்திற்கு முன்னால் அமைந்துள்ள கட்டிடத்தை திருத்தியமைத்து பராமரித்துச் செல்வதற்காக நிதியத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட செயலாளரின் இணக்கப்பாடோ அல்லது சட்டரீதியான உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படாமல் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2016 பாதீட்டு முன்மொழிவின் மூலம் இயற்கை அனர்த்தங்களிலிருந்து முழு நாட்டையும் பாதுகாக்கும் நோக்கில் காப்புறுதி முறைமையொன்று உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தனிநபர் காப்புறுதி மேவுகையொன்று ரூபா 2.5 மில்லியனுக்கும் அனர்த்தங்களுக்கு உட்படும் ஒரு நபருக்காக கூடியது ரூபா ஒரு லட்சம் மேவுகை (ரூபா 10 பில்லியனான) மொத்த காப்புறுதி மேவுகையொன்றும் கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள வேலைகளில் அவசர விபத்துக்களுக்கு முகங்கொடுக்கும் கடற்தொழிலாளர்களுக்காக ரூபா 01 மில்லியன் அவசர விபத்து இறப்புக் காப்புறுதியொன்றையும் அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. முன்மொழிவு முறைமை செயற்படுத்தும் பொருட்டு பாதீட்டின் மூலம் காப்புறுதி தவணையாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியனும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 500 மில்லியனும் நிதிஏற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிதியம் இதற்காக மறு காப்புறுதியொன்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 மற்றும் அதற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் ரூபா 200 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுகைகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவொன்றின் (CAPC) பரிந்துரையின் மேற்படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இம்மறு காப்புறுதியின் மொத்தப் பெறுமதி ரூபா 420 மில்லியனாக இருந்த போதிலும், நிதியம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஏனைய மறு காப்புறுதி மேவுகையொன்றுக்காக (Retrocession) நியமிக்கப்பட்ட பெறுகை அடிப்படையாகக் கொண்டு

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

இதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் நிதியத்தால் எடுக்கப்பட்டிருந்தது.

(ii) மறு காப்புறுதி மேவுகை சர்வதேச A தர நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய விளம்பரங்கள் உள்நாட்டு பத்திரிகையொன்றிலும் நிதியத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டிருந்தன.

(iii) மீள் காப்புறுதிக்காக தவணைக் கொடுப்பனவு பெறுகை செயற்பாடுகளிடமிருந்து விலகி தெரிவு செய்த கம்பனிக்காக 2016 மே 30 ஆந் திகதி அமைச்சரவையின் கீழ் மேவுகை அங்கீகாரம் மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நிதியம் செயற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த அங்கீகாரம் எடுத்த சந்தர்ப்பம் வரையிலும் அதாவது 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி வரை மேற்படி மறு காப்புறுதியாளருடன் நிதியம் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 269 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 210 ஆகக் காணப்பட்டமையால் வெற்றிடங்கள் 59 ஆக இருந்தன.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நிதியத்தை மறுசீரமைப்பதற்காக அப்போது பதவியணியில் காணப்பட்ட கூட்டுத்தொகையான 197 இனை 37 சதவீதத்தினால் அதாவது 269 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இதுவரையிலும் ஆரம்ப மட்டத்திலே காணப்பட்டன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் நிரந்தர இரண்டாம் நிலைக்குரிய (முகாமைத்துவ உதவியாளர்கள் / தொலைபேசி இயக்குனர் மற்றும் வரவேற்பு உத்தியோகத்தர்) பதவிகள் 22 மற்றும் ஆரம்ப மட்டத்திற்குரிய (அலுவலக உதவியாளர்) பதவிகள் 07 ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2016 ஆம் ஆண்டில் நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியிலான 03 மேல் மட்ட பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 13 நடுத்தர மட்ட பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நேர்முக பரீட்சை குழுவிற்காக அங்கத்தவர் நியமனம் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு 2015 திசெம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த முகாமையாளர் (பொதுக் காப்புறுதி) பதவிக்காக இதுவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 02 பதவிகளுக்காக முறையான மற்றும் வெளிப்படையாக அல்லாமல் நேர்முகப் பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தன. 2016 நவம்பர் 15 ஆந் திகதி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த இன்னுமொரு பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 05 சிரேஷ்ட நிலை வெற்றிடங்களில் உதவி பொது முகாமையாளர் பதவியொன்று 03 முகாமையாளர் பதவிகளும் உள்ளகக் கணக்காய்வு பதவியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பதவியும் இதுவரை வெற்றிடமாக காணப்பட்டமை மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பதில் கடமை அடிப்படையில் பதவிகளை நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகளில் வெற்றிடங்களுக்கு இடையே 50 பதவிகள் கணக்காய்வு திகதியான 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன.

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்**

**5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2003 ஜுன் 02 திகதி பீஈம/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்கள் 2017 நவம்பர் 01 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டுச் செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 11 சதவீதம் முதல் 239 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**5.3 முகாமைத்துவத் தகவல்கள் முறைமையின் பயன்தரு தன்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினால் Zillione Cash Book கணனி மென்பொருள் பயன்படுத்தப்பட்டு காசேடு மற்றும் வங்கி கணக்கிணக்கம் தயாரித்தல் இடம்பெற்று வந்த போதிலும் பேரேட்டுக் கணக்குகள் பேணுவதற்காகவும் இறுதி கணக்குகள் தயாரிப்பதற்காக Sage accpacc கணக்கீட்டு மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. மென்பொருட்களுக்கு இடையே தரவுகளை பரிமாற்றும் போது உள்ளக கட்டுப்பாடொன்று இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்படாததுடன் அத்தரவுகளை தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகவும் அதற்காக கணக்கு பிரிவின் பங்களிப்பு இல்லாமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக மாதாந்த வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்கும் போதும், காசேட்டில் மாத இறுதியில் உள்ள மீதிகள் மற்றும் வங்கி கணக்கிணக்கம் தயாரிக்கும் போது தயாரிக்கப்பட்டிருந்த காசேட்டின் மாதாந்த இறுதி மீதிகளுக்கும் இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) இம்மென்பொருளில் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது கடவுச் சொல் (Password) கட்டுப்பாடு மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டதால் கணக்கீட்டு முறைமைக்கு எந்தவொரு உத்தியோகத்தருக்கு நுழையும் ஆபத்தொன்று காணப்பட்டது.

(இ) தனியார் கணக்காய்வுக் கம்பனி ஒன்றிற்கு ரூபா 1,150,000 தொகை செலுத்தி 2016 மே முதல் ஜுன் வரையான காலப்பகுதிக்காக நிதியத்தில் முறைமைக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு அக்ரஹார பிரிவின் தரவு முறைமையில் உள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) காசோலை இலக்கங்களை காசேட்டிற்கு உட்படுத்துதல் சரியாக செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்படவில்லை. |
| | (iii) மாதாந்த மற்றும் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சில செலவினங்கள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை |
| | (iv) சில்லறைக் காசேட்டு மீதிகள் மற்றும் பௌதீக மீதிகளுக்கு இடையே முரண்கள் காணப்பட்டமை, சில்லறைக் காசேட்டு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்படாமை, மற்றும் அங்கீகரிக்கப்படாமை, முறையாக |

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

உறுதிச்சீட்டுக்கள் இலக்கமிடப்படாமை.

(v) நிதியத்தின் SRCC & TR பிரிவிற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படாமை.

(vi) இடர் கடன் பதிவேடொன்று முறையாக பராமரிக்கப்படாமை.

(vii) தேவைப்பாட்டின் பிரகாரம் சரியான மதிப்பீடொன்று தயாரித்து முற்பணம் வழங்காமை

(viii) நாட்குறிப்பு பதிவுகள் இடும் போது நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாமை மற்றும் Sage Accpac நாளதுவரையாக்கப்பட்ட இரட்டை பதிவின் அச்சு பிரதியொன்று எடுக்கப்பட்டு அது தயாரிக்கப்படல், பரீசித்தல், அங்கீகரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் கையொப்பமிடா திருந்த சந்தர்ப்பங்கள் மாத்திரம் அவதானிக்கப்பட்டது.

(ix) நிதியத்தினால் தபாலுக்கு தொடர்புபடுத்தப்பட்ட அனைத்துக் காசோலைகளும் உரிய பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்கீடு**

(i) பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனமல்லாத பிரிவின் விற்பனை பட்டியல் முன்னர் இலக்கமிடப்பட்டு முறையே கணனி மயப்படுத்தப்பட்ட முறையொன்று ஊடாக உருவாகாமையால் கணனி முறைமை யிலிருந்து பெற்றுக்கொண்ட கடன்பட்டோர் மீதிகள் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட பட்டியல் இலக்கம் மற்றும் உரிய பிரிவுகளில் பேணப்படும் பட்டியல்கள் பதிவேட்டில் குறிப்பீடப்பட்ட இலக்கங்களுக்கு இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) அனைத்து பணம் அல்லது காசோலைகள் பெறுவனவிற்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாமை.

(iii) நாட்குறிப்பு பதிவுகள் அங்கீகரிக்கும் போது வரையரைகளை (Limits) தீர்மானிக்காமை.

(iv) நாட்குறிப்பு பதிவுகள் முறையான அங்கீகாரத்துடன் கணக்கீட்டு முறைமைக்கு உள்ளடக்கப்படாமை மற்றும் அதற்குரிய சான்றுகளாக உரிய பயன்பாட்டு ஆவணங்களுக்கு தொடர்பு குறிப்பிடப்படாமை.

(இ) மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் நடைபெறாமை

நேர்முகப் பரீட்சைகளின் போது வழங்கப்படும் புள்ளிகள் முறையாக நியமனம் செய்யப்படாமை

(ஈ) கிளை முகாமைத்துவம்

(i) சொத்து முகாமைத்துவத்தில் குறைபாடுகள் காணப்படல்

(ii) தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்கும் தற்காலிக காப்புறுதி மேவுகை புத்தகங்கள் (cover note) மற்றும் அச்சு மாதிரிப் படிவங்கள் தொடர்பாக முறையான ஏடுகள் காணப்படாமை.

(iii) அவை காணாமல் போனமைக்குரிய முறையான சான்றுகள் காணப்படாமை

(iv) தற்காலிக காப்புறுதி மேவுகை புத்தகங்கள் (cover note) மற்றும் பாவனை முறையற்று இருத்தல்

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(v) உடைந்த பொருட்கள் மற்றும் காப்புறுதி அட்டைகளுக்குரிய முறையான பதிவேடொன்று இல்லாமை.

(vi) சில்லறைக் காசேடு கட்டுப்பாடு தொடர்பான சிக்கல் காணப்படல்

(vii) வருகை, வெளியேறல், லீவு மற்றும் வெளியேறிச் செல்லல் முறையற்ற இருத்தல்

(viii) உப அலுவலகங்களில் சேகரிக்கப்படும் பணம் வங்கியில் வைப்புச் செய்வதில் தாமதம் காணப்படல்

(ix) அக்ரஹார விண்ணப்பங்கள் ஸ்கேன் (Scan) செய்யும் போது விண்ணப்பங்கள் முறையாக கையேற்றல் மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் முறையாக வெளியேற்றப்படாமை

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினீ விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதி நிலைமை பற்றிய அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்புகள் | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| அருவச் சொத்துக்கள் | 7 | - | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் | 8 | 43,058,543 | 34,125,797 |
| நிதிச் சொத்துக்கள் | 9 | 11,187,844,373 | 10,388,972,726 |
| மீள்காப்பீடு பெறத்தக்கவை | | 5,528,802,851 | - |
| பெறவேண்டிய கட்டுப்பணம் | 10 | 1,340,840,446 | 1,060,898,025 |
| மென் கடன்கள் | 11 | 67,081,271 | 129,244,611 |
| ஏனைய நிதிசாராச் சொத்துக்கள் | 12 | 159,891,434 | 32,307,438 |
| பிற்போடப்பட்ட தரகு | 13 | 482,908,910 | 421,132,953 |
| வங்கியிலும் கையிலுமுள்ள காசு | 14 | 705,205,727 | 166,785,332 |
| மொத்த சொத்துக்கள் | | 19,515,633,556 | 12,233,466,883 |
| **உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | | |
| பிடித்துவைத்த உழைப்புகள் | | 7,831,705,609 | 8,744,382,870 |
| ஏனைய உரிமைப்பங்கின் கூறு | | (266,847,481) | (88,871,109) |
| மொத்த உரிமைப்பங்கு | | 7,564,858,128 | 8,655,511,761 |
| **பொறுப்புகள்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் | 18 | 9,795,236,509 | 3,257,914,116 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | 19 | 15,090,870 | 16,458,008 |
| ஏனைய பொறுப்புகள் | 15 | 1,865,533,436 | 303,582,998 |
| வங்கி மேலதிகப் பற்று | 14 | 274,914,611 | - |
| மொத்தப் பொறுப்புகள் | | 11,950,775,427 | 3,577,955,122 |
| மொத்த உரிமைமுதலும் பொறுப்புகளும் | | 19,515,633,555 | 12,233,466,883 |

இந்த நிதியத்தின் நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றது என்பதை சான்றுபடுத்துகின்றேன்.

நிதி அதிகாரி

77 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இந்நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உள்ளடக்குகின்றன. நிதிக் கூற்றுகளை தயாரித்து முன்வைப்பதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபையே கொண்டுள்ளது. இந்த நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளன.

பணிப்பாளர்

பணிப்பாளர்

2017 நவம்பர் 01
கொழும்பு

# விரிவான வருமான அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்புகள் | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 1 | 6,813,757,955 | 5,062,685,701 |
| அக்ரஹாரவிற்காக கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 1 | 2,004,436,602 | 1,636,567,419 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதிக் கட்டணம் | | 1,511,302,032 | 1,259,134,207 |
| விட்டுக்கொடுக்கப்பட்ட கட்டுப்பணம் | | (760,552,873) | - |
| தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | | **9,568,943,716** | **7,958,387,326** |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டின் தேறிய மாற்றம் | | (718,437,265) | (26,901,647) |
| தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம் | | **8,850,506,451** | **7,931,485,679** |
| | | | |
| ஏனைய தொழிற்பாடுகளில் இருந்தான வருமானம் | | | |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 2 | 4,704,803 | 6,596,760 |
| முதலீடுகளும் ஏனைய வருமானமும் | 3 | 983,984,377 | 849,786,808 |
| ஏனைய வருமானம் | | **988,689,180** | **856,383,568** |
| | | | |
| வழங்கப்பட்ட மொத்த அனுகூலங்களும் கோரிக்கைகளும் | 4 | (5,761,417,865) | (3,227,140,119) |
| மறுகாப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் உரிமைக் கோரிக்கைகள் | 4 | 6,868,180,969 | - |
| ஒப்பந்தப் பொறுப்புக்களில் மொத்த மாற்றம் | 4 | (6,649,917,802) | 1,562,913 |
| மறுகாப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்தப் பொறுப்புக்களில் மாற்றம் | 4 | - | - |
| தேறிய நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும் | | **(5,543,154,699)** | **(3,225,577,206)** |
| | | | |
| எழுத்துறுதி மற்றும் கொள்ளல் கிரயம் (மீள்காப்புறுதி உள்ளடங்களாக) | 5 | (1,068,320,881) | (946,632,594) |
| | | | |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | 6 | (387,968,196) | (224,939,681) |
| | | | |
| மொத்த நன்மைகள், உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஏனைய செலவினங்கள் | | **(6,999,443,776)** | **(4,397,149,482)** |
| வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்) | | **2,839,751,855** | **4,390,719,765** |
| வருமான வரிச் செலவினம் | | - | (86,822,200) |
| ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்) | | **2,839,751,855** | **4,303,897,565** |
| | | | |
| ஏனைய விரிவான வருமானம் | | | |
| நிதி சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | (182,717,265) | (261,686,342) |
| பணிக்கொடை மதிப்பீட்டில் உண்மையான இலாபம் | | 4,740,893 | |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி | | **(177,976,372)** | **(261,686,342)** |
| மொத்த விரிவான வருமானம் | | **2,661,775,484** | **4,041,637,990** |

# உரிமைப் பங்கு மாற்றக் கூற்று

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | பிடித்து வைத்த உழைப்புக்கள் ரூபா | நிதிச் சொத்துக்கள் விற்பனை மூலம் கிடைக்கக் கூடியது ரூபா | மொத்த உரிமைப்பங்கு ரூபா |
|---|---|---|---|
| 2013 டிசம்பர் 31ஆம் திகதிலுள்ளவாறு மீதி | **6,949,244,214** | **17,624,148** | **6,966,868,362** |
| ஆண்டுக்கான இலாபம் | 4,582,655,586 | - | 4,582,655,586 |
| ஏனைய விரிவான வருமானம் | | | |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 155,191,084 | 155,191,084 |
| மோட்டார் வாகனத் திரட்டியத் தேய்வுச் சீராக்கம் | 14,558,589 | - | 14,558,589 |
| மீள்காப்புறுதி திணைக்களத்திலிருந்து இலாப தரகு மற்றும் மீட்கத்தக்க மீள் எழுதல் | 12,287,375 | - | 12,287,375 |
| மீள் காப்புறுதி கட்டுப்பணத் திருத்தம் மற்றும் வேலை நிறுத்தம் கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் கொடுப்பனவுகளில் எடுக்கப்பட்டது | (10,268,621) | - | (10,268,621) |
| 2013ம் ஆண்டுக்கு பிரயோகிக்கக்கூடிய தேய்வு | (511,780) | - | (511,780) |
| SLIPS மீள் திருத்தம் | 2,055,047 | - | 2,055,047 |
| ஊ.ந.நிதியம் மற்றும் முத்திரைத் தீர்வை திருத்தம் | 199,305 | - | 199,305 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (4,000,000,000) | - | (4,000,000,000) |
| 2014 டிசம்பர் 31 இல் மீதி | **7,550,219,714** | **172,815,232** | **7,723,034,946** |
| ஆண்டுக்கான இலாபம் | 4,303,897,565 | - | 4,303,897,565 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | (261,686,342) | (261,686,342) |
| பிணைகள் மீதான கழிவுகள் தவணைக் கட்டணக் கடன் கரைப்பு | 50,321,582 | - | 50,321,582 |
| மீள்காப்புறுதி விலைப்பட்டியல் மற்றும் கடன் பத்திரங்களின் இரத்து | (92,421,039) | - | (92,421,039) |
| வருடாந்த கட்டணம் மற்றும் செஸ் | (24,370,817) | - | (24,370,817) |
| மீள்காப்புறுதி நிலுவையின் திருத்தம் | (60,170,679) | - | (60,170,679) |
| மோட்டார் தவணைக் கட்டணத்தை பதிவழித்தல் | (1,995,673) | - | (1,995,673) |
| தேய்மானத் திருத்தம் | (583,958) | - | (583,958) |
| மோட்டார் அல்லாத தவணைக் கட்டணத் திருத்தம் | 4,668,666 | - | 4,668,666 |
| தவணைக் கட்டண மீள்கொடுப்பனவுச் சீராக்கங்கள் | 2,574,100 | - | 2,574,100 |
| PPE திரட்டிய தேய்மானச் சீராக்கம் | 11,643,799 | - | 11,643,799 |
| செலவுகள் மற்றும் ஏனையவற்றை ஈடுசெய்தல் | 599,610 | - | 599,610 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (3,000,000,000) | - | (3,000,000,000) |
| 2015 டிசம்பர் 31 இல் மீதி | **8,744,382,870** | **(88,871,109)** | **8,655,511,761** |
| ஆண்டிற்கான இலாபம் | 2,839,751,855 | - | 2,839,751,855 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | (182,717,265) | (182,717,265) |
| பணிக்கொடை மதிப்பீட்டில் உண்மையான இலாபம் | - | 4,740,893 | 4,740,893 |
| இரத்துச் செய்யப்பட்ட மீள் காப்பீட்டுக் கோரல்கள் | (34,714,833) | - | (34,714,833) |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (3,200,000,000) | - | (3,200,000,000) |
| 2012/13 க்காக செலுத்திய வருமான வரி | (578,674,926) | - | (578,674,926) |
| பிணைகள் மீதான கழிவுகள் தவணைக் கட்டணக் கடன் கரைப்பு | 47,663,316 | - | 47,663,316 |
| தேய்மானத் திருத்தம் | 2,614,431 | - | 2,614,431 |
| தவணைக் கட்டண மீள்கொடுப்பனவுச் சீராக்கங்கள் | 7,306,615 | - | 7,306,615 |
| SLIPS மோட்டார் அல்லாத திரும்பல்கள் | 22,500 | - | 22,500 |
| மோட்டார் கட்டுப்பணம் | (75,000) | - | (75,000) |
| தள்ளுபடி செய்யப்பட்ட வைப்புப் பணம் | (392,000) | - | (392,000) |
| மீள் காப்புறுதி கட்டுப்பண சீராக்கம் | 3,869,230 | - | 3,869,230 |
| வாடகை செலவுகள் | (48,450) | - | (48,450) |
| 2016 டிசம்பர் 31 இல் மீதி | **7,831,705,610** | **(266,847,481)** | **7,564,858,128** |

இந்த நிதியறிக்கையின் 77 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உள்ளடக்குகின்றன.

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாச்சல் | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | 2,839,751,855 | 4,390,719,765 |
| சீராக்கங்கள்: | | | |
| வட்டி வருமானம் | | (967,301,878) | (801,608,493) |
| தேய்மானம் | | 7,056,814 | 6,579,710 |
| தேறிய முகப் பெறுமதி மாற்றங்கள் | | (177,976,372) | (261,686,342) |
| முன்னைய வருட சீராக்கங்கள் | | (555,043,548) | (109,734,409) |
| நிலையான சொத்துக்களின் அகற்றல் மீதான (இலாபம்)/நட்டம் | | - | 1,096,675 |
| | | **1,146,486,872** | **3,225,366,907** |
| தொழிற்படு சொத்துக்களின் மாற்றம் | A | (5,998,105,224) | 80,893,698 |
| தொழிற்படு பொறுப்புகளின் மாற்றம் | B | 8,098,135,583 | 129,564,810 |
| தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல் | | 3,246,517,230 | 3,435,825,416 |
| செலுத்திய பணிக்கொடை | | (229,889) | (646,511) |
| தொழிற்படு நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | | 3,246,287,341 | 3,435,178,905 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாச்சல் | | | |
| நிதி முதலீட்டின் தேறிய கைக்கொள்ளல | | (798,871,647) | (1,283,398,847) |
| பெற்ற வட்டி | | 967,301,878 | 703,726,452 |
| மென் கடன்களின் மீள்பெறுகை | | 62,163,340 | 58,976,296 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் அகற்றல் | | - | 15,500 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கையகப்படுத்தல் | | (13,375,128) | (4,505,960) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | 217,218,443 | (525,186,559) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாச்சல் | | | |
| திரட்டுநிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | | (3,200,000,000) | (3,000,000,000) |
| நிதி நடவடிக்கைகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | (3,200,000,000) | (3,000,000,000) |
| காசும் காசுக்குச் சமனானவற்றினதும் தேறிய அதிகரிப்பு /(குறைவு) | C | 263,505,784 | (90,007,654) |
| ஆண்டின் ஆரம்பத்தில் தேறிய காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | | 166,785,332 | 256,792,986 |
| ஆண்டு இறுதியில் காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | | 430,291,116 | 166,785,332 |

காசுப் பாச்சல் அறிக்கைக்கான குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **A.** தொழிற்படு சொத்துக்களின் மாற்றம் | | |
| பிற்போடப்பட்ட தரகில் (அதிகரிப்பு)/குறைவு | (61,775,957) | (54,511,252) |
| கிடைக்க வேண்டிய மறுகாப்பீட்டுத் தவணைக் கட்டணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு | (5,528,802,851) | - |
| பெறவேண்டிய கட்டுப்பணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு | (279,942,420) | 83,361,009 |
| ஏனைய நிதி சாராச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | (127,583,996) | 52,043,941 |
| | (5,998,105,224) | 80,893,698 |
| **B.** தொழிற்படு பொறுப்புகளில் மாற்றம் | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளில் அதிகரிப்பு/(குறைவு) | 6,537,322,393 | 17,654,772 |
| ஓய்வு நன்மைக் கடப்பாடுகளில் அதிகரிப்பு/(குறைவு) | (1,137,249) | 5,740,215 |
| ஏனைய பொறுப்புகளின் அதிகரிப்பு/(குறைவு) | 1,561,950,438 | 106,169,823 |
| | 8,098,135,583 | 129,564,810 |
| **C.** காசும் காசுக்குச் சமனானவற்றினதும் அதிகரிப்பு/ (குறைவு) | | |
| ஆண்டு இறுதியில் தேறிய காசும் காசுக்குச் சமனான விடங்களும் | 430,291,116 | 166,785,332 |
| கழி: ஆண்டின் ஆரம்பத்தில் தேறிய காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | 166,785,332 | 256,792,986 |
| காசும் காசுக்கு சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 263,505,784 | (90,007,654) |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## 1.0 கூட்டிணைந்த தகவல்

### 1.1 நிறுவனத்தினை அறிக்கையிடல்

“2006 ஆம் ஆண்டின் 28ம் இலக்க மற்றும் 2007 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய திருத்தச் சட்டம் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது (“இந்நிதியம்) உருவாக்கப்பட்டு, இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது, இல.97, மருதானை வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம்முகவரியிலேயே அமைந்துள்ளது.

### 1.2 விநியோகிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதி

நிதிக்கூற்றுக்கள், பணிப்பாளர் சபையினால் 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி விநியோகிப்பதற்காக வெளியிடப்பட்டன.

### 1.3 தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும்

சபையின் தாய் நிறுவனமும், இறுதியான தாய் நிறுவனமும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

### 1.4 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இச்சபையின் பிரதான செயற்பாடுகளானவை, பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதித் தொழில் என்பவற்றை நடாத்திச் செல்லல் ஆகும். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சபையின் பிரதான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 1.5 நிதிக்கூற்றுகளுக்கான பொறுப்பு

பணிப்பாளர் சபையானது இந் நிதிக்கூற்றுகளைத் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 1.6 இணக்கக் கூற்று

வேறுவகையில் குறிப்பிடப்பட்டால் அன்றி, இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA - இலங்கை) பிரகடனம் செய்யப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு இணங்க, நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

- வருட இறுதியில் சபையின் நிலை மீதான தகவல்களை நிதி நிலைமைக்கூற்று (பக்கம் 73 ஐப் பார்க்க) வழங்குகின்றது.
- மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் சபையின் நிதியியல் செயலாற்றுகை தொடர்பான தகவல்களை இலாப அல்லது நட்ட மற்றும் விரிவான வருமானக்கூற்று (பக்கம் 74 ஐப் பார்க்க) வழங்குகின்றது.
- பங்குதாரர்களின் உரிமைப்பங்குகளில் ஏற்பட்ட அனைத்து மாற்றங்களையும் உரிமைப் பங்குகளின் மாற்றக்கூற்று (பக்கம் 75 ஐப் பார்க்க) வெளிப்படுத்துகின்றது.
- சபையின் காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றை உருவாக்கும் திறன் மற்றும் அந்த காசுப் பாச்சல் பயன்படுத்தல் தொடர்பான விபரங்களை பயன்படுத்துனர்களுக்கு காசுப் பாச்சல் கூற்று (பக்கம் 76 ஐப் பார்க்க) வழங்குகின்றது. மற்றும்,
- நிதி மற்றும் நிதியல்லா தகவல்களை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் (பக்கங்கள் 77 - 99 ஐப் பார்க்க) உள்ளடக்கியுள்ளன.

### 1.7 ஊழியர்களின் எண்ணிக்கை

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதியிலுள்ளவாறு இச்சபையின் ஊழியர் வலு 206 (2015 - 186) ஆக இருந்தது.

## 2.0 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட கொள்கைகள் குறிப்பிடப்பட்டால் அன்றி, குழுவின் இந்த நிதி அறிக்கையில் வழங்கப்பட்ட அனைத்துக் காலங்களுக்கும் தொடர்ச்சியாக பொருந்தும்.

### 2.1 தயாரிப்பு அடிப்படை

#### 2.1.1 அளவீடுகளின் அடிப்படை

முகப்பெறுமதியில் அளவிடப்படும் “விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்கள் தவிர ஏனையவை அட்டுறு அடிப்படையிலும், வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமங்களை இணைத்துக் கொள்வதற்கு முன்னர், இலங்கை நிதிப் பிரமாணங்கள் (SLFRS) 4 காப்புறுதி ஒப்பந்தங்களால் அனுமதிக்கப்பட்டபடி, தற்போதைய கணக்கியல் கொள்கைகளை சபை தொடர்கின்றது.

வங்கி அதன் நிதிநிலை அறிக்கையை பரவலாக திரவமாக்குகின்றது. நிதி அறிக்கைகளை பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு மாற்றீடு செய்யப்படவில்லை.

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் ஆகியவை ஈடுசெய்யப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கு சட்டபூர்வமாக அமுல்படுத்தப்படக்கூடிய உரிமையுடையதும் மற்றும் தேறிய அடிப்படை மீது தீர்க்கும் நோக்கத்துடன் அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களின் தேறிப்பெறுகை மற்றும் பொறுப்புகளை தீர்க்கும் தேறிய தொகை மட்டுமே நிதி நிலைமைக்கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

#### 2.1.2 தொழிற்பாட்டு மற்றும் முன்னளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை ரூபாவில் (LKR) முன்னளிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் முன்னளிக்கப்படும் சகல நிதித் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மிகக் கிட்டிய ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

#### 2.1.3 பொருண்மியமும் ஒருங்கிணைவும்

ஒவ்வொரு ஒரேமாதிரியான பொருண்மையுடைய அயிட்டங்கள் வெவ்வேறாக வெளியிடப்பட்டுள்ளது. அவை பொருண்மையுடையனவாக இல்லாதிருந்தால்லொழிய அயிட்டத்தின் தன்மை அல்லது செயற்பாடு தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2 அறிக்கையிடும் காலப்பகுதி

அறிக்கையிடும் காலப்பகுதி 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையாகும்.

பொருத்தமானவிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்துவரும் குறிப்புகளில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3 முக்கியமான கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிட்ட அளவுகளையும் பாதிக்கின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைக்குத் தேவையாகும். உண்மையான பெறுபேறுகள் இம் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக இருக்குமென நம்பப்படும் ஏனைய பல்வேறுபட்ட காரணிகள் என்பனவற்றினை மதிப்பீடுகளும், அடிப்படையான எடுகோள்களும் அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதுடன், அவற்றின் பெறுபேறுகளானவை ஏனைய மூலங்களிலிருந்து உடனடி வெளிப்படையற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டுசெல்லும் தொகையினைப் பற்றியதான தீர்வுகளை உருவாக்கும் அடிப்படையினை உருவாக்குகின்றன.

மதிப்பீடுகளும் அடிப்படையான எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படை ஒன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படும் காலப்பகுதியிலும் ஏதேனும் பாதிக்கப்படும் எதிர்காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளின் மீது கூடுதல் முக்கியமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான தர்க்க ரீதியான தீர்வுகளைப் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.3.1** காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களை மதிப்பிடுதல்
பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, அறிக்கையிடும் திகதியன்று அறிக்கையிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இறுதி உரிமைக்கோரிக்கைக் கிரயத்துக்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இறுதி உரிமைக் கோரிக்கைக் கிரயமானது நிச்சயமானதாக உருவாக்கப்படக் கூடியதாக இருப்பதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க காலப்பகுதி ஒன்று எடுக்கலாம்.

பாரியளவு உரிமைக் கோரிக்கைகளானவை ஒன்றில் இழப்பீட்டு மதிப்பீட்டாளர் (loss adjuster) மதிப்பீடுகளின் முகப் பெறுமதியில் ஒதுக்கப்படுவதன் மூலம் அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினைப் பிரதிபலிக்கும் பொருட்டு வெவ்வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. கூடுதலான சந்தர்ப்பங்களில், எதிர்கால உரிமைக்கோரிக்கை பணவீக்க வீதங்கள் அல்லது இழப்பு விகிதங்கள் தொடர்பில் வெளிப்படையான எடுகோள்கள் எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை. பதிலாக, பாவிக்கப்படும் எடுகோள்களானவை மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்ட வரலாற்று உரிமைக்கோரிக்கை அபிவிருத்தித் தரவுகளில் உட்கிடையாக உள்ளனவையாகும்.

ஈர்க்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஏற்பாடுகளின் போதுமான தன்மையினை மதிப்பிடுவதில் ஒத்த தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன கையாளப்படுகின்றன. ஒப்பந்தம் ஒன்றின் மூலம் வழங்கப்படும் காப்புறுதிச் சேவைப் பாங்கிற்கு ஈட்டப்படாத தவணைக் கட்டண கடனழிப்பானது, தவணை முறை கடனழிப்பு அடிப்படையினை விட வேறோர் அடிப்படையில் தேவையானதா என்பதை வரையறுப்பதிலும் தீர்வு தேவைப்படுத்தப்படுகின்றது.

**2.3.2** பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தின் (DAC) குறைவு
பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தின் குறைவு மீளாய்வு ஒன்று ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மேற்கொள்ப்படுகின்றது. மீளப்பெறக்கூடிய தொகையானது கொண்டு செல்லும் பெறுமதியினை விட குறைவாக இருக்கும் போது விரிவான வருமானக் கூற்றில் குறைவு நட்டம் ஒன்று இனங்காணப்படுகின்றது. மீளாய்வின் கீழ் ஆண்டுக் காலப்பகுதியில் அத்தகைய குறைவு அறிகுறியேதும் உணரப்படவில்லை.

**2.3.3** குறைவு மதிப்பீடு
ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்து ஒன்றிற்கு அல்லது காசு பிறப்பாக்கல் அலகு ஒன்றுக்கு ஏதேனும் குறைவு குறிகாட்டிகள் உள்ளனவா என்பதை சபையானது மதிப்பிடப்படுகின்றது. அத்தகைய தனிப்பட்ட சொத்தின் அல்லது காசு பிறப்பாக்கல் அலகிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்கும் மற்றும் உரிய காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பிடும் பொருட்டு ஒரு பொருத்தமான கழிவு வீதத்தினை தெரிவு செய்து கொள்வதற்கும் முகாமையினை தேவைப்படுத்தப்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவு வீதங்களைப் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் இம் மதிப்பீடானது சபையினை தேவைப்படுத்தப்படுகின்றது. ஆதலினால், அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன.

**2.3.4** பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்கான ஏற்பாடு
சபையானது சாதாரண வியாபார நடவடிக்கையில் இதற்கு எதிரான சட்ட ரீதியான உரிமைக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்கின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் வெற்றியீட்டும் ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் சாத்தியப்பாடு தொடர்பில் தீர்வுகளை முகாமையானது மேற்கொண்டுள்ளது. சாத்தியமான பொருளாதார நன்மை வெளிப் பாய்ச்சல் தொகை காணப்படுவதனால் சட்ட உரிமைக் கோரிக்கையை முடிவுறுத்ததும் காலமானது நிச்சயமற்றது. கால அளவும் கிரயமும் இறுதியாக உரிய சட்ட நியாயாதிக்கங்களிலுள்ள உரிய செய்முறையில் தங்கியுள்ளன.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, வழக்குச் செலவுகளுக்கான ஏற்பாடுகளின் மொத்த சட்டக் கோரிக்கைகளின் 15%ஐ வழங்க சபை தீர்மானித்தது.

**2.3.5** பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்
சிக்கலான வரி ஒழுங்குவிதிகள் மற்றும் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய வருமானத் தொகை மற்றும் கால அளவு என்பனவற்றின் பொருள்கோடல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. வரி நோக்கங்களுக்காக தகைமைபெறும் கொடுப்பனவுகளாகக் கருதப்படும், திரட்டு நிதியத்துக்கு மேற்கொள்ளப்படும் கணிசமானளவு பங்களிப்புக்கள் காரணமாக எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபம் ஒன்றினை உருவாக்குவதில் சாத்தியப்பாடு குறைவாக உள்ளது என்பதை முகாமை மதிப்பிடுகின்றது. ஆதலினால் பிற்போடப்பட்ட வரிக்காக எதுவித ஏற்பாடும் மேற்கொள்ளப்படுவதில்லை.

**2.3.6** ஓய்வு பெறுவனவுக்கான நன்மைக் கடப்பாடுகள் மீதான மதிப்பீடு - பணிக்கொடை
வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களுக்காக நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு, அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடு தகைமை பெற்ற ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரால் “ஊழியர் நலன்கள்□ - LKAS 19 இனால் பரிந்துரை செய்யப்பட்ட திட்டமிடப்பட்ட அலகுக் கடன் (PUC) முறைமையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது. காப்பீட்டுக் கணிப்பாளரின் மதிப்பு கழிவு விகிதம், சம்பள உயர் வீதம் மற்றும் ஊழியர்களின் எஞ்சிய சேவைக் காலப்பகுதி ஆகியவற்றின் அனுமானங்களை உள்ளடக்குகிறது. இந்தத் திட்டங்கள் நீண்டகால தன்மையுடையதாக இருப்பதனால் அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டது.

நிகர வரையறுக்கப்பட்ட பயன் பொறுப்பினுடைய மீள் மதிப்பீடு காப்பீட்டுக் கணிப்பின் இலாபங்கள் மற்றும் நட்டங்களை உள்ளடக்குவதோடு, அவை, ஏனைய விரிவான வருமானத்தில் உடனடியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் ஒரு ஊழியருக்கு பணிக்கொடை வழங்குவதற்கான கடப்பாடு அந்த ஊழியரின் 05 வருட கால தொடர்ச்சியான சேவை முடிவடைந்த போது மாத்திரமே எழுகின்றது. இந்தப் பொறுப்பிற்கு வெளியில் இருந்து நிதி அளிக்கப்பட மாட்டாது.

ஓய்வூதிய நலன் கடப்பாட்டின் பெறுமதி மீதான கணக்கியல் கொள்கை 2016 ஆம் ஆண்டு மாற்றமடைந்தது. இதுவே முதல் முறையாக "ஊழியர் நலன்கள் - LKAS 19 இனால் பரிந்துரை செய்யப்பட்ட திட்டமிடப்பட்ட அலகுக் கடன் (PUC) முறைமையைப் பயன்படுத்தி காப்பீட்டுக் கணிப்பீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டது.

இதே முறைமை 2015 ஆம் ஆண்டும் பயன்படுத்தப்பட்டது. அத்துடன், அந்தந்த ஓய்வூதிய நன்மைக்கான கடப்பாடு, பொறுப்பு மற்றும் விரிவான வருமானத்திற்கான தாக்கம் ஆகியன பின்வருமாறு பதிவு செய்யப்பட்டது.

ஓய்வூதிய நலன் கடப்பாடு 31.12.2015 இல் உள்ள நிதிநிலைமைக்கு அமைய ரூபா 573,234 இனால் குறைக்கப்படும். அத்துடன், 2015 ஆம் ஆண்டில் விரிவான வருமானத்தில் இருந்து ஓய்வூதிய நலன் தொடர்பான செலவுகள் ரூபா 573,234 ஆல் குறைக்கப்பட்டது. ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் தொடர்பான நகர்வுகள் நிதிநிலைமையின் 19வது குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**2.3.7** கருதப்படும் வரி வரவு (நிறுத்திவைத்தல் வரி)

வருங்கால வரி விதிக்கக்கூடிய இலாபத்திற்கு எதிரீடு செயயக்கூடிய செலுத்தப்பட்ட கருதப்பட்ட வரிக் கொடுப்பனவுத் தகைமை மதிப்பீட்டை சபை தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், அண்மைக்காலத்தில் கொடுப்பனவு செய்த கருதப்பட்ட வரியை வங்கி பயன்படுத்தி இலாப மற்றும் நட்டக் கணக்கில் கருதப்பட்ட வரி வரவு அறவிடப்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் போதியளவு வரிவிதிக்கக்கூடிய இலாபம் காணப்படுகின்றதுடன், சபையானது அவ்வாறான கருதப்பட்ட வரிகளை நீக்குவதற்கான கோரல்கள் மற்றும் மீள் எழுதல்களை மேற்கொள்ளும்.

**2.3.8** தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

சபையின் முகாமையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றல் மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தினைத் தொடர்வதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதிலும் திருப்தி கண்டுள்ளது. மேலும், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றலின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை விளைவிக்கக்கூடிய ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளைப் பற்றி முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது கூடுதல் முக்கியமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான மதிப்பீடு, நிச்சயமற்ற தன்மை மற்றும் தர்க்க ரீதியான தீர்வுகளின் குறிப்பிடத்தக்க துறைகள் பற்றிய தகவல்கள் பின்வருவனவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.4 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

**2.4.1** அருவச் சொத்துக்கள்

வெவ்வேறாகக் கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை ஆரம்ப அடையாளங்காணல் (recognition) தொடர்பில் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அடையாளங்காணலைத் தொடர்ந்து அருவச் சொத்துக்களானவை ஏதேனும் திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. அருவச் சொத்து குறைக்கப்படலாம் என்னும் குறிகாட்டி காணப்படும் போதெல்லாம் அருவச் சொத்துக்களானவை பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்திற்கு கடனழிவு செய்யப்பட்டு குறைவுக்காக மதிப்பிடப்படுகின்றன. அருவச் சொத்து ஒன்றுக்கான கடனழிவுக் காலப்பகுதி மற்றும் கடனழிவு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்துடன் ஒன்றிணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கிலான மாற்றங்களானவை கடனழிவுக் காலப்பகுதி அல்லது முறையினைப் பொருத்தமுடையதாக மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்களாக கருதப்படுகின்றன. அருவச் சொத்துக்கள் மீதான கடனழிவுச் செலவானது அருவச் சொத்தின் தொழிற்பாட்டுக்கு ஒத்தாக செலவு வகுதியில் வருமானக் கூற்றில் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அருவச் சொத்து ஒன்றின் அடையாளம் நீக்கலிலிருந்து (Derecognition) எழும் இலாபங்கள் அல்லது நட்டங்களானவை தேறிய அகற்றல் வருவாய்களுக்கும் சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்பட்டு சொத்தானது அடையாளம் நீக்கப்படும் போது வருமானக் கூற்றில் அடையாளங் காணப்படுகின்றன.

சபையினால் கைக்கொள்ளப்பட்ட மென்பொருள் செலவானது திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயமாக குறிப்பிடப்படுகின்றது.

கணனி மென்பொருள் - கடன்தீர்ப்பு 4 வருடங்களுக்கு மேல்

**2.4.2** ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஒரு வருடத்திற்கு மேல் பயன்படுத்தப்பட எதிர்பார்க்கப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன அருவமல்லாச் சொத்துக்களாகும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கொள்விலையானது அது பயன்படுத்தப்படும் நோக்கத்திற்கு தொழிற்படும் நிலைக்கு சொத்துக்களை கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளுடன் சேர்த்துப் பதிவுசெய்யப்படும்.

**2.4.3** பெறுமானத் தேய்வு

சபையானது சொத்து பயன்படுத்துகைக்கு கிடைக்கப் பெறும் மாதத்தில் இருந்து சொத்து அகற்றப்படும் மாதம் வரைக்குமான காலத்திற்கு தேய்வினை வழங்குகின்றது. சகல ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பனவற்றினதும் கிரயத்தின் பேரில் நேர்கோட்டு முறையினைப் பாவிப்பதன் மூலம் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் மூலம் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு அத்தொகையினைப் பதிவழிப்பதற்கென பெறுமானத் தேய்வேற்பாடு பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 வருடங்களுக்கு மேல் |
| தளபாடமும் பொருத்துகளும் | 13.33 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணங்கள் | 13.33 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு முறை என்பன மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமுடையதாயின் சீராக்கப்படும்.

பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு இன்னமும் பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஆரம்பக் கிரயமானது குறிப்பு 8 இல் 88ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**2.4.4** நிதி ஆவணங்கள்

சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும்போது அதன் நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்களை இனங்கண்டு கொள்கின்றது. நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் (Fair value) அளவிடப்படுகின்றன. நிதிச் சொத்து ஒன்றின் அல்லது பொறுப்பு ஒன்றின் (இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தவிர) கொள்ளல் அல்லது வழங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் கிரயங்களானவை ஆரம்ப இனங்காணலின் போது பொருத்தமுடையதாக நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் உண்மைப் பெறுமதியுடன் சேர்க்க அல்லது அதிலிருந்து கழிக்கப்படும். இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் கிரயங்களானவை வருமானக் கூற்றில் உடனடியாக இணங்காணப்படும். சபையானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருத்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை முன்னளிக்கப்படும்.

நிதிச் சொத்துக்கள்

**(a)** ஆரம்ப இனங்காணலும் அளவீடுகளும்

கடன்களும் வருமதிகளும் எத்திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத்திகதியிலேயே சபையானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. சபையானது, ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது விடயம் ஒன்றுக்காக நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பொன்றானது அதன் கொள்ளல் அல்லது வழங்கலுடன் நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.

ஒரு நிதிச் சொத்தானது ஆரம்பத்தில் பின்வரும் வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றது:

- இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதி (FVTPL')
- விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) நிதிச் சொத்துக்கள்
- கடன்களும் வருமதிகளும் (L & R') மற்றும்
- பொருத்தமுடையதாக முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM)

சபையானது ஆரம்ப இனங்காணலில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

எந்நோக்கத்திற்காக முதலீடுகள் கொள்ளல் செய்யப்படுகின்றதோ அல்லது ஆரம்பிக்கப்படுகின்றதோ (அதாவது, உள்நோக்கம்) அந்நோக்கத்தில் வகைப்பாடு தங்கியிருப்பதுடன் சபையின் ஆற்றலினையும் அடிப்படையாகக் கொண்டது. குழு முதலீட்டுத் தந்திரோபாயமானது உண்மைப் பெறுமதி அடிப்படையில் நிதி முதலீடுகளை முகாமை செய்துகொள்வதற்காக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலுள்ளவாறு நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படும். உரியவை முனைப்பற்றதாக முகாமை செய்யப்படும் போது அத்துடன்/அல்லது கடனழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் போது விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) மற்றும் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் (HTM) வகுதிகள் பயன்படுத்தப்படும்.

ஒழுங்குவிதி அல்லது கூட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட கால அட்டவணைகள் சந்தையில் சொத்துக்களின் வழங்கலைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளானவை தீர்ப்பனவுத் திகதியில் அடையாளங் காணப்படுகின்றன. அதாவது, நிதிச் சொத்தின் விற்பனை / கொள்வனவுக்காக சபையானது பணத்தினைப் பெற்றுக்கொள்ளும் / தீர்ப்பனவு செய்யும் திகதியாகும். எனினும். விலைக்கூறப்பட்ட உரிமைமுதல் மற்றும் கூட்டுரிமைக் கடன் என்பவற்றில் முதலீட்டுக்கு இது வரும் போது சொத்தினை இனங்காண்பதற்கு /இனங்காணலை இரத்துச் செய்வதற்கு கொடுக்கல் வாங்கல் திகதி (அதாவது, வியாபாரத் திகதி) பயன்படுத்தப்படுகின்றது. முதலீடு கிரயத்தில் காட்டப்பட்டுள்ளது.

சபையின் ஏற்கனவேயுள்ள நிதிச் சொத்துக்களின் வகைகள் மற்றும் அவற்றின் வகைப்பாடு என்பன கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| வகுதி | நிதிச் சொத்து |
|---|---|
| இலாப அல்லது நட்டத்தின் ஊடான முகப்பெறுமதி | இல்லை |
| விற்பனைக்காக கிடைக்கக் கூடியன (AFS) | திறைசேரி முறிகள்<br>திறைசேரி உண்டியல்கள் |
| கடன்களும் வருமதிகளும் (L & R) | REPO, மீள்எழுதப்பட்ட REPO |
| முதிர்ச்சிக்காக நிறுத்தி வைக்கப்பட்டவை. | வெளிநாட்டு நாணயம் அபிவிருத்திப் பிணையங்கள்<br>திறைசேரிப் பிணைங்கள் |

**(b)** அடுத்தபடியான அளவீடு

நிதிச் சொத்துக்களின் அடுத்தபடியான அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்பாட்டில் தங்கியுள்ளது.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் (FVTPL)

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்டவற்றையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்பதற்கான உள்நோக்கத்துடன் எடுத்துக்காட்டாக வாங்கப்பட்ட முதலீடுகளானவை வியாபாரத்திற்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலுள்ளவாறு குறித்தொதுக்கப்பட்ட முதலீடுகளிற்காக, பின்வரும் தகுதி விதிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்:

- சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அளவிடுவதிலிருந்து அல்லது ஒரு வேறுபாடான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டங்களை இனங்காண்பதிலிருந்து இன்னொரு விதத்தில் எழுதக்கூடிய ஒத்திசையாத் தீர்வின் குறித்தொதுக்கலானது இல்லாமற் செய்கின்றது அல்லது குறிப்பிடத்தக்களவிற்குக் குறைக்கின்றது, அல்லது

- ஒரு சபையினது நிதிச் சொத்துக்கள், நிதிப் பொறுப்புக்கள் அல்லது இரண்டினதும் பகுதியாக, சபையினது முதலீட்டும் தந்திரோபாயத்துக்கிணங்க முகாமை செய்யப்பட்டு அவற்றின் செயற்றிறனானது உண்மைப் பெறுமதி அடிப்படை ஒன்றில் மதிப்பிடப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக உள்ளன.

இம் முதலீடுகள் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் பதியப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலுக்கு அடுத்ததாக, அவை உண்மைப் பெறுமதியில் மீள அளவிடப்படுகின்றன. உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களானவை முழுமொத்த வருமானக் கூற்றில் உண்மைப் பெறுமதி இலாபங்கள் மற்றும் நட்டங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி “முதலீட்டு வருமானம்□ அல்லது நிதிக் கிரயம் என்பதில் வட்டியானது உரியவாறு அட்டுறுத்தப்பட்டு முன்னளிக்கப்படுகின்றது. கொடுப்பனவிற்கான உரிமை உள்வாக்கப்பட்டுள்ள போது பங்கிலாப வருமானமானது “முதலீட்டு வருமானத்தில்□ பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையானது அதன் நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான உள்நோக்கம் இன்னமும் பொருத்தமானதாகவிருப்பின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் (வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட) மதிப்பிடுகின்றது. செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உள்நோக்கம் குறிப்பிடத்தக்களவு மாற்றமுறல் போன்ற காரணங்களினால் அவற்றை வா்த்தகம் செய்வதற்கு சபையினால் இயலாத போது அரிதான சந்தா்ப்பங்களில் இந் நிதியச் சொத்துக்களை மீள வைக்கப்படுவதை சபை தேர்வு செய்யும். கடன்கள் மற்றும் வருமதிகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை அல்லது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுபவை என்பனவற்றுக்கான மீள வகைப்படுத்தலானது சொத்தின் தன்மை அடிப்படையில் தங்கியிருக்கும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகள்
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகளானவை திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி (அரசாங்க ஆவணங்கள்) என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இவ் வகுதியிலுள்ள அரசாங்க ஆவணங்களானவை முடிவில்லாக் காலப்பகுதிக்கு வைத்திருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளவையும் அத்துடன் திரவத்தன்மைத் தேவைக்கு முகங்கொடுப்பதற்கு அல்லது சந்தை நிலமையிலுள்ள மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு விற்கப்படக்கூடியவையாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னா், விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய ஒதுக்கில் ஏனைய முழுமொத்த வருமானத்தில் (OCI) இனங்காணப்பட்டுள்ள பணமாக்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்களுடன் உண்மைப் பெறுமதியில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களானவை பின்னா் அளவிடப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் வேளை ஈட்டிய வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி வட்டி வருமானமாக அறிக்கையிடப்படும். கொடுப்பனவு உரிமை உருவாக்கப்பட்டுள்ள போது, விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் போதான கடனழிவு செய்யப்பட்ட தவணைக் கட்டணங்கள் அத்துடன்/ அல்லது கழிவுகள் ஷமுதலீட்டு வருமானக் கூற்றில் இணங்காணப்படும். சொத்தானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது முதலீட்டு வருமானத்தில் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படும். சொத்தினைக் குறைப்பதற்கு வரையறுக்கப்பட்டதால் “முதலீட்டு வருமானத்தில்□ வருமானக் கூற்றில் திரண்ட நட்டமானது இனங்காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து நீக்கப்படும்.

சபையானது அதன் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசம் என்பன இன்னமும் பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதை வரையறுப்பதற்காக மதிப்பீடு செய்யும். செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உத்தேசம் குறிப்பிடத்தக்களவு மாறுதல் போன்ற காரணங்களினால் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கு சபையினால் இயலாது போகும் பட்டசத்தில் அரிதான சந்தா்ப்பங்களில் இந் நிதிச் சொத்துகளை மீள வழங்கப்படுத்தலை சபையானது தேர்வு செய்யலாம். நிதிச் சொத்தானது கடன்களினதும் வருமதிகளினதும் வரைவிலக்கணத்தைப் பூாத்தி செய்யும் போதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை இந் நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினை முகாமையானது கொண்டுள்ள போதும் கடன்கள் மற்றும் வருமதிகளது மீளவகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. முதிர்வு வரை நிதிச் சொத்தினை வைத்திருப்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசத்தினை நிறுவனமானது கொண்டுள்ள போது மட்டுமே முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதற்கான மீள் வகைப்படுத்தல் அனுமதியளிக்கப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கக்கூடிய வகுதியில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்தொன்றாக, உரிமை முதலில் இனங்காணப்பட்டுள்ள இச் சொத்தின் மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுட் காலத்திற்கு கடனழிவு செய்யப்படுகின்றது. அச் சொத்தானது பின்னா் குறைவாக இருக்குமென வரையறுக்கப்படின் அதன் பின்னா் உரிமை முதலில் பதிவு செய்யப்பட்ட தொகையானது வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படும்.

கடன்களும் வருமதிகளும்
செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். தொகுதிக் கடன் ஆவணங்களுக்கு, அத்தகைய ஆவணங்கள் பட்டியற்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயலூக்கமிக்க சந்தையொன்று காணப்படாத காரணத்தினால் இவ் வகுதியின் கீழ் இவ் ஆவணங்களை வகைப்படுத்தவதற்கும் சபையானது தீா்மானித்தது.

இம் முதலீடுகளானவை முதலீட்டுக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட கருத்திற்கொண்ட உண்மைப் பெறுமதியாக இருக்கும் கிரயத்தில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இக் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த சகல கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் முதலீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னா், குறைதலுக்கான படியினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் வருமதிகளும் அளவிடப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடா்பில் ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கல் ஏதேனும் இருப்பின் அதனைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் “முதலீட்டு வருமானத்தில்□ உள்ளடக்கப்படுகின்றது. முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடனழிவுச் செய்முறைக்கூடாக வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படும்.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

நிலுவையிலுள்ள கடன்களின் பெறுமதியானது அடிப்படையானதாக கருதப்படாததனால் ஒத்த கடன்கள் தொடர்பில் தற்போது வழங்கப்பட்டு வரும் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி எதிர்காலக் காசுப் பாய்ச்சலினைக் கழிவிடுவதன் மூலம் இடர் கடன்களின் உண்மைப் பெறுமதியானது மதிப்பிடப்படுவதில்லை.

முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் (HTM) நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்துடைய நிதிச் சொத்துக்கள் என்பன சபையானது முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் அளவிடப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் “முதலீட்டு வருமானத்தில்□ உள்ளடக்கப்படுகின்றது.

முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடனழிவுச் செய்முறைக்கூடாக வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன.

**(c)** நிதிச் சொத்துக்களின் மீள் அடையாளம் காணல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்தொன்று (அல்லது ஏற்புடையதாகும் போது, நிதிச் சொத்தொன்றின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் குழு ஒன்றின் பகுதி) இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது.

- அச்சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் காலாவதி யாகியுள்ள போது
- காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த உரிமையை மாற்றும் போது

அல்லது

- சபையானது இச் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினைத்தக்க வைத்திருக்கும் போது அல்லது “விலையினை அதிகரிக்கும் ஈடாக்கும் செய்முறை□ (pass-through) ஒழுங்கின் கீழ் மூன்றாம் நபர் ஒருவருக்கு அடிப்படையான தாமதமின்றி பெற்றுக்கொண்ட காசுப் பாய்ச்சலினை முழுமையாகச் செலுத்தவதற்கான கடமைப்பாடு ஒன்றினை எடுகோளாகக் கொண்டிருக்கும் போது

அத்துடன் ஒன்றில்

a) சொத்தின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு சபையானது மாற்றியிருக்கும் போது அல்லது
b) சபையானது சொத்துக்களின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமாளவு மாற்றாமலோ அல்லது தக்க வைத்திராமலோவிருந்து ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றியிருக்கும் போது

சபையானது சொத்தொன்றிலிருந்தான காசுப் பர்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமையினை மாற்றியுள்ள போது அல்லது “விலையினை அதிகரிக்கும் ஈடாக்கும் செய்முறை□ (pass-through) ஒழுங்கு ஒன்றில் பங்குபற்றியுள்ள போது அத்தடன் சொத்தின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு மாற்றாமலோ அல்லது தக்க வைத்திராமலோவிருந்து சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றாமலோவிருக்கும் போது சபையின் தொடர்ச்சியான சொத்து உள்வாங்கல் நீட்டிப்புக்கு சொத்தானது இனங்காணப்படுகின்றது.

மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தினை எடுக்கின்ற தொடர்ச்சியான உள்வாங்கலானது சொத்தின் குறைந்த ஆரம்ப கொண்டு செல்லல் தொகையிலும் மீளச் செலுத்துமாறு சபையினைக் கோரக் கூடிய கருத்திற்கொள்ளப்படும் ஆகக்கூடிய தொகையிலும் அளவிடப்படுகின்றது. அச் சந்தர்ப்பத்தில் சபையும் ஒன்றிணைந்த பொறுப்பொன்றினை இனங்காண்கின்றது. சபை தக்கவைத்துள்ள உரிமைகளைளும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கும் அடிப்படை ஒன்றில், மாற்றப்பட்ட சொத்து மற்றும் ஒன்றிணைந்த பொறுப்பு என்பன அளவிடப்படுகின்றன.

**(d)** நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது. என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இச் சபையானது மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்டுள்ள ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் (நேரிட்ட “இழப்பு நிகழ்வு□ ஒன்று) விளைவாக குறைவின் யதார்த்தமான சான்று இருப்பின் அத்துடன் நம்பகரமான மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துக் கூட்டத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு தாக்கத்தினை அந்த இழப்பு நிகழ்வு கொண்டிருந்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக் கூட்டம் ஒன்று குறைவடைந்திருப்பதாகக் கருதப்படும். குறிப்பிடத்தக்க நிதிப் பிரச்சினை, வட்டி அல்லது முக்கியமான கொடுப்பனவுகளைச் செய்யாதுவிடல் அல்லது செய்யத் தவறுதல் என்பனவற்றைக் கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுவொன்று அனுபவித்துவரும் குறிகாட்டிகள், அவர்கள் வகையற்றவர்களாக மாறும் சாத்தியப்பாடு அல்லது கொடுப்பனவுகளைச் செய்யாதிருப்பதுடன் தொடர்புறும் நிலுவை மாற்றங்கள் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலில் ஓர் அளவிடக்கூடிய குறைவொன்று உள்ளது என்பதை அவதானிக்கக்கூடிய தரவு சுட்டிக்காட்டும் ஏனைய நிதி மீள்ஒழுங்கமைப்பு ஆகியவற்றை குறைவுச் சான்று உள்ளடக்கலாம்.

**(e)** நியாயப் பெறுமதி அளவீடு

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளிலும் நியாயமான மதிப்பில் விற்பனை மற்றும் நியாயமான மதிப்பு இலாபம் மற்றும் நட்டம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய நிதிக் கருவிகளை சபை ஏற்றுக்கொள்கின்றது.

நியாயமான மதிப்பு அளவிடக்கூடியமாக அல்லது அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களும் பொறுப்புகளும் நியாயமான மதிப்பு அளவீட்டுக்குள்ளாக குறைந்தபட்ட அளவிளான உள்ளீட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கும் நியாயமான மதிப்பு வரிசை முறைக்குள் வகைப்படுத்தப்படுகின்றன.

- நிலை 1 - ஒத்த சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் செயற்பாட்டு சந்தைகளில் உள்ள (சீராக்கம் செய்யாத) சந்தை விலை.
- நிலை 2 - நேரடியாக அல்லது மறைமுகமாக கண்காணிக்கக்கூடிய நியாய பெறுமதி அளவீட்டுக்கான குறைந்த மட்ட உள்ளீடு மதிப்பீட்டு தொழில்நுட்பம்.
- நிலை 3 - கண்காணிக்க முடியாத அளவீட்டு நியாய பெறுமதி அளவீட்டுக்கான குறைந்த மட்ட உள்ளீடு மதிப்பீட்டு தொழில்நுட்பம்.

| கருவி வகை | அடிப்படை நியாயப் பெறுமதி | நியாயப் பெறுமதி வரிசை மட்டம் |
|---|---|---|
| அபிவிருத்திப் பிணையங்கள் | பயனுறுதி வீதத்தைப் பயன்படுத்தும் பெறுமதி | மட்டம் 2 |
| திறைசேரி பிணையங்கள் | சந்தை வருவாயை பயன்படுத்தும் பெறுமதி | மட்டம் 1 |
| திறைசேரி உண்டியல்கள் | சந்தை வருவாயை பயன்படுத்தும் பெறுமதி | மட்டம் 1 |

நிதிப் பொறுப்புகள்

**(a)** ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

சகல நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன, அத்துடன் கடன்கள் மற்றும் கடன்படுகைகள் என்னும் பட்சத்தில் நேரடிக் காரணமான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழிக்கப்படுகின்றன

சபையினது நிதிப் பொறுப்புகளானவை வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள், காப்புறுதி சென்மதிகள் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன

**(b)** அடுத்தபடியான அளவீடு

நிதிப் பொறுப்புகளின் அடுத்தபடியான அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

கடன்களும் கடன்படுகைகளும்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியினைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன்படுகைகள் என்பன பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அடுத்தபடியாக அளவிடப்படுகின்றன. பொறுப்புகள் இனங்கானலில் இருந்து செய்யப்படும் போதும், அதேபோல பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறை கடனழிவுச் செயன்முறைக்கு ஊடாகவும் வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் இணைந்த பகுதியாகவும் இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகரண வழங்கல் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத கடனழிவானது வருமானச் சுற்றில் நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

**(c)** இனங்காணலில் இரத்துச்செய்தல்

பொறுப்பின் கீழான கடப்பாடானது, விடுவிக்கப்படும் போது, இரத்துச்செய்யப்படும் போது அல்லது கலாவதியாகும் போது நிதிப் பொறுப்பொன்று இனங்காணலிலிருந்து இரத்துச்செய்யப்படுகின்றது.

**(d)** காப்புறுதிச் சென்மதிகள்

காப்புறுதிச் சென்மதிகாளானவை, நிலுவைகளாகவிருக்கும் போதும் அத்துடன் நேரடிக் காலாண்டான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழித்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போதும் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

பொறுப்பின் கீழான கடப்பபடானது நீக்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது காப்புறுதி சென்மதிகள் இனங்கானலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

**2.6.4** நிதி ஆவணங்களை ஈடு செய்தல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் ஈடாக்கப்பட்டு அத்துடன் இனங்காணப்பட்ட தொகையினை ஈடாக்குவதற்கு தற்போது வலுவிலுள்ள சட்ட உரிமை உள்ளதாயின், அத்துடன் தேறிய அடிப்படை ஒன்றில் தீர்பதற்கான அல்லது சொத்துக்களை பணமாக்கி ஒரே நேரத்தில் பொறுப்புக்களைத் தீர்பதற்கான உள்நோக்கம் ஒன்றும் காணப்பட்டால் மாத்திரமே நிதி நிலமைக் கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படும். சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடக்கூடியதாக இனங்காணப்பட்டவாறு ஏதேனும் கணக்கீட்டு நியமத்தினால் அல்லது பொருள்கோடல் மூலம் தேவைப்படுத்தப்பட்டாலொழிய அல்லது அனுமதிக்கப்பட்டாலொழிய வருமானமும் செலவினமும் வருமானக் கூற்றில் ஈடாக்கப்படமாட்டா.

**2.6.5** நிதிசாராச் சொத்துக்கள் குறைவடைதல்

சொத்து ஒன்று குறைவடையலாம் என்னும் குறிகாட்டியொன்று உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது மதிப்பீடுகின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான வருடாந்த குறைவடைதல் பரிசோதிப்பு தேவைப்படுத்தப்படும் போது, சபையானது சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. சொத்தொன்றின் மீளப்பெறக்கூடிய தொகையானது விற்பதற்கான கிரயங்கள் மற்றும் அதன் பாவனைப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகளின் உண்மைப் பெறுமதியிலும் அதிகமாகும் தனிப்பட்ட சொத்தொன்றுக்கான மீளப்பெறக்கூடிய தொகையானது, ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக் கூட்டங்களிலிருந்தானவற்றிலிருந்து பெருமளவு சுயாதீனமான காசு உட்பாச்சல்களை அச்சொத்து பிறப்பிக்காதிருந்தாலொழிய வரையறுக்கப்படும். சொத்தொன்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகள் அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் அதிகமாவிருக்குமிடத்து அச் சொத்தானது குறைவடைகின்றது எனக் கருதப்பட்டு அதன் மீளப் பெறக்கூடிய தொகைக்கு குறைத்து விடப்படும், பாவனைப் பெறுமதி மதிப்பீட்டில், மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாச்சல்களானவை குறித்தான ஆபத்துகளையும் பிரதிபலிக்கும் முன்-வரி கழிவு வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிடப்படுகின்றன. விற்பதற்கான கிரயங்களைக் கழித்த உண்மைப் பெறுமதியினை வரையறுப்பதில் அண்மைய சந்தை கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாகவிருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இனங்காணப்பட்ட முடியாதிருப்பின் பொருத்தமான விலைமதிப்பு முறை ஒன்று பயன்படுத்தப்படும்.

குறைவடைந்த சொத்தின் தொழிற்பாட்டுடன் ஒத்திசையும் அச்செலவின் வகுதிகளில் வருமானக்கூற்றில் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் குறைவடைதல் நட்டங்கள் இனங்காணப்படும்.

**2.6.6** பொதுக் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள்

பொதுக் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளானவை செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கை ஏற்பாட்டையும், ஈட்டப்படாத தவணைக் கட்டத்திற்கான ஏற்பாட்டையும் அத்துடன் தவணைக் கட்டண பற்றாக்குறைக்கான ஏற்பாட்டையும் உள்ளடக்குகின்றன. உள்ளாகிய ஆனால் தொடர்புபட்ட உரிமைக் கோரிக்கை கையாளல் கிரயங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய பெறுமதி மற்றும் ஏனைய அளவீடுகளுக்கான குறைவு ஆகியவற்றுடன் ஒன்று சேர்ந்து அறிக்கையிடல் திகதியில் செலுத்தப்படாத சகல உரிமைக் கோரிக்கைகளினதும் மதிப்பிடப்பட்ட இறுதிக் கிரயத்தினை செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கை ஏற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

சில உரிமைக் கோரிக்கை வகைகளின் அறிவித்தலும் தீர்ப்பனவிலும் தாமதங்கள் ஏற்பட முடியும் ஆதலால் இவற்றின் இறுதிக் கிரயத்தினை, அறிக்கையிடும் திகதியில் உறுதியாக அறிய முடியாது. பணத்தின் நேரப் பெறுமதிக்காக பொறுப்பானது கழிவிடப்படுவதில்லை. சமம்பாட்டுக்காக அல்லது பேரழிவு ஒதுக்கங்களுக்காக எவ்வித ஏற்பாடும் இனங்காணப்படுவதில்லை. உரிமைக் கோரிக்கை ஒன்றைச் செலுத்துவதற்கான கடப்பாடானது காலாவதியாகும் போது அல்லது விடுவிக்கப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் போது பொறுப்புகளானவை இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

தேறிய ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கு, பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்துக்கான (தேறிய) ஒதுக்கு, மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்கு என்பவற்றை இவ் ஏற்பாடு உள்ளடக்குகின்றது. தொழில் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க ஈட்டப்படாத தவணைக் கட்டணம், பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயம் மற்றும் மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்கு என்பன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது அதன் காலங்கடக்காத ஆபத்தினை மீளாய்வு செய்கின்றது அத்துடன் ஈட்டப்படாத தவணைக் கட்டங்களின் மீது எதிர்பார்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயங்களின் ஏதேனும் ஒட்டுமொத்த மிகையானது உள்ளதா என்பதை வரையறுக்கும் பொருட்டு SLFRS 4 இன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு பொறுப்புப் போதுமானதன்மைச் சோதனை ஒன்று ஆற்றப்படுகின்றது. உரிய பொதுக் காப்புறுதி தொழில்நுட்ப ஏற்பாடுகளுடன் தொடர்புற்ற சொத்துக்களின் மீது எழுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டு வருவாயை கணக்கில் எடுத்துக் கொண்ட பின்னர் எதிர்கால ஒப்பந்தக் காசுப் பாச்சல்களின் தற்போதைய மதிப்பீடுகளை இக் கணிப்பீடு பயன்படுத்தப்படுகின்றது. ஈட்டப்படாத தவணைக் கட்டங்களின் கொண்டு செல்லல் தொகையானது (தொடர்புபட்ட பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயங்களைக் கழித்து) பற்றாக்குறையாக உள்ளது என்பதை இம் மதிப்பீடுகள் கட்டினால் தவணைக் கட்டணப் பற்றாக்குறைக்கான ஏற்பாடு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் வருமானக் கூற்றில் பற்றாக்குறையானது இனங்காணப்படும்.

கோரிக்கைக் கடப்பாடுகள்
கடந்தகால அனுபவங்கள் மற்றும் போக்குகள் என்பவற்றின் அடிப்படையில் எதிர்கால கடப்பாடுகளின் கூடிய உண்மையான மதிப்பீட்டை உறுதிப்படுத்துவதற்காக உறப்பட்ட கோரிக்கைகள், ஆனால், அறிக்கையிடப்படாத (IBNER) மற்றும் உறப்பட்ட கோரிக்கைகள், ஆனால், போதுமான அளவில் அறிக்கையிடப்படாத (IBNER) என்பன தொடர்பான ஏற்பாடுகள் காப்பீட்டுக் கணிப்பீட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

உறப்பட்ட கோரிக்கைகள், ஆனால், அறிக்கையிடப்படாதவை (IBNR) தொடர்பான ஏற்பாடு முதல் முறையாக 31.12.2016 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்டது. அத்துடன், 31.12.2016 இல் உள்ளவாறான நிதிநிலைமையின் குறிப்பு 18 இல் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.6.7 மீள்காப்புறுதி
சபையானது அதன் சகல வியாபாரத்திற்குமான சாதாரண வியாபார நடவடிக்கையில் காப்புறுதி ஆபத்தினை ஒப்பளிப்புச் செய்கின்றது. மீள்காப்புறுதி சொத்தக்களானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதி செய்பவர்களிடமிருந்து மீளப்பெறக்கூடிய தொகைகளானவை மீள்காப்புறுதி செய்பவரின் கொள்கைகளுடன் இணைந்த நிலுவையிலுள்ள உரிமைக்கோரிக்கை ஏற்பாட்டுக்கு அல்லது தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கு ஒத்திசைவான விதத்தில் மதிப்பிடப்படுவதுடன் தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு இணக்கமாகவும் உள்ளன.

அறிக்கையிடும் வருடத்தின் போது குறைவுக் குறிகாட்டி ஒன்று எழும் போது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது கூடுதலாக அநேக தடவைகளில் மீள்காப்புறுதிச் சொத்துக்களானவை குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சபையானது ஒப்பந்த நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல நிலுவையிலுள்ள தொகைகளையும் பெற்றுக்கொள்ளாது என்னும் மீள்காப்புறுதிச் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றினதும், சபையானது மீள்காப்புறுதி செய்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொகைகள் மீது நம்பகரமாக அளவிடக்கூடிய தாக்கம் ஒன்றினைக் கொண்டுள்ள நிகழ்வினதும் விளைவாக அடிப்படையான சான்று இருக்கும் போது குறைவு நிகழ்கின்றது.

ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மீள்காப்புறுதி ஒழுங்குகளானவை சபையினை ஆவணதாரிகளுக்கான அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிப்பதில்லை.

மீள்காப்புறுதிப் பொறுப்புகளானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு ஒத்திசைவான விதத்தில் செலுத்த வேண்டிய தொகைகள் மதிப்பிடப்படுகின்றன.

தவணைக் கட்டணங்களும் உரிமைக் கோரிக்கைகளும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மற்றும் பொறுப்பேற்க்கப்பட்ட மீள்காப்புறுதி இரண்டிற்காகவும் மொத்த அடிப்படை ஒன்றில் முன்னளிக்கப்படுகின்றன.

ஒப்பந்த உரிமைகளானவை காலாவதியாகி செல்லுபடியற்றதாக்கப்படும் போது அல்லது ஒப்பந்தமானது இன்னொரு தரப்புக்கு மாற்றப்படும் போது மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

### 2.6.8 காப்புறுதி வருமதிகள்
காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டுசெல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுமதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

இலங்கை காப்புறுதிச் சபை (IBSL) வெளியிட்டுள்ள தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாத பணிப்புரையின் படி, அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளும் தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கு உட்பட்டவை மற்றும் 60 நாட்களில் காலாவதி முடிந்தால் முடிக்கப்படாவிட்டலோ இரத்து செய்யப்படும்.

### 2.6.9 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்
காசுப் பாச்சல் நோக்கத்திற்காக, வங்கியிலுள்ள காசும் கையிலுள்ள காசும், தேறிய செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

**(a)2.6.11** விற்பனை வரிகள் மற்றும் தவணைக் கட்டண வரிகள்

பின்வருவன நீங்கலாக விற்பனை வரிகள் மற்றும் தவணைக் கட்டண வரிகளின் தேறிய தொகையாக வருமானங்கள், செலவினங்கள் மற்றும் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன.

- சொத்துக்கள் அல்லது சேவைகளின் கொள்வனவின் பேரில் ஏற்படும் விற்பனை அல்லது தவணைக் கட்டண வரியானது வரிவிதிப்பு அதிகார பீடத்திடமிருந்து மீளப்பெறக்கூடியதாக இல்லாதிருக்குமிடத்து அச் சந்தர்ப்பத்தில் விற்பனை வரியானது ஏற்புடையதாக சொத்துக்கொள்ளல் கிரயத்தின் பகுதியாக அல்லது செலவு விடயப் பகுதியாக இனங்காணப்படும்.
- உரிய கொடுக்கல் வாங்கலில் உள்ளக்கப்பட்ட விற்பனை அல்லது தவணைக் கட்டண வரித் தொகையுடன் வருமதிகளும் சென்மதிகளும் குறிப்பிடப்படுகின்றன.

வரி விதிப்பு அதிகாரபீடத்திடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய அல்லது அதற்கு செலுத்த வேண்டிய விற்பனை அல்லது தவணைக் கட்டண வரியின் நிலுவையாகவுள்ள தேறிய தொகைகளானவை நிதி நிலமைக் கூற்றில் வருமதிகள் அல்லது சென்மதிகளின் பகுதியாக உள்ளடக்கப்படும்.

**2.6.11** அந்நியச் செலாவணி மாற்றம் - கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள்

அந்நியச் செலவாணிகளிலான மாற்றங்களானவை கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணி வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

அந்நியச் செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணிப் பரிமாற்ற வீதத்தில் மீள்மாற்றப்படுகின்றன.

**2.6.12** ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

**(a)** வரையறுத்த நன்மைத் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடை என்பது ஒரு வரையறுத்த நன்மைத் திட்டமாகும். 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கேற்ப சபையானது பணிக்கொடையினைச் செலுத்தும் பொறுப்பிற்கு ஆளாகின்றது. அதற்கிணங்க பணிக்கொடையினைச் செலுத்துவதற்கான பொறுப்பானது தொடர்ச்சியான 5 வருட சேவைப் பூர்த்தியின் பேரில் மாத்திரமே எழுகின்றது. இப்பொறுப்பினைப் பூர்த்திசெய்யும் பொருட்டு ஏற்பாடு ஒன்று நிதிக் கூற்றுகளில் முன்கொண்டு செல்லப்படுகின்றது. புள்ளிவிபர காப்புறுதிக் கணிப்பு மதிப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியமம் 19 ஊழியர் நன்மைகள் என்பதற்கமைய பணிக்கொடைப் பொறுப்பு கணிப்பிடப்படுவதில்லை.

**(b)** வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

உரிய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒத்திசைவாக ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்கும் ஊழியர்கள் தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் ஒரு வரையறுத்த வீதத்தினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கும் பங்களிப்பு செய்கின்றது.

**2.6.13** ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரத பொறுப்புக்கள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக தற்கால கடப்பாடு ஒன்றினை (சட்ட அல்லது உட்கிடையான) சபையானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அத்துடன், பொருளாதார நலன்கள் இணைந்த வளங்களின் வெளிப்பாச்சலானது இக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், ஒரு நம்பகரமான மதிப்பீடானது கடப்பாட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட முடியும். சபையானது ஏற்பாடொன்றின் சிலவற்றை அல்லது சகலதையும் மீளளிக்கப்பட எதிர்பார்க்குமிடத்து மீளளிப்பானது மெள்நிகராக நிச்சயமாக இருக்கும் போது மட்டுமே தனியான சொத்தொன்றாக மீளளிப்பு இனங்காணப்படும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட செலவினமானது ஏதேனும் தேறிய மீளளிப்பு வருமானக் கூற்றில் முன்னளிக்கப்படும். பணத்தின் நேரப் பெறுமதியின் விளைவானது அடிப்படையானதாகவிருப்பின் பொருத்தமானவிடத்து, பொறுப்புக் குறித்தான ஆபத்துக்களைப் பிரதிபலிக்கும் நிகழ்கால முன் வரி வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவிடப்படுகினறன. கழிவிடல் பயன்படுத்தப்படுமிடத்து காலம் முன்நோக்கிச் செல்வதன் காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது நிதிக் கிரயம் ஒன்றாக இனங்காணப்படுகின்றது.

வளங்களின் வெளிப்பாச்சலானது குறைவாகவே நிகழும் சந்தர்ப்பம் இருந்தாலொழிய சகல எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுகளில் ஒரு குறிப்பாக வெளிப்படுத்தப்படும்.

## 2.7 வருமான இனங்காணல்

**2.7.1** மொத்த தவணைக் கட்டணம்

கணக்கீட்டுக் காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட முழுக் காப்பீட்டுக் காலப்பகுதிக்கும் வருமதியாகவுள்ள மொத்த தவணைக் கட்டணங்களை மொத்த காப்புறுதி உழைப்புத் தவணைக் கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. அவை ஒப்பந்த ஆவணம் அனுமதிக்கப்பட்ட திகதியில் இனங்காணப்படுகின்றன. முன்னைய கணக்கீட்டுக் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட வியாபாரம் தொடர்பில் வருமதியாகவுள்ள தவணைக் கட்டணங்களுக்காக இக் கணக்கீட்டுக் காலப்பகுதியில் எழுகின்ற ஏதேனும் சீராக்கங்களை தவணைக் கட்டணங்கள் உள்ளடக்கும்.

அறிக்கையிடல் திகதியின் பின்னரான ஆபத்துக் காலப்பகுதிகளுடன் தொடர்புறும் வருடம் ஒன்றில் உழைக்கப்பட்ட தவணைக் கட்டண விகிதாசாரமாக ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் உள்ளன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நடைமுறைகளுக்கு ஒத்திசைவாக 365 ஆம் அடிப்படை 1/24 ஆம் அடிப்படை அல்லது மொத்த தவணைக் கட்டணங்கள் மீதான 35% அடிப்படை ஆகியவற்றில் ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்படுகின்றன. அடுத்துவரும் காலப்பகுதிகளுக்கு உரித்தான விகிதாசாரமானது ஈட்டப்படாத தவணைக் கட்டணங்களிற்கான ஏற்பாடொன்றாக பிற்போடப்படும்.

**2.7.2** கட்டணங்களும் ஏனைய வருமானமும்

ஒப்பந்த ஆவண நிர்வாக சேவைகள், ஒப்பந்த ஆவணக் கட்டணங்கள் மற்றும் ஏனைய ஒப்பந்தக் கட்டணங்கள் ஆகியவற்றுக்காக காப்புறுதி ஒப்பந்த ஆவணதாரிகளிடமிருந்து அறவீடு செய்யப்படுகின்றது. இக்கட்டணங்களானவை உழைக்கப்பட்ட அடிப்படையில் வருமானமாக (ஏனைய வருமானம்) இனங்காணப்படுகின்றன.

**2.7.3** வட்டி வருமானம்

வட்டி வருமானமானது அட்டுறுவதால் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டு பயனறுதி வாய்ந்த் வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**2.8** நன்மைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் செலவின இனங்காணல்

**2.8.1** மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும்

ஆண்டுக் காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட சகல உரிமைக் கோரிக்கைகளையும், உரிமைக் கோரிக்கைகளைச் செய்முறைப்படுத்தி தீர்ப்பதுடன் நேரடியாகத் தொடர்புற்ற தொடர்புபடும் உள்ளக மற்றும் வெளியக உரிமைக் கோரிக்கை கையாளல் செலவுகளையும், எஞ்சிய பெறுமதிக்கான குறைவு ஒன்றையும் மற்றும் ஏனைய அறவீடுகள், மற்றும் முன்னைய வருடங்களிலிலருந்து வரவேண்டிய உரிமைக் கோரிக்கைகளுக்கான ஏதேனும் சீராக்கங்களையும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகள் உள்ளடக்குகின்றன.

**2.8.2** செலவின இனங்காணல்

சபையினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபரகணங்களை பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினமும் தேறிய மிகையினை அடையும் வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

**2.9** ஒப்பீட்டுத் தரவுகள்

இந்த நிதிக் கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு நிதித் தகவல்களானவை நிகழ் வருடக் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முன்னளிப்புகளுடன் ஒத்திசைவாக இருக்குமாறு மீள எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**2.10** மூலதன ஈடுபாடு

ஐந்தொகை திகதிலுள்ளவாறு எவ்வித மூலதன ஈடுபாடும் இல்லை.

**2.11** காசுப் பாச்சல் கூற்று

“மறைமுக முறையினை□ பாவித்து காசுப் பாச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

**2.12** தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

நிதிக் கூற்றுகளின் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திணைக்களங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தவிர தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் எவையுமில்லை.

**2.13** ஐந்தொகைக்கு பின்னரான நிகழ்வுகள்

சகல அடிப்படையான ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டதுடன் நிதிக் கூற்றுகளுக்கான உரிய குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

**2.14** எதிர்பாராத நிகழ்வுகள்

சபையின் அபிப்பிராயத்தில், சாதாரண வியாபார தொடர் செயற்பாட்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு எதிராக தற்போதுள்ள வழக்கானது அறிக்கையிடப்பட்ட நிதிப் பேறுபேறுகளிலோ அல்லது நிதியத்தின் எதிர்காலச் செயற்பாட்டிலோ முக்கியமான தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்காது.

**2.15** வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்கள்

பின்வரும் நியமங்கள் 2016 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக இன்னமும் செயல்வலுவுக்கு வராததுடன், சபையின் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்டிருக்கப்படவில்லை. இந் நியமங்கள் அவற்றின் செல்வலுத் திகதிகளிலிருந்து நிதிக் கூற்றுகளில் நிதித் தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்க முடியும்.

SLFRS 9 - நிதி ஆவணங்கள். வகைப்படுத்தலும் அளவீடும்

வெளியிடப்பட்டவாறு SLFRS 9 ஆனது LKAS 39 இன் பதிலீடுமாக முதலாவது பணிக் கட்டத்தினைப் பிரதிபலிப்பதுடன் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கு ஏற்புடையதாகின்றது.

இந்த நியமமானது 2018 ஜனவரி 01ம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்தக் காலப்பகுதிக்கு பயனுறுதிபெறும்.

இலங்கை நிதியியல் நியமங்கள் 9 இன் இணங்கல் சபையின் நிதிச் சொத்துக்களின் வகைப்பாடு மற்றும் அளவீடுகளில் விளைவைக் கொண்டிருக்கும், ஆனால், சபையின் நிதியக் கடன்களின் வகைப்பாடு மற்றும் அளவீடுகளில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்தில் இருந்தான வருமானம்.

SLFRS 15 ஆனது வருமானம் அங்கீகக்கப்படுவது எவ்வளவு, எப்போது என்பதை தீர்மானிக்க ஒரு விரிவான கட்டமைப்பை நிறுவுகின்றது.

இந்த நியமமானது 2018 ஜனவரி 01ம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்தக் காலப்பகுதிக்கு பயனுறுதிபெறும்.

SLFRS 4 இருந்து - காப்புறுதி ஒப்பந்தங்கள் இந்த நியமத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன, காப்புறுதி கொடுக்கல் வாங்கல்கள் இந்த நியமத்திலிருந்து எந்தவொரு குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை.

## 1. தேறிய தவணைக் கட்டணங்கள்

### 1.1 மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்கள்

வருடத்திற்கான தவணைக் கட்டண வருமானம் பிரதான வியாபார வகைகளாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
|---|---|---|
| உள்முக மீள்காப்புறுதி | 2,397,372,589 | 1,737,839,949 |
| SRCC & Tr தவணைக் கட்டணம் | 3,533,324,423 | 3,018,417,937 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 382,196,410 | 242,090,517 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதவை | 182,864,533 | 36,599,503 |
| பொதுக் காப்புறுதி - இடர் முகாமைத்துவம் | 300,000,000 | |
| பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான மருத்துவத் திட்டம் | 18,000,000 | 27,737,796 |
| | **6,813,757,955** | **5,062,685,701** |

### 1.2 சேகரிக்கப்பட்ட அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
